# மச்சமுனி 800



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தஞ்சை சரசுவதி மகால் வெளியீட்டு எண்: 272

# மச்சமுனி நாயனார் 800

சித்த மருத்துவக் கலைஞர்

**டாக்டர் மு. சௌரிராஜன்**

சித்த மருத்துவ ஆராய்ச்சியாளர்,

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்.

2005

விலை ரூ. 60 -00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | மச்சமுனி நாயனார் 800 |
| பதிப்பாசிரியர் | : | மு. சௌரிராஜன் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 272 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2005 |
| தாள் | : | TNPL 18.6 கி.கி. |
| நூல் அளவு | : | 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 160 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சு, (காப்பி பிரிண்டர்) |
| | : | சரசுவதி மகால் நூலகம் |
| புத்தகக்கட்டு | : | ராப்பர் கட்டு |
| பொருள் | : | மருத்துவம் |
| விலை | : | ரூ. 60-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

மச்சமுனி - 800 எனும் இந்நூல் சரசுவதி மகால் நூலகத்துத் தமிழ் ஏட்டுச் சுவடியிலிருந்து பதிப்பிக்கப் பெற்றதாகும். இதில் வேதாந்த மற்றும் தத்துவார்த்தக் கருத்துக்கள் மருத்துவ முறையில் விளக்கப் பட்டிருப்பதிலிருந்து நூலாசிரியர் மச்சமுனிவர் சிறந்த யோகப் பயிற்சி மிக்கார் என்பது புலனாகின்றது. நிலப்பாசாணம், காகப் பாசாணம், துருசுப் பாசாணம் முதலிய பாசாண வகைகளும் சுண்ண முறைகளும், "கெவுரி வீரம்" செய்முறைகளும் கெருடப் பச்சிலை பற்பம் முதலிய பஸ்ப முறைகளும், அவற்றின் தன்மைகளும் இந் நூலில் விரிவாகக் கூறப் பெற்றுள்ளன. அத்துடன் மூலிகையில் மகிழங்காய் பஸ்பம் செய்முறையும் இன்ன நோய்க்கு இன்ன இன்ன முறைப்படி பஸ்பத்தை உட்கொள்ள வேண்டும் எனவும் செய்முறையுடன் சேர்க்கை முறையும் சிறப்பாக கூறப்பட்டுள்ளன.

இந்நூலினை டாக்டர் மு. சௌரிராஜன் அவர்கள் மிகச் சிறப்பாகப் பதிப்பித்துள்ளார். இரண்டாம் பதிப்பாக தற்போது வெளிவரும் இந்நூலினை சிறப்பாக

அச்சிடுவதற்கு உறுதுணையாகத் திகழ்ந்த நிருவாக அலுவலர் திரு. இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு மேலாளர் முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோருக்கும், பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மா. வீரசண்முகமணி,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

**தஞ்சாவூர்**
**22-9-2005**

# நூன்முகம்

தமிழகத்தில் புகழ்பெற்ற பதினெண் சித்தர்களில் மச்சமுனி ஒருவர். இவர் பல பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளார். தக்க அகச்சான்றோ, புறச்சான்றோ இன்மையால் இவரது வரலாற்றை கணித்தறிதல் அரிதாய் உள்ளது. எனினும் செவிவழியாக வழங்கும் மரபான செய்திகளைக் கொண்டு அறிஞர்கள் இவரது வாழ்க்கையைப் பற்றி எழுதியுள்ளனர்.

இவர் அகத்தியர் காலத்தவர் என்றும் இரசவாத வித்தையும் ஞானமும் தேர்ந்தவரென்றும் புலவர் சரித்திர தீபகம் என்னும் நூல் கூறுகிறது.

இவர் போகரின் மாணவர் என்பதை குலால புராணத்தின் மூலமும் . அபிதான சிந்தாமணி என்னும் நூல் வாயிலாகவும் அறிய முடிகிறது.

எதையும் இலக்கியமாக்கிக் கூறும் ஆற்றல் தமிழ் மண்ணுக்கு கைவந்தகலை, புலவர்தம் மொழித்திறனைப் பாமரரும் விளங்க அமைந்தது தமிழ்.

"சித்தம் போக்கு சிவம் போக்கு" எனக் கூறுவர். இவ்வுண்மையினும் சித்தர் போக்குத் தமிழ் போக்காக அமைந்திருப்பது பதினெட்டு சித்தர்களின் நூல் வளமே நல்லதோர் சான்றாகும்.

## நூல் நுவல் பொருள்

நூற்றி இருபத்தாறு தலைப்புகளில் அரியபலகருத்துக்களைக் கூறும் எண்ணூறு பாடல்களைக் கொண்டது இந்த நூல். இதில் முப்பு, குருமுறை, நாகவைப்பு, சவுக்கார வைப்பு, கருவங்க இரசிதம், வெள்ளி இரசிதம், கட்டுகள், காரசார விபரம், உபரச விபரம், துருசு, சத்துரு மித்துரு, வெடியுப்பு, கல்லுப்பு தங்கம், சூதம்,காந்தம், வெள்ளீயம் போன்றவற்றின் சத்துரு, மித்துரு சுண்ணங்கள், கருநெல்லி கற்பம், தங்கச் சுண்ண கற்பம் போன்ற சுண்ண கற்பங்களும், களங்கு செந்தூரங்களும், பற்பங்களும், பூசை முறைகள் முதலியன பற்றிய பாடல்கள் இத்தொகுப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. பல பாடல்களின் அடிகள் சிதைந்து இருந்தவைகளையும் சரிப்படுத்தி முழுமையாக எழுதப்பட்டுள்ளன.

மேலும் மூலப்படியில் (ஏட்டில்) காணப்பட்ட பல பிழைகள் இயன்றவரையில் திருத்தப்பட்டுள்ளன. இதில் இரசவாத முறைகளும் இடம்பெற்றுள்ளன.

பாடம் பண்ணும் முறையை செய்யுள் வடிவாகவே சொல்லியுள்ள ஆற்றல் மகிழ்தற்குரியது. இருப்பினும் அதன்

வகைப்படும் முறையை வழிவழியாகவே நேரில் பயிற்சி பெறும் போதுதான் அதன் சிறப்பினை உணரமுடியும்.

மச்சமுனி 800 என்னும் இம்மருத்துவம் அந்தாதி முறையில் 800 பாக்களைக் கொண்டதாகும். இதை எழுதியவரின் பெயர் 'மச்சமுனி" என்று இந்நூலில் 107-வது செய்யுளிலும் 625-வது செய்யுளிலும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் பெயரில் கிடைத்துள்ள நூல்கள் நாற்பதுக்கு மேலாக உள்ளது என தெரிகிறது என்பதை சென்னையிலுள்ள ஆராய்ச்சி நிறுவனம் அண்மையில் வெளியிட்டுள்ள தமிழின் சித்த மருத்துவ ஏடுகள் என்னும் நூலின் மூலம் அறிய முடிகிறது. இவற்றில் மச்சமுனி நிகண்டு, மச்சமுனி சோதிடம், மச்சமுனி சரக்கு வைப்பு, மச்சமுனி நாடித் திரட்டு, மச்சமுனி எண்ணூறு, மச்சமுனி கலைஞானம் எண்ணூறு, மச்சமுனி கடைக்காண்டம் எண்ணூறு, மச்சமுனி திருமந்திரம், மச்சமுனி கரிசல் என்பன குறிப்பிடத் தக்கது. இவற்றின் மூலம் இவர் வைத்தியம், வாதம், யோகம், ஞானம் ஆகிய நான்கு துறைகளிலும் சிறந்து விளங்கியவர் என்பதை தெளிவாக அறியமுடிகிறது.

பன்னெடுங் காலத்திற்கு முன்பே இந்நான்கு துறைகளிலும் பெரும் புலமை பெற்று திகழ்ந்த மச்சமுனி உள்ளிட்ட பதினென் சித்தர்களின் தொண்டுகளை தக்க வகையில் ஆராய்ந்து "பல்வேறு மொழிகளில் நூல்கள் வெளியிடப்பட்டால் தமிழும், தமிழ்நாடும், தமிழ் மருத்துவமும் உலக அரங்கில் உயர்நிலை பெறும் என்பது உறுதியாகும்.

இதனை வெளியிட பொருளுதவி புரிந்த மைய அரசுக்கும் இதனைப் பதிப்பிக்க அனுமதி தந்த சரசுவதி மகால் முன்னாள் இயக்குநரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு. து. இரா. இராமசாமி, இ.ஆ.ப., அவர்கட்கும், தற்போதைய இயக்குநரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான திரு. மா. இராமு, இ. ஆ. ப., அவர்கட்கும் நூலக நிருவாக அலுவலர் திரு கே. பலராமன் அவர்களுக்கும் வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் திரு அ. பஞ்சநாதன், எம். ஏ., பிலிப். எஸ்சி., அவர்கட்கும் நன்முறையில் அச்சிட்டுத்தந்த சரசுவதி மகால் நூலக அச்சகத்தார் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை - 30
7 - 5 - 88

இங்ஙனம்,
டாக்டர் மு. சௌரிராஜன்,

# மச்சமுனி நாயனார் 800 அந்தாதி

## மச்சமுனி எண்ணூறு

### ஆதார பூசை

ஆதியந்தமே நிறைந்த சோதி பாதம்
அகண்ட பரி பூரணத்தி னறிவிற்கூடி
பாதியந்த முப்பொருளும் மூன்று மொன்றாய்
பரவெளியில் நின்ற பராபரையின் பாதம்
நீதியாய் வாரணத்தின் முகவன் பாதம்
நிறைந்த மலர்வாணி குருகந்தன் பாதம்
சோதியாய் நாதாக்கள் பாதம் போற்றி
சொல்லுவேன் எண்ணூற்றைச் சொல்லுவேனே.

கொண்டேனே மாறுங் குடியாக நெஞ்சினில்
கண்டேன் மலர்ப்பதங் கருத்தாய் மனந்தனில்
சென்றே னடுவினில் சித்தம் மகிழ்ந்திட
நின்றேன் புருவ நேர்நிலை சித்தமே. 2

சித்தம் பெருகி சிவமான ருத்திரன்
பத்தமதாகப் பதிவாய் நெஞ்சினில்
சுத்தமாய் நினது புருவத் திடையினில்
நித்தியங் கண்டு நின்றே னறிவிலே 3

அறிவாம் எண்பர மாதிச் சுடரொளி
நெறியாக அந்த நேர்மை யிலென்மனங்
குறியாகச் சென்று கூடிக்கசிந்து நலம்
பிரியாத வாசி பேரின்ப சித்தியே. 4

## போதமறிய

சித்திக்கு மந்த சிவமாஞ் சதாசிவ
முத்திக்கும் நல்ல மோட்ச மீதென்று
பத்திப் பிடித்து பரமாம் வெளியிலே
சுத்தம தான சுடரொளி தீபமே. 5

தீபம் தான் சிவானந்தி பூரணஞ்
சாபம் தவிர்த்து தனைபரி மந்திரஞ்
தூபம தாகி துலங்கின்ற வாசியில்
நீபத மாக நிலையறி போதமே 6

போதம தான பூரண வாசியில்
நாதம் நிறைந்து நன்மலர்ப் பூத்து
சூதம தாகி துலங்கிரே சித்து
நீதம் வளர்ந்து நின்னருள் கண்டிடே 7

கண்டது அந்தக் கருணைக் கடைக்கண்
நின்றது மெய்யறி பூரணங் கொண்டிட
அந்தக் குறியின் நடுவினிற் தீபம்
உண்டு நீபார்த்து உயிர றிவாயே. 8

வாயுடன் நாருமதி நிரைகணந் தேவி
தேயுடன் பாரிசம் தெய்வ நிலையிது
தோயவர் கண்டு துலங்கி ஐம்புலன்
சேயுடன் சிவமதில் சென்றிட முத்தியே. 9

## ஐம்புலனறிய சிவ சத்தி அறிய நிர்மல தேகம்

முற்றி வளர்ந்து மும்மலச் சத்தியில்
பற்றி நல்மனதாய் பரிபூ ரணமாய்
சிற்றம் பெருகி சிவசக்தி ரெண்டையும்
மத்த னருளால் அறிந்து நீர் பாற்றிடே. 10

பாற்றிடக் காயம் பரம வெளியிதில்
காய்த்திட பேர்க் கமல மலரினிற்
சேற்றிட வாசித் தெய்வச் சுடரினில்
நீற்றிட தேகம் நிர்மல மாகுமே. 11

நிர்மல மாகி நேர்குரு அபயம்
நன்மல ரான நாத மனோன்மணி
தன்மன தென்று தானது வாகி
உன்மன தாலே ஊரறிவீரே. 12

அறிவான போத மருளான தீபம்
நெறியான வாசி நிர்மூல வன்னி
குறியான நாதம் குருவான போதம்
பறியான தேசி பரிவான மூலமே. 13

மூலம தான முற்றி னடுவே
ஞாலம தாகி நடுநிலை பற்றி
சூலம தான சுடராதிச் சென்று
சீலம தாகி சிவமதி கொள்ளே. 14

## மூலதேக மழியாத சித்தி

சிவமா மகாரம் திருவானை பூரணநல்
தவமாய் மனதில் தானுருக் கொண்டால்
அவமான தேக மழியாச் சிவமாம்
நவமாங் கிரக நலம்பிற முத்தியே 15

முத்தி யுகார முதலான சத்தியாம்
பத்தி யிதனடுவே பதிவாய் மனதினில்
சத்திய மாக தானுருக் கொண்டார்
சித்தம் பெருகி சிவனுரு வாமே. 16

ஆமாஞ் சிவசத்தி அருளான போதகம்
நாமம் நீக்கி நலம்பெற போசிக்கில்
வாமம் பெருகி மதிவலஞ் சென்றுதான்
தாமஞ் சிவமல்லா தனிச் சிவ மில்லையே. 17

இல்லையே கள்ள மோக இருதயத்
தொல்லை களோடி சுழலும் சுழிதனில்
சல்லை களில்லைத் தான வானாகி
தில்லையில் வாழு திருநட மாமே. 18

திருநட மான சிவமான சோதியைக்
குருவிடமாக குறுகினிலைக் கண்டு
உருவிட மென்று உண்மை யதாக
மறுவிட வாச மயங்காத வாசமே. 19

## திருநடம் தீட்சை விதி சத்தி

வாச மனோன்மணி மயங்காத பூரணி
நேசம தாக நின்னருள் கண்டு
பாசம தாகப் பதியினிற் செலுத்தித்
தேகமே தெங்குஞ் செலுத்திடுந் திறமே. 20

திறமான தீட்சைச் செப்புவேன் கேளுங்
கரமான நெல்லிக் கனியது போல
சரமான மானசங்கரர் கௌரி
வரமான தீட்சை மகிழ்ந்திடக் கேளே. 21

கேளவே அம்மென்று கெடியாக மண்டலம்
நாளுடன் செபிக்கில் நமனது விலகும்
சேலுடன் தேகந் திறமது வாகும்
மானுடஞ் சித்தும் வந்திடுந் தானே. 22

தானது ரெண்டாந் தீட்சையைக் கேளு
ஆனது உம்மென்றன் புடனீயும்
வானது நோக்கி மண்டலஞ் செபித்தால்
கோனவ னருள்தாங் குடியிருப் பாமே. 23

குடியிரு மூன்றாந் தீட்சையைக் கேளு
முடியினிற் சென்று முழு மனதாக
அடியுடன் சிம்யென் றன்புடன் நீயும்
வடிவுட னன்றாய் வணங்கிடு முத்தியே. 24

முத்தியில் நாலாந் தீட்சையைக் கேளு
அத்தன் அருளை அன்புட நீயும்
உத்தமம் நமஎன்று ஒருமையாய் செபிக்கில்
சத்தியுஞ் சிவமாம் அத்தன வனாமே. 25

தானது அஞ்சாந் தீட்சையைக் கேளு
ஆனது தம்பியென் றன்புடன் நீயும்
வானுட னோக்கி மகிழ்ந்துருக் கொண்டால்
ஊனுடந் தேக முறுதியு மாமே. 26

உறுதியாம் ஆறாந் தீட்சையைக் கேளு
நெறித வறாமல் நேர்மையில் நின்று
சுருதியிலங் கென்று டனுறுக் கொண்டால்
பருதிபோலத் தேகம் பக்குவ மாமே. 27

பக்குவ மேழாந் தீட்சையைக் கேளு
தக்கும் பொருளாய்த் தாம் நாவென்றிச்
சிக்கு மிடந்தனில் செணஞ் செபித்தால்
திக்கு விசயஞ் செய்யலு மாமே. 28

செய்யவே யெட்டாந் தீட்சையைக் கேளு
பையவே பிரமப் பதியிட மாகி
கையது நெல்லிக் கனியது போல
வையகந் தன்னில் கம்மென நில்லே. 29

நில்லே நிலையில் நினைவுட னின்றால்
தொல்லை களகலச் சோதிகள் காணுந்
தில்லையில் அகலாத் தெரிசன மல்லால்
நல்லது எட்டுச் சித்துகள் நன்மையே. 30

நன்மையே ஒன்பதாந் தீட்சையைக் கேளு
உண்மையை மனமே உகந்துருக் கொண்டால்
சின்மய மான தெரிசனங் காணுந்
தன்மையி தெனவே சார்ந்திட முத்தியே. 31

சார்ந்திடும் பத்தாம் தீட்சையைக் கேளு
கூர்ந்திடு மந்தக் குறியை நீபத்தி
ஆர்ந்திடு மென்று அனுதினம் நோக்கில்
தீர்ந்திடும் பிறவி திருஉரு வாமே. 32

வாமம் பெருகித் ... ... தினடுங் குண்டத்
தாமே விடத்தனிற் தனிச்சிவ மாகி
ஊமை உருவாய் உகந்திடும் விடமதில்
காமம் விளையுங் கதிரவன் முனையே. 33

ஆதியில் நடுமனை மூதண்ட மானது
வீதிகள் ஆனாய் அணையாச் சுடரதில்
நாதம் பிறந்திட நடுமதி மாண்ட
போதிலே அனையாகி நினதுரு வாமே. 34

ஆதியும் அந்தமும் அமைந்த பிண்டமாய்
வீதி களானாய் விளங்கு நடுமனை
சோதிகள் நிறைந்த சுடரொளி ஆகி
சாதிகள் தொண்ணுத் தாறாய்ச் சமைந்ததே. 35

சமைந்து தன்னைச் சாற்றுறோங் கேளு
அமைந்த போது அதுசெய்யும் நன்மை
சுமந்திடு மாதா சுழலில் வையாமல்
நிமைந்திடும் பொழுதில் நின்பத மாமே. 36

கண்டிடுந் தேக காரண மாக
அண்டிடும் போதில் அமைந்திடும் வாழ்க்கை
சென்றிடுஞ் சீவ ரூபம தாகி
மன்றினில் சென்ற மருத்துவந் தானே. 37

மருத்துவ மென்ன வகுத்துளேங் கேளு
அகத்தினி லறிவு அண்டிடும் போதில்
வகுத்திடும் பதியும் வளர்பசு பாசந்
தொகுத்திடும் போதந் தொழில் செய்குவாரே. 38

வார்த்திடும் பசுவறிவு வளர்பதி சேரில்
சிரசினு னவயோக சிவபதி சேர்வான்
நேர்பதி யான நீர்னயங் காண்பான்
கூர்பதி வான குண்பர றாமே. 39

ஆமே பசுவின் அவனறிவு கந்தால்
நாமெனக் கோபம் நவின்றிடு மக்காள்
தாமெனக் கொடுமை சணத்தினி அழியும்
ஊமையும் போம்ஓடி ஒளிந்திடும் பாரே. 40

ஒளிந்திடும் பார்த்துன் னறிவு கந்தால்
நெளிந்திடு மறியாமை நீண்டிடும் ஆணவம்
சுளிந்திடு மாய்கை சுழல்வது தனிலே
களித்திடுஞ் சிவமுங் காரணம் யாரே. 41

காரணமான சிவமிங்கே யறிந்தோம்
நீரணி சடையோன் நிற்மதி யாலே
சீரணி தேகம் செய்வதுங் கண்டீர்
பேரணி மூன்றின் பெருமைசொல் வேனே. 42

பெருமை சிறந்திடும் பேரஞ் செலுத்தி
னுருமையின் பாகத் துண்மையைக் கேளு
சிறுமை வாசம் சென்றிடு மந்த
அறுவை வளம் பதியாம் பசுபாசமே. 43

பாசம் நிறைந்த பதியுட மூன்றையும்
வாசம தாக வகுத்தறோங் கேளு
நேசமாம் பதியும் நின்னருள் சிவமாம்
தேசமாம் பசுவுஞ் சிவனு மாமே. 44

ஆமனப் பாச மடங்கிய தேகமாம்
தாமென வளர்ந்த சமத்தைக் கேளு
சோமனைத் தரித்த சுந்தரன் சிறுமையால்
நாமவனான் நன்மை சொல் வேனே. 45

சொல்லுவேன் அந்தச் சோதியாம் பதியும்
நல்லுற வாக நயம்பட நின்று
உள்ளும் புறமும் ஒடுங்கும் பசுபாசத்
தெள்ளிமை கண்டு தெரிவது உண்மையே. 46

உண்மையாம் பசுவும் பாச மிரண்டும்
நன்மய மாக நாடும் பதிதனை
தன்மைப் பசுவும் பாசந்தனைக் காணும்
வன்மையாம் தலைவனைப் பசுவினை யறியார். 47

அறியாத பாச மறியவே வேண்டில்
நெறியான யாசான் நேர்மையைக் கண்டிடு
குறியாய் வரபதம் குணமுடன் வேண்டில்
பறியான பாசம் பசுதனை யறியாமே. 48

ஆமெனப் பாசம் பசுதனை யறியில்
தாமென பசுவுந் தலைவனைக் காணும்
நாமெனத் தலைவனை நாடியே காணில்
மனசித்து கள்ஒரு கோடி சித்தியே. 49

சித்தி களான தேக முயிரைப்
பத்தியே காணப் பதவிகள் கண்டால்
முத்தியு மில்லை மோட்சமு மில்லை
சத்தியு மில்லை தன்மையும் இல்லையே. 50

தன்மய மான தருவுஞ் செலுத்தின்
உண்மைகள் தன்னை உரைகுவோங் கேளு
நன்மை அகாரம் நடு வனக் குந்தான்
நிண்மை உகாரம் நுழைத்திடும் மண்டமே. 51

## அஞ்செழுத்து அடக்கம் கருவில் நிர்ணயம்

அண்டத்தில் விந்து அதிலோங் காரமாய்
கண்டத்தில் நின்ற கருணை அறிந்திலர்
பிண்டத்தில் மூன்று பெருமை யினாலே
நின்றுத்த அஞ்சும் நேரெழுத் தாமே. 52

ஆமே அகாரம் அமைந்திடுஞ் சிவமாஞ்
தாமே உகாரந் தன்னுயி ராகிடும்
ஓமென ஓங்கார மெழுத்து உடலாம்
நாமே வகுத்து நலமுறைத் தோமே. 53

உரைத்தோர் பாத முன்மை வெளிபட
நிறைந்த கருவில் நின்னயஞ் சொல்லுவேன்
மறைத்தோ ரேசக மலரினில் பூரக
மறைத்தது கும்பகத்தே அந்த காலனே. 54

காலான வாசி கருவான மூலம்
மேலான வன்னி மெய்யான தீபம்
பாலான அப்பு பதிவான பூரணஞ்
சேலான போதம் சிவயோக மாமே. 55

சிவமான யோகத் தீபச் சுடரொளித்
தவமாயி ருந்து தன்னிலை கண்டால்
நவமான கிரகம் நடுவான வீடு
அவமான மில்லா அனுக்கிரகம் பாரே. 56

பாரே பஞ்சாட்சர நிலையைக்
காரே அன்னிலையைக் கடைக்கண் நீர்மையால்
சேரே பிரமச் சிவபதந் தன்னிலே
கூரே வசியென் குண்டலி தன்மையே. 57

குண்டலி தன்மையாம் சிவசதுர கிரிதனில்
உண்மையாய்ச் சென்று உசந்தமேல் தீட்டினில்
நன்மையா மந்த நடுவாங் குகைதனில்
சின்மயமா கஅுகத் தீட்சைக் கண்டேனே. 58

கண்டேன வர்பதங் கருணை புரிந்திட
விண்டேன் மனந்தனில் வெகுளிக ளெல்லாங்
கொண்டே னேனங் குருவுங் குணமாய்
மனந்தனில் நின்றதோரெழுத்தும் நினைவு சொன்னாரே.

சொன்னார் கருவுஞ் சூட்ச முழுதுங்
கண்ணெ திரான காரணஞ் சொல்லி
முன்னோர்கள் செய்த திறமையுஞ் சொல்லி
விண்ணாளு மென்று விதியுரைத் தாரே. 60

உரைத்தார் வயித்தியம் உண்மையாம் வாதம்
நிறைத்தார் வசியம் நேரோடு வசிய
மறைப்புடன் சரக்கு வைக்கு முறைமையும்
வரைப்புடன் வாலை மவுனஞ் சொன்னாரே. 61

## அகத்தீசர் தெரிசனம்

சொன்னார் கையப்பா கஞ்சொல் நிறைப்பாகம்
பண்ணார் கனக்கின் பாகமுஞ் சொல்லி
விண்ணேனா மென்று வேண்டின வரமுங்
கண்ணாரச் சொல்லிக் கருமச்ச னென்றாரே. 62

மச்சேந் திரனே மனமொரு வற்காய்
நிச்சய மாகி நினவ யறிந்தால்
அச்சம் கண்ட அருள்மா முனியை
வச்சப் பொருளை மார்க்கமாய்க் கண்டிடே. 63

கண்ட பொருளைக் காரண மாக
இன்று நான் சொன்ன யிருநூறு மந்திரம்
விண்ட பொருளின் விபர மறிந்த
பேரண்டமும் பிண்டமு மறிபவர் தானே. 64

அறிவாகச் சொன்ன ஆதி நிகண்டு
நெறியாகக் கண்டு நேர்நிலை பெற்றோர்
திரிவான மலைகள் தோறும் குருவாய்
நிறைவான நிலையின் குணமறி வானே. 65

## வாலைப்பூசை

குணமா யிருநூற்று கூறினோர் சூத்திரன்தான்
தனமாகக் கண்டுத் தானறி வார்கள்
கனமான யோகங் கருது வானப்பா
இனமான சுருக்கம் ஒன்பதும் பாரே. 66

ஒன்பதுக் காதி ஒன்றாய மந்திரந்
தன்பதி வாகத் தானறி வோர்கள்
முன்பதி யான முதலாம் நடுமனை
உன் பதிவான உடனறி வாலையே. 67

வாலைதன்பூசை வகுத்து னோங் கேளு
காலமே நீயுங் கால்முகஞ் சுத்திசெய்
ஞாலமாய்த் திருநீர் நயம்படப் பூசியே
சீலமாய் நீயுஞ் சிவபதஞ் செய்யே. 68

சிவமது செய்து சிவமான விந்துவைத்
தவமது வாகத் தன்னருள் போற்றி
நவமது வாகநாள் ரவி யெனவே
பவ:மது தீர பாத்திரம் வேண்டே. 69

பாத்திரம் வேண்டிப் பரம வெளிதனில்
நேத்திர மதனால் நன்னருள் கண்டு
தோத்திரம் பண்ணிச் சுந்தரி பூசைசெய்
யாத்திரைப் பொழுதினில் வருவான் தன்வாலையே. 70

வாலையைக் கண்டு வணங்கு நீமைந்தா
காலையு மாலையுங் கருத்தாய் வணங்கினால்
ஆலையு மாகும் வறுத்தானுவந் தாள்வதும்
இலையே உலகில் தவமது வாமே. 71

## சிதம்பர பூசை

தவமாஞ் சிதம்பரஞ் சாத்துறோங் கேளு
உவமான மில்லா ஓங்கார வட்டத்துள்
சிவமான விந்துவைச் சிம்மென்று பூசைசெய்
நவமாங் கிரக நற்சிவ யோகமே. 72

யோகஞ் சிறந்த ஓம்சிவ சக்தியை
ஆகம மாக அறிந்துநீ புசித்தால்
தேகஞ் சிவமாஞ் சிவமாஞ் சிவயோகம்
பாகமாய் நின்று பணிவது சித்தியே. 73

## வைரவர் பூசை

சித்திக்கும் வயிரவஞ் செப்புவேன் கேளு
முத்திக்கும் வித்தா முதலாம் வயிரவம்
பத்திக்குள் ளாகப் பரமவெளி தனில்
புத்திக்குள்ளா மென்றுப் புனிதமாய் நின்றிடே. 74

நின்றிட வயிரவம் நேரே நிர்வாணமாய்
கண்டிடும் போதில் கருணை புரிந்திடுஞ்
சென்றிடு மந்த தெரிசினை யாகிடும்
மண்டல மதனில் அமர்ந்திட முத்தியே. 75

முத்திக் கொழுந்து முனைகொண்ட தீபம்
பத்திப் பிடிக்கும் பதிவான வாசியை
நித்தமும் நோக்கி நேர்நிலை கண்டால்
சித்தம் பெருகிச் **சிவன**வனாமே. 76

## முப்பு குருமுறை

ஆமே சிவந்தான் அறிவான பூரணந்
தாமெனக் கண்டு தன்னருள் பத்தி
வாமமாய் நின்ற மதியை அறிந்தபின்
காமனை வென்ற கதிரவன் றானே. 77

கதிரவன் முன்னே காமம் பெருகி
மதிதனைக் கண்டும் மலரது பூத்து
பதிதனில் வளர்ந்து பாருனிலைக் காரமாய்
ததிதனில் போற்றத் தன்மையின் சுண்ணமே 78

சுண்ணமாய் நின்ற சுரர் பூபதிதான்
தன்மை யினாலே சதாசிவ மானார்
நன்மை பெருகி நாத மதனில்
உண்மையினாலே உசந்திடும் நீரே. 79

நீரான உப்பு நிலையான அப்பு
சீராக கூடிச் சிவமாக நின்று
கூறாக ரெண்டு மொன்றாகக் கூடி
காராண காரங் கல்லுப்பு மாச்சே. 80

உப்பான கல்லு உவறான பூரண
மப்பான விந்து ஆதி நிறாமயம்
செப்பா யிரதம் சிவனாத விந்து
முப்பான வழலை முடிதனிற் காணும் 81

**சவுக்கார வைப்பு**

காணுமே மாலை கயிலாச பூரணம்
தோணுமே அந்த தொடுகுறி போலவே
வீணல்ல அந்த மெய்யான உப்புவை
ஆணவம் நீக்கி அந்துப்பு வேண்டுவே. 82

வேண்டுமே நாத மெய்யான விந்துவுந்
தூண்டு சேர்வான துடியான கல்லுப்பு
ஆண்டு கோள்மூன்று மறைந்திடும் விந்துவீர்
வேண்டி யரைத்து மெய்யாக வட்டிடே. 83

வட்டது போலே வடிவாயுருச் செய்து
திட்டமாய் ரவியில் செம்மையாய்க் காய்ந்தபின்
வட்ட தோட்டில் வைத்திடு பத்தெரு
திட்டமாய் நீறி சிவ குருவாமே. 84

குருவான முப்பூ கூட்டி முடித்திட
திருவான மாது செய்வது உண்டாம்
உருவாய் அறுபது மோடி வொடுங்கிடுந்
தருவான வைப்புச் சரக்குச் சொல்வேன். 85

சொல்லுவேன் சீனந் தொடுகுறி போலே
நல்லுறவா முப்பு கல்லுப்பு ரெண்டு
மல்லும் பழச்சார் ஆட்டித் தயிர்விட்டு
பல்லுற வாகப் பாண்டத்தில் மூடே. 86

மூடியே சாணி முழுதுமே பூசி
நாடியே ஆவின் பதிதனில் தாக்கி
கூடியே மண்டலங் குறிப்பாக வைத்துத்
தேடி யெடுக்கச் சீனமு மாச்சே. 87

## ஆலாத்திக் கற்பூர வைப்பு

ஆச்சடா பூரம் அதினுட வைப்பு
நீச்சடா சொல்வோம் நினைவுடன் கேளு
பேச்சடா சீனு வெடியுப்புடன் ரெண்டும்
பாச்சடா மூலம் பதிவுடன் சேரே. 88

சேர்த்தே யிடித்து பாண்ட மதிட்டு
வார்த்தே மூடி சீலைமண் செய்துக்
காத்தே மண்டலம் கருவாக பூமியில்
ஆத்திநீர் யெடுக்க ஆலாத்தி யாமே. 89

## வெண்கார சாரம்

ஆமே கல்லுப்பு நல்லுப்பு ரெண்டும்
தாமே படிகந் தானொடு அண்டம்
நாமே உளுந்தும் நல்மணி குண்டு
வாமென மறவாய் வகையுட னிடியே 90

இடித்துடன் பால் வாத்தியல் புடன்கிண்டி
தொடுத்துடன் பானையில் தோண்டியே மூடிக்
கடுத்துடன் மண்டலங் காத்துநீ வாங்க
விடுத்த வெண்காரம் விளைவிது வாமே. 91

விளைவான சாரம் விபரமது கேள்
தளைவா மதுநீர் தன்னொடு நீரும்
வளைவாம் அமுரி மதகரி நீருங்
குளைவாக ஒன்றாய்க் கூட்டிநீ சேரே. 92

சேர்ப்பது வெடியு சிவமான சுண்ணமுங்
கோர்த்ததி னோடே குமிறி யெளித்துக்
கார்த்திடு மண்டலக் கருவாய்ப் புதைத்துப்பின்
சாற்றிடு சரக்கு சாரம தாமே. 93

**துருசு**

சாரமாந் துருசு தன்னொடு முறைமைகேள்
சாரம தான் கல்லுப்புத் தண்ணீரை
வீரமா மூலம் விசையுடன் சேர்த்துப்
பாரமாந் தயிரும் பலமுட னீரே. 94

**துருசு பாசாணம்**

நீருடன் உப்பு நிலையுடன் கூட்டி
பாருடன் செப்புப் பாத்திர மதனில்
நீருடன் சென்று நினைவுடன் மண்டலம்
வாருட னெடுக்க வகையுடன் துருசே 95

துருசு பாசானஞ் சொல்வது கேளு
பருசுடன் வெடியுப்பும் பச்சையுஞ் சீனமும்
நெறியுடன் சரியாய் நேரது சூதங்
குறியுட னொன்றாய் கூட்டிநீ சேரே. 96

சேர்த்துப் பொடித்து தீயிற் கருவிடு
பார்த்துப் பன்றி நெய்யது கூட்டி
வார்த்துப் பிசைந்து வட்டிகைத் தனிலிடு
மாத்துரு வட்டிகை மயங்காதே பூரமே. 97

பூரத்தினாலே பொட்டியும் மூடியும்
வாரொப்பாய்ச் செய்து வைத்திடு மருந்ததில்
நேரோப்பா மூடி நெருட நெரித்திடப்
பாரோத்துக் கட்டிப் பாசாண மாமே. 98

ஆமே கெவுரி அதினுட முறைமைகேளு
தாமே வெடியுந் தனக்கொரு நாகமும்
வாமெனச் சூதம் வகையுடன் தாரமுஞ்
சாமே பொடித்துத் தரம்பன்றி நெய்யே. 99

நெய்யுடன் மஞ்சள் கருவுடன் கிண்ணியில்
பைய்யவே வைத்துப் பதிலாக மூடி
துய்யவே துய்யலில் சூழல் யெரித்திட
அய்யனே மஞ்சள் கெவுரியுங் காணே. 100

## கெவுரி வீரம்

காணவே வீரம் கருவுடன் சொல்வேன்
சீனமும் வெடியுஞ் சீர்ந்திடுஞ் சாரமும்
பேணவே கல்லும் பிலமான யிந்துப்பு
தோணவே துருசுங் தொகைசரி கூட்டிடே. 101

கூட்டிச் சரியிடை குருவாஞ் சமமதை
மாட்டிப் பொடித்து மாவா யதையெடு
நாட்டியே காசிக் குப்பி நடுவினில்
ஊட்டி மேற்சீலை ஒன்பது செய்திடே. 102

செய்திடு பாண்டத்தி யல்பாய் மணலிடு
கொய்திடு குப்பியை உள்ளமைத் ததன்மேல்
மொய்த்திடு மணலை மூக்குள வாயிடு
யெய்திடு மணலை யெரித்திடு சாமமே. 103

சாமமெரித்தி தன்மையாய் குளிர்ந்தபின்
ஓமெனக் குப்பியை உடைத்துக் கருவெடு
தாமெனக் கருவில் தன்னொடு ஆதியும்
வாமெனப் பாரையும் வளரன்ன பேதியே. 104

பேதிக்க ஒன்றாய்ப் பெருகப் பொடித்திடு
வாதிக் குப்பியில் வைத்துமுன் போலெரி
சாதிக்க ஆறு சாம மெரிந்தபின்
ஆதிக்க வீரம் அசையாத வீரமே. 105

வீரமே செய்ய வேண்டினார்சித்தர்கள்
பாரமென் றெண்ணிப் பாடினார் முன்பின்னாய்
சாரமாய் கொங்கணர் சாத்தினார் வீரமும்
யாருமறி யாரவன் பாடல் முத்தியே. 106

முத்தி யாமச்ச முனிபாட லெண்ணூறுஞ்
சித்தியாய்ப் பார்த்து தேறினான். கொங்கணன்
பத்தியும் முத்தியும் பார்த்துப் பதவியில்
சித்தம் பெருகிச் சிவமது கண்டானே 107

கண்ட தெண்ணூருங் கருவான மந்திரங்
கொண்டவர் மனதில் குருமொழி யாக
விண்டிடப் போகா விண்ணிடிதான் வீருஞ்
சண்டளுக் குயிராய்த்தான் மாறுவானே 108

மாளுவான் பெண்ணின் மயக்க மதனில்
வாழுவான் அவனுரு வாக மூடர்
கோளுங் குடிலங் கூறுவான் மூடர்கள்
கால்நிலை யறியா கதைகள் சொல் வானே. 109

சொல்லுவார் மூடர் துகளர மாட்டார்
நல்லவர் போல நல்மொழி கூறி
கொல்லுவாரு யிரைக் கூற்றுவன் போலே
தொல்லைகள் செய்து சுழலுவான் பாரே. 110

பார்தன் னுயிர்போல பண்புடன் பாரு
நீர்மை யற்றவர் போலிறைச்சிகள் தின்பார்
சார் புற்றுவார் பொற் சாதிப்பான் பூசையில்
நேருற்ற பூரணம் நிலையறி யார்களே. 111

நிலையா திருளில் நின்னரு ளென்று
வலையான மாய்கையில் மயங்கித் தவித்துத்
தொலையாச் சுழியைத் துருவம தென்று
கலையான வாசியைக் களிப்பான் கசடனே. 112

கசடற வைக்க நாட்டுறேன் மைந்தா
நிசமாய்ப் பிரமம் நிலையிது வென்று
கிசமாஞ் சுழியைக் கிருபையாய்க் காட்டி
திசமா மிதுவெனச் செப்புவான் பாரே. 113

பாரினில் மாந்தர் பல விதமாகக்
கூருடன் சொல்லி குலைவலி அளிப்பான்
நேருட னிலையும் நிலையுட வளியுஞ்
சீருட மூலரு வசி யானே. 114

அறியான புருவ மதில்நடு தீபங்
குறியான வாசிக் குணமது அறியான்
பறியான உருவக் காபத் துண்மை
பெருவெளி திருவான மூலஞ்செய் விதுவாமே. 115

செயலிது வான சித்திர னாடி
நயமுடன் சொல்வேன் நடுமுது கதினில்
சுயமுடன் மூல சுடரது தோன்றி
யியல்புடன் பிடரியில் எய்திடும் பாரே. 116

**லிங்கம்**

பாரே பொதிகை பதிவாம் பிடரியில்
நேரகத் தீட்சர் நிலையது வாகும்
சாரதில் பிரமந் தன்னொளி வாகும்
பாரதில் நீயும் பரிபூ ரணமே 117

பூரணமாம் பரிபூரணந் தன்னைக்
காரி யுருமையங் கருணைப் பெருவெளி
பார்குரு நாதன் பரவெளி யதனில்
சார்திரு தீபந் தண்ணொளி தானே. 118

தானான லிங்கந் தன்மையைக் கேளு
கோனான சூதங் குருவங்கம் ரெண்டு
மூனாக ஒன்றாயுடன் சேரதில்குரு
தேனான சீனம் சேரதில் பாதியே. 119

பாதியைச் சேர்த்துப் பதிவாய்ப் பொடிசெய்து
ஆதியாங் குப்பியதில் விட்டெ றித்திடு
நீதியாய்ச் சாமம் நினைவா யெரித்திட
சோதி போலிங்கஞ் சுந்தர மாமே. 120

சுந்தர மாகி துவங்கு மெண்ணூறு
மந்திரந்தனை மகத்தான கொங்கணர்
தந்திர மாகத் தன்மனம் நோக்கி
அந்தர மதனி லாதி கண்டானே. 121

ஆதி சரக்கு அறுபத்தி னாலும்
வாதிகள் மெச்ச வைத்தனர் கொங்கணர்
நீதிக ளோடே நினைவை யறிந்தால்
சோதித் துருவங் துலங்கு வதறியே. 122

துலங்கிய சிங்கி துலங்குவேன் கேளு
நிலங்கரு நாகம் நீர்வெடி யுப்புச்
சிலங்குரு னாதமுஞ் சீனமுங் கூட்டிப்
பலங் கருவாகப் பதிவுடன் பொடியே 123

## சிங்கி பூரம்

பொடிதனைக் குகையில் பொருந்தவே யிட்டு
அடிதனில் தூளை யிட்டதின் கீழ்க்குகையைத்
திடமுடன் புடமதிற் சென்றது உருகி
வடிந்திடு மடியில் குகையி னிறத்தானே. 124

## சாம்பிறாணி

தானதை யெடுத்துத் தன்மையாய்ப் பார்த்தால்
தேனதினி றமாய் சிங்கி யுமாகு
மானதோர் சிங்கி ஆதிச் சரக்கது
கோன வனருளால் குருமுறை பாரே. 125

முறையான பூரமு முடிக்கும் வகைகேள்
நிறையான பூரம் நேர்வெடி சீனமுங்
கரையாத காரமும் கணக்குஞ் சரியதாய்த்
துறையாகக் கூட்டித் தோண அரைத்திடே. 126

அரைத்திடு சந்தனக் கியாழம் தனிலே
கறைகள் போற் கலசந் தனிலிடு
நிறைந்த வால்மிளகுப் பொடியதிற் சேர்த்து
திறத்துடன் பூமியில் சேரு மண்டலமே 127

மண்டலஞ் சென்று வகையுடன் எடுத்தால்
கொண்டிடு பூர குருவாக நிற்கும்
அண்டர்கள் மெச்சும் ஆதி சரக்கிது
தொண்டர்கள் செய்யுந் துரையிது வாமே. 128

ஆமே சாம்பிறாணி அதினிட முறமைகேள்
தாமே குங்கிலியந் தன்னொடு அரக்கு
வாமெனக் கருவாய்ப் பட்டையுங் கூட்டி
நாமென குடித்து நன்றாய்ப் பொடித்திடே. 129

பொடிதனை யெடுத்து போட்டிடு பானையில்
வடியுட னெய்யில் மத்தித்துப் பிசைந்திடு
வடியுடன் குப்பியில் வைத்து எரித்திட
படியுட னுருகும் பதந்தனைப் பார்த்திடே 130

பார்த்திடு பதந்தான் பதிவாயுரு கிடில்
மாத்திடும் பானையில் வளம் பிறச்சுண்டிடும்
பேத்திடுங் கட்டிப் பிலமா யிறு கிடுஞ்
சாற்றிடும் பேரு சாம்பிறாணி தானே. 131

## நாக வைப்பு

தானென்ற நாகத் தன்மையைக் கேளு
கானென்ற வெள்ளிக் காரிய சூதங்
கோனென்ற மூன்று குணமா யுருக்கிநீ
பானென்ற கல்வம் பதமாய்ப் பொடித்திடே. 132

பொடித்திடு மருந்து போடுவிதங் கேளு
தடித்திடும் வெடியுந் தாளகங் கெந்தியும்
மடித்துடன் பொடித்து அமைத்திடு குகையினில்
நொடித்திட அடுப்பில் நோக்கி யெரித்திடே. 133

எரித்திடும் போதில் யிதமா யுருகித்
தடித்து உருகுங் குளம்பது தன்னை
வரித்திடுஞ் சவர்த்திடுங் கண் விழுந்த
தரித்திர மேதுதண் ணோகஞ் சித்தியே 134

சித்திக்கும் நற்சியமா மெண்ணூறு
முத்திக்கி நல்ல மோட்ச மிதமாகும்
புத்திக்குள் நின்ற பொருளது தோன்றும்
சத்திய மாக தன்னருள் காரே. 135

## கருவங்க ரசிதம்

காப் பெண்ணூறு கண்மணி போலே
பார்ப்பது பதனம் பதனமாக
சேர்ப்பது குகையில் திறமுடன் வைத்து
கூற்புட னீயுங் குருவெனக் காரே 136

காரு மின்னூலைக் கசடனுக் கீயர்
நேரெனப் பார்த்து நிலை யறிவார்க்கீய
நாவரெனினும் அயர்ந்துநீ பேசு
சாவது பிடதிதன் சுழி முனையே 137

## வெள்ளி ரசிதம்

முனையினில் தீப முச்சுட ராகு
மனைதனைக் கண்டு மகிழ்ந்துநீ பாரு
சுனையினில் நீரே புருவத்தி லேத்தி
அனைதனில் நின்று அருளதைக் காரே. 138

கார வங்கரசிதங் கருத்துடன் கேளு
வேர்வங்க ரசமும் வெடியுடன் தாளகம்
நேருட னொன்றாய் நிமித்துப் பொடிசெய்து
பாரந்தக் குகையிற் பதித்து எரித்திடே. 139

எரித்திடும் போதி லிளகி யிருக்கிடு
பரித்திடும் வங்கரசித மீதென்றுங்
குறித்திடுஞ் சித்தர் கூட்டு வகையிது
விரித்த பொருளின் விபரமீ .தாமே 140

தாமென வெள்ளி ரசிதமது கேள்
நாமென நின்ற நல் வெள்ளிரசமு
மோமெனக் கெந்தி ஒளிர்வங்க தாளகம்
மாமெனக் கூட்டி அமிழ்த்திப் பொடித்திடே. 141

பொடிதனைக் குகையில் போதர் வாயிடு
அடிதனைத் தீயை யமர்த்தி எரித்திடப்
படிதனி உருகி பக்குவ மாகுந்
திடமுட னாறிச் செம்மைய்ய தாமே. 142

ஆமென வெள்ளி அமர்ந்திடும் ரசிதந்
தாமெனக் காணதன் னருள் வேணும்
நாமெனும் நிலையும் நடுநிலை பார்த்தால்
ஓமெனு மந்த உண்மை யிதாமே. 143

உண்மையாய் யிங்கு உரைக்கிறோங் கேளு
நன்மையா யுள்ள நயமுடன் கடுகுச்
செம்மையாய்க் கூட்டிச் சேர்த்தரை மைப்போல்
உண்மையாய் வெளியில் யாவும் வைத்திடே. 144

உலர்ந்திடும் வேப்பம் பட்டையில்த் தயிலம்
நலநதி களாக நயமா யெடுத்திடு
சிலந்தனில் சரக்கைச் சேர்த்துப் பிசைந்திடு
குலந்தனி லாதி கூட்டி யுருட்டிடே. 145

உருட்டியே பீங்கான் றாளி யிற் சேர்த்திடு
குருட்டினில் மண்டல மிருத்தி யெடுத்திடக்
கருத்துடன் சமைந்து காரண மாகி
திருத்தமாய்க் காயஞ் செய்மையாய் வீசுமே. 146

வீசுமே காயம் வீறு களேறிச்
கூசுமே நாசிக்கு முறயெரித்துமே
வாசிகள் வீடரை வாங்கித்
தகத்திடுந் தேசுக ளான தேகத்துக் குறுதியே. 147

உறுதிகள் சொன்ன உண்மை யெண்ணூறும்
நெறியுடன் பார்த்து நேர்நிலை பெற்றோர்
கருவுடன் குருவுங் காரண மாக
திருவருள் பெற்ற சித்தமு மாமே. 148

## தொட்டி வைப்பு

சித்தமாந் தொட்டி செப்புவேன் கேளு
பெத்திடு வங்கம் பேரது ரெண்டுஞ்
சுத்திடும்ரசமுஞ் சுகமுடன் கூட்டி
சத்தமுங் கெந்தியுந் தாளகஞ் சேரே. 149

சேர்த்திடுந் துருசு செம்மையாய் கேளு
பாத்தொரு நிரைமாயப் படியப் பொடித்திடு
வார்த்திடு குகையில் வளமா யெரித்திடப்
பார்த்திடத் தொட்டிப் பாசாண மாமே. 150

## வெடியுப்பு பூநீர்

ஆமென யெண்ணூரடி முடி பார்த்தால்
தாமெனத் தொன்றுந் தன்மை வெளிப்படு
வாமென அந்த மதியா அமிர்தமும்
ஓமென மூல மொளிதருந் தீபமே. 151

தீபம தான சிவசத்தி ரூபமுந்
தீபமாய் நின்று தேகமுஞ் சித்தியாந்
தீபத்தில் மூலஞ் சென்றிடும் வாசியாந்
தீபஞ் சிவமாயச் சென்றிடும் யோகமே. 152

யோகத்துக் காதி ஒன்றான அட்சரந்
தேகத்துக் காதி சிவசத்தி மூலமாம்
யோகத்துக் காதி யென்னென்று சொல்வேன்
தாகத்துக் காதி தண்ணீர திகமே. 153

அதிகச் சரக்கு ஆறில் லவண
மதியான உளசாம் வடித்துநீர் காய்ச்சி
நிதியான சம்பள நீரைத் தாக்கிடில்
விதியான கம்பி வெடியுப்பு மாச்சே. 154

உப்பான பூனீர் உரைக்கும் வகைகேள்
வெப்பாஞ் சவரு வெண்படியேரு
அப்பினில் போட்டு அலையக் கரைத்ததைக்
கொப்பமாய் ரவியிற் கூர்மையாய்க் காய்ச்சிடே. 155

**சவுக்காரம், சாரலவணம், சனாதிச்சாரம், வெச்சாரம்**

காய்ச்சிட பூவு கருவான பூனீரு
மாச்சிடப் பூனீர் வளமாஞ் சரக்குக்குப்
பாச்சிட அந்தப் பதிவாகக் கட்டுண்ணு
மூச்சிடப் போகா முனையான தீயென்னே. 156

தீய சவுக்காரஞ் செப்புவேன் கேளு
மாயாதி பூனீர் வளர்வெடிச் சாரமுந்
தோய்வெடி நீரிற் சுண்டிடக் காய்ச்சி
வாயூர யெண்ணை வடித்து உருட்டிடே. 157

உருட்டிய காரம் ஓம் சவுக்காரமும்
மருட்டிடுஞ் சரக்கை வாட்டி யெடுத்திடு
திருட்டுகள் பேசித் திரிகிற வாதியை
மெருட்டு மிக்காம் வேதைகள் கோடியே. 158

கொடியான சார லவணமது கேள்
நெடியாணைப் பூனீர் நேர்கரி உப்பும்
படியான தேசியில் பதமா யெரித்திட
மடியாத சார லவண மிதாமே. 159

தாமென சத்தி சாரமது கேள்
நாமென னீரில் நல்வெடி சாரமு
மாமெனப் பூவுமதுகரி யுப்புடன்
சாமெனக் காய்ச்ச சத்திநவச் சாரமே. 160

சார மாம்நவச் சார மதுகேள்
காரமாம் வெடியுங் கல்லு நீருப்புடன்
பாருடன் அதுவும் பதமாய் அமுரியில்
நேருடன் காய்ச்ச நீர-நவச் சாரமே. 161

நிசமான காசிச் சாரமது கேள்
வசமான பூனீர் வளர்வெடி நீருப்பு
கிசமான யெவாச் சாரமுங்கூட்டியே
பசமான தேசியில் பதமா யெரித்திடே. 162

**காசிச்சாரம் சுகபஞ்சாட்சரம் கெந்திவெணம்**

எரித்திடக் காசி இதமான சாரமாங்
குரித்த சரக்கைக் குணமாக்கக் கட்டுண்ணு
விரித்த சடையன் வேதாந்தச் சாரத்தைத்
தரித்த யெண்ணூரில் தான வனானதே. 163

தானா மேக பஞ்சாட் சரமதுகேள்
வானாம் வெடியும் வளமான கல்லும்
கோனாமமுரி கொடியநீ ருப்புடன்
தேனான காசிச் சாரமுஞ் சேர்த்திடே. 164

சேர்த்திடும் ஆனைச் சிவமது தன்னிலே
பார்த்துக் கரைத்துப் பதமாய் யெரித்திடப்
பூத்துப் பொலிந்து பொன்றியே கன்றிடும்
ஏத்தியே சரக்கு யோகம் படிச்சாரமே. 165

சாரமாஞ் சீனம் லவண மதுகேள்
வாரமாம் பூனீர் வளர்கல்லு நீருப்புக்
காரமாம் வெடிசரிக் காடியி லெரித்திடப்
பாரமாஞ் சீன லவண மீதாமே. 166

தாமெனக் கெந்தி லவண மதுகேள்
ஆமென வெடியு மதினுட சாரமும்
நாமென உப்பும் நலமான சீனமும்
வாமென அமுரியில் வளமா யெரித்திடே. 167

யெரித்திட உப்பு யிருகிச் சிவந்திடும்
தரித்ததோர் கெந்தி லவண மதிப்பாங்
குரித்ததோர் ரசமுங் குணமா யிருகிடும்
மரித்த ரசமும் மகத்தான சித்தியே. 168

சித்திக்கும் வேண்டியே செப்பு வேன்இந்துப்பு
முத்திக்கிச் சீனமு முதலான கல்லுப்பும்
வெத்தி வெடியுடன் மேலான சாரமுஞ்
சுத்தி நீருப்புடன் சுகமாகக் கூட்டியே. 169

## இந்துப்பு சிந்துப்பு அட்டுப்பு

கூட்டிடு தேசி ஆவினீர் தன்னோடு
ஆட்டிக் கரைத்து அனலி லெரித்திட
நீட்டி யெரித்து நினைவா யிறக்கையில்
நாட்டியே பூனீர் நலமா யரையிடே. 170

அறையிட்டு மூடி அனலில் வெதுப்பிட
விறையிட்ட வாயுவை இறக்கு மிந்துப்புவாந்
துரையிட்ட நேர்மை துரத்தி ஒடுக்கிடும்
நிறையுற்று மாது நின்னய வாகுமே. 171

ஆகவே சிந்து அதிக லவணம்
வாகுடன் சொல்வோ மகிழ்ந்து நீகேளு
பாகுடன் சாரம் படிகமாஞ் சீனம்
தாகமாம் வெடியுந் தனிப்பூ வழலையே. 172

வழலையோ டொன்றாய் வாகுடன் கூட்டி
நிழலைக் கண்டஞ்சும் நீரதில் கரைத்து
சுழல் படாமல் சுண்ட யெரித்திட
சிலைபோற்ற சிந்து லவண யிதாமே. 173

ஆமென அட்டுப்பு அன்புடன் சொல்வோந்
தாமே பூனீர் தனிவெடி சீனம்
நாமெனச் சாரம் நலமான இந்துங்
காமென தண்ணீரில் கணக்கா யெரித்திடே. 174

எரித்திடும் போதி லியல்பதங் கண்டு
குறித்த நல்சட்டியில் குணிமா யுறுக்கீடு
சுரித்துட னாறி சுழன்றது கட்டியாம்
மரத்துட னுப்பு மட்டுப்பு வாமே. 175

## நல்லுப்பு கூடனுப்பு சவட்டுப்பு

ஆமென கல்லுப்பு அன்புடன் சொல்வோந்
தாமே நீருப்பு நன்னொடு சாரமும்
நாமே வெடியும் நலமான பூனீரும்
வாமார் தேசியில் மயங்க யெரித்திடே. 176

மயங்க யெரித்து வளமாகச் சுண்டினால்
தயங்கியே உப்புந் தானங்கே கட்டிடுஞ்
செயங்கொண்ட உப்பு திருவான கல்லுப்பு
நயங்கொண்டு பார்த்தால் நாட்டங்கள் காணுமே. 177

நாட்டமாஞ் சூடலை மான உப்பு
தாட்டிகமாம் வெடி தன்னோடு சீனமுங்
காட்டிய சாரங் கடிய கல்லுப்பு
நாட்டிய பூனீ ரதினிடை கூட்டியே. 178

கூட்டிப் பொடித்து குருவான வாலைநீர்
நாட்டிக் கரைத்து நலமா யெரித்திட
பூட்டிய உப்புது மையாய்க் கட்டியே
சூட்டி யெடுக்கச் சூடனுப் பானதே. 179

உப்பான சவட்டுப்பு முறைமை கேள்
அப்பான பூனீரதி லிங்கு காரமும்
வெப்பாம் வெடியும் வெண்சீனஞ் சாரமுந்
செப்ப முடனே தேசியி னீரிடே. 180

தேசியி னீரில் சிறக்க கரைத்தபின்
மாசியில் லாமல் வைத்து யெரித்திட
நேசமாய் வத்தி நின்ற தொகுப்பது
வாசம் நிறைந்த வளர்சவுட் டுப்பதே. 181

## கட்டுப்பு வெள்ளீயம் தொட்டியுப்பு பாசாணம்

உப்பில் கட்டுப்பு உகந்துநான் சொல்வேன்
செப்புங் கரியுப்பு சேரும் வெடியுப்பு
கொப்பான சீனம் கொடிய நவச்சார
மப்பான நீரில் அடங் கரைத்திடே. 182

கரைத்திட் டடுப்பில் கண்விட் டெரித்திட
விரைத்தது உப்பு வெண்மையாய்க் கட்டுண்ணும்
நிறைத்திட்ட மாக நின்ற தோருப்பிது
உறைத்திடப் போகா உண்மை கட்டுப்பிதே. 183

உண்மையாய்க் காரசாரமு முரைத் திட்டோம்
நன்மையாய் பார்த்து நடுநிலைப் பற்றினால்
உண்மை பெருகி ஓடுந் துரைக் கெல்லாந்
தன்மை யாங் காரசார முறையிதே. 184

முறைமையான வைப்பு பாசாணஞ் சொல்வேன்
நிறையாகக் கண்டு நின்னருள் பெற்றால்
துறையான வைப்பு துலங்கு மெண்ணூறில்
வரையாஞ் சரக்கு வைப்புச் சொல்வேனே. 185

சொல்லுவேன் தொட்டியைப் பாசாணந் தன்னை
வெள்ளி காரீயம் வெண் சாரை நாகமுந்
துள்ளிய ரசமுந் தொய்வாகக் கூட்டியே
தென்னிய துருசுஞ் செய்சாரங் கூட்டிடே. 186

## செப்புத்தொட்டி, அயத்தொட்டி

கூட்டிப் பொடித்து குகையில் உருக்கிட
நாட்டிய தொட்டி நல்ல பாசாணமாம்
பூட்டிய பூட்டுப் புதுமைக் குருவாகுங்
தாட்டிக மான சமத்தை யறிந்திடே. 187

அறிவான செப்புத் தொட்டிய தைக்கேள்
நெறியான நாகமு நேர்ரச வங்கமுங்
குறியான லிங்கமுந் தாளகமுங் கூட்டியே
சரியாய்ப் பொடித்து சாத்திடு குகையிலே. 188

குகையை யெடுத்துக் கூர்மையாய்க் காட்டிட
வகையுடன் சேர்ந்து வளமா யிறக்கிடுந்
தகையுடன் குகையில் தானது பார்க்க
துகையுடன் செப்புத் தொட்டிய மாமே. 189

ஆமென அயத்தொட்டி அன்புடன் சொல்வேன்
காமென வங்கமுந் தன்னொடு நாகமும்
நாமெனச் சூதமும் நல்லதோர் கெந்தியும்
ஓமென லிங்க முடன்தாரங் கூட்டியே. 190

தாரமுடனே சரக்கைப் பொடித் திட்டு
காரமாய்க் குகையில் கூட்டி யுருக்கிடச்
சாரமா யுருகித் தன்னி லடங்கிடும்
வாரமா மயத் தொட்டியு மாகுமே. 191

## புத்துத் தொட்டி

ஆகுமே புத்துத் தொட்டிய தைகே
நாகம் வெண்வங்கமும் நயமான லிங்கமும்
பாகுடன் தாளகம் பதிவாம் வெடியுப்பு
வாகுடன் கூட்டி வகையாய் பொடித்திடே. 192

பொடித்த பொடியைப்போது வாங் குகையினில்
வடித்த அளவில் வாகுட னருக்கினால்
அடுத்து இறக்கி அன்பாகக் கட்டுமே
தொடுத்த தோர்புத்துத் தொட்டியி லாச்சே. 193

ஆச்சே ரத்த சிங்கியைக் கேளு
வாச்சிடு துருசும் வளமான கெந்தியும்
மூச்சே னத்தார் முடிவான லிங்கங்
காச்செனக் காரங் கண்டிடைத் தூக்கிடே. 194

தூக்கிப் பொடித்து துருவான செப்புனில்
தாக்கியே மூடித் தனலிட் டெரித்திட
பாக்கியம் போலே பதிவா யுருக்கியே
சீக்காம் ரெத்தச் சிங்கியு மாகுமே. 195

சிங்கியா மேம சிங்கியைக் கேளு
தங்கிய தாரந் தன்னொடு லிங்கமும்
பொங்கிய கெந்தி பொலிவாந் துருசொடு
மங்கிய காரம் நாகவளர் வீரங்கூட்டிடே. 196

கூட்டிப் பொடித்துக் குருவாய்அயச் செப்பில்
நாட்டியே மூடி நலமா யெரித்திட
ஆட்டிய மருந்து அடவா யுருக்கியே
பூட்டிய யேமம் பொலிவான சிங்கியே. 197

## ரசித சிங்கி தீன முறுவல்

பொலிவாய் ரசிதம் பொங்கிய சிங்கிகேள்
மலிவான தாரம்வளர் வீரந் துத்தமுங்
தெளிவா மனோசீலை சிங்கியும் வெள்ளையு
மொளிவான பூவு மொன்றாய்ப் பொடித்திடே. 198

ஒன்றாய்ப் பொடித்து உருவான வெங்கலம்
நன்றான செப்பினில் நயமாக மூடியே
குன்றாத தீயில் குணமா யெரித்திட
பன்றாம் ரசித சிங்கியும் பார்த்திடே. 199

பாருதீ முருவலப் பாசாணந் தன்னையே
சீர்பெரு கெந்தி திருவா மனோசீலை
கார்பெரு தாரங் கனத்தபா சாணமுமது
மோபெரு துருசு யேகாந்த வீரமே. 200

வீரத்துடனே விளங்கிய நாகமும்
பாரெத் தரசமும் பகிவாய்ப் பொடிசெய்து
நேரொத்த குடவன் நேர்ந்த சிமிழினிலே
சீரொத்து வைத்த சிக்கென மூடியே. 201

மூடியோர் முழத்தில் முடியப் புடமிடு
வாடியுருகி வலுமை யாய்க்கட் டும்பார்
நாடியெடுக்க நல் மணி யாகவே
பாடிதீ முருவலப் பாசாண மாமே. 202

## கார்முகில், லிங்க பாசாணம், வெள்ளை பாசாணம்

ஆகுமே கார்முகி லப்பனே சொல்வே
னாகுமும் வீரமும் நல்ல பாசாணமும்
பாகுடன் லிங்கம் பச்சையுங் கூட்டியே
வாகுடன் தாரமும் வரிசையாய்க் கூட்டிடே. 203

கூட்டிப் பொடித்துக் குகையாய் அயச்செப்பில்
நாட்டியே மூடி நலமாய்ப் புடத்தினில்
வாட்டி யெடுக்க வளமா யுருகியே
ஆட்டிய கார்முகில் அதிக பாசாணமே. 204

பாசாண லிங்கம் பகருவேன் மக்களே
கூசாமல் வீரம் குருவா மனோசீலை
பேசாத வங்கம் பெரிதான கெந்தகம்
மாசான துருசு அதில்ரசங் கூட்டிடே. 205

கூட்டிப் பொடித்துக் குப்பியில் தாக்கியே
ஆட்டி மண்சீலை அஞ்சரை தாக்கிடு
தீட்டிய தாழியில் செம்மி மணலிட்டு
மாட்டிடு தீமைவள ரஞ்சு சாமமே. 206

சாமமே சிந்து தாளொடு குப்பியை
யேம நிறம் போலிருக்கும் லிங்கமும்
தாமிதமில்லைச்சாதா கொடி வேதையாம்
காமனை வென்ற கருணைக் கண்பார்த்திடே. 207

பார்த்திடு வெள்ளைப் பாசாணந் தன்னையே
நீத்திடு வெள்ளை நேரசந் தாளகம்
சாற்றிடும் வீரம் சதிராம் வெடியுப்பு
ஆத்திடு மொன்றாய் யரைத்துப் பொடித்திடே. 208

பொடிதனைக் குப்பியில் போட்டு மண்சீலைசெய்
வடிவுள்ள தாழியில் வைத்து மணலிடு
சடுதியில் தீயைத் தாக்கிநால் சாமமு
முடிவாக காய்ந்தால் முத்துப்போலக் கட்டுமே. 209

கட்டியிருக்கி கனத்த பாசாணமும்
திட்டமாய்க் குப்பியில்ச் சேர்த்து யிருகிடும்
வட்ட மதியென வளர்கயி லாசமுங்
கிட்ட நின்மெய்திடுங் கிறுவை யாமாதியாம். 210

## வீரப் பாசாணம்

ஆதியாம் வெள்ளை அறிந்தவர் சித்தனாஞ்
சோதியில் னாதந்து லங்கும வனிடம்
நீதியிற் தீபம்நேர்நிலை யாகிடுஞ்
கோதில்லா ஞானக் குருவரு ளாமே. 211

குருவாங் கெவுரி கூட்டும் வகைகேள்
திருவான வெள்ளை சேர்த்திடு வீரமு
முருவான நாக முகந்திடு துள்ளியும்
தருவான சச்சையுந் தன்னொடு தாரமே. 212

தாரமோ டொன்றாய்த் தகத்துப் பொடித்திடு
ஆரமாஞ் செப்பு அகிலி லடக்கியே
சாரமாய் மூடி சாத்துமண் சீலைதான்
காரமாஞ் சட்டியில் கருக யெரித்திடே.. 213

எரித்த பதந்தான் எள்ளுப் பொரித்திடு
குறித்தப் பதத்தில் குணமா யிறக்கியே
தரித்த மருந்து தன்மையாய்க் கட்டியே
பருத்த கெவுரிப் பாசாண மாகுமே. 214

ஆகுமே வீரத் தடவுகள் சொல்லுவேன்
வாகுடன் வெள்ளை வளர்சீலை லிங்கம்
பாகுடன் பச்சையும் பாங்கான கெந்தியுந்
தாகமாம் வெடியுந் தன்னொடு சாரமே. 215

சாரமுங் காரமுந் தன்னொடு தாரமும்
மோரிடை ஆதமு முருகப் பொடித்திடு
நேரிடு காசி நிலைத்த நல்குப்பியில்
வாரிச் செலுத்தி வகையுடன் மண்ணிடே. 216

## கோழித்தலை கெந்தி

மண்ணிடு தாழியில் வைத்து எரித்திடு
உண்ணி உருகி உரைந்திடுங் கட்டிபோல்
வன்னி நிறைந்து வளர்சாமம் நாலினில்
தன்மை யாகத் தனதை யெரித்திடே. 217

யெடுத்திடு குப்பி யிதமாய்க் குளிந்தபின்
விடுத்ததைப் பாரு வெண் மதியாக்கு
மடுத்த சரக்கு ஆதிக் குருவிதாம்
படுத்ததோர் வீரம் பாசாண மானதே. 218

## கோழி கெந்தி

ஆன கோழித்தலை ஆதிநல் கெந்தியைப்
பூணவே சொல்வதைப் புத்தியாய்க் கேளுங்கோ
தோணவே தாரத் தொடுசீலை பச்சையும்
பூணவே துத்தம் புகன்வெள்ளை லிங்கமே. 219

லிங்கமும் வீரமு நேரச நாகமுஞ்
சங்கையாய்ப் பொடித்துத் தானிரு குப்பியில்
வங்கம் தாக அமத்திடு தாழியில்
சங்கை யுடனே தாக்கி யெரித்திடே. 220

யெரித்திடு சாம மியல்பா யெரிந்தபின்
குறித்த சரக்குக் குணமாக கட்டுண்ணும்
பருத்திடு குப்பியைப் ப தமா யுடைத்தெடு
தரித்திடுங் கோழித் தலைக்கெந்தி யானதே. 221

## சுரைக்காய் கெந்தி பவளபுத்து பாசாணம்

கெந்தி சுரைக்காய்க் கெந்தியைக் கேளுங்கோ
அந்தந் துருசு ஆனதோர் துத்தமும்
வந்திடும் நாகம் வளர்சவ் வீரமும்
பந்திடும் லிங்கமும் பாசாண தாரமே. 222

தாரமொடு சீலை சத்தியுங் கூட்டியே
வீரமாயொன்றாய் வேண்டிப் பொடித்திடு
சாரமாங் குப்பியில் தானிட் டெரித்திடு
காரமா யொன்றாய்க் கட்டி யுருகுமே. 223

கட்டியுருகிக் கனகம் போல் நின்றிடுச்
சட்டமாய்க் குப்பியைத் தகர்த்து எடுத்திடு
நட்டம் வாராது நாராணி சத்துக்கள்
தட்டில்லாச் சுரக கெந்தியுந் தானதே. 224

## பவளப்புத்து பாசாணம்

தானாம் பவளப் புத்துச் சமதநுக்கேள்
கோனான கெந்தியுங் கொடுஞ்சீலை தாரமும்
பூனாத பச்சையும் புகல்ரச நாகமுங்
காணாத வீர மூங்கடு சாரமே. 225

சாரமோ டொன்றாய்ச் சதிராய்ப் பொடித்திடுங்
காரமாங் காசி கருவான குப்பியில்
பாரமா யேத்தி பதியமண் சீலைசெய்
வீரமாந் தாளியில் விட்டு மணலிடே. 226

**தார பாசணம் சிங்கி**

மண்ணிட் டடுப்பில் வளமா யெரித்திடு
விண்ணிட்டுப் போனால் வெந்திடு மேனிகள்
கண்ணிட்டு மெல்ல கருவா யெரித்திடு
தன்னிட்டு நாலு சாமம் தனலிடே. 227

தனலிட் டெரித்துச் சதிராய்க் குளிர்ந்தபின்
மனதுற்ற குப்பியை வாகா யுடைத்தெடு
புனலொற்று நின்றப் புதுமை பவளம்போல
பணரோற்று நின்ற பவள பாசாணமே. 228

பாசாண மான பதிவாமா தாரமாசார்
மாத மருளுவேர் மின்னங் கேள்
கூசாத பச்சை குருவான லிங்கமும்
பேசாத வெள்ளையும் பெரிதான வீரமே. 229

வீரமும் நாகமு மேல்சீலை தாரமுங்
காரமுஞ் சாரமுங் கதித்திடுஞ் சூதமும்
பாரமா யொன்றாயப் படியப் பொடிசெய்து
சாரமாய் குப்பியில் தானிட்டு மண்ணிடே. 230

**............காடாதரிப் பாசாணம்**

மண்ணது பூசி வளமான தாழியில்
நன்னய மாக நடுவி லிருத்தியே
பண்ணிடு தாழியில் பதிவாய் மணலிட்டு
யெண்ணியே நாலு சாம மெரித்திடே. 231

யெரித்திட் டெடுத்து யிதமாய்க் குளிர்ந்தபின்
குறித்திட்ட நேசங் குருவை வணங்குநீ
மருந்திட்டக் குப்பியை வாகாய் யுடைத்தெடு
பருத்திட்டத் தார பாசாண சிங்கியே. 232

சிங்கி கோடாசுரி பாசாணஞ் செப்பக்கேள்
தங்கிய வீரமும் தன்னொடு நாகமும்
பொங்கிய பச்சையும் போதுரச லிங்கமும்
மங்க மனோசீலை அரிதாரங் கூட்டிடே. 233

கூட்டிடு கெந்தியுங் குருவான வெள்ளையுந்
தாட்டிக மாகச் சதிராய்ப் பொடித்திடு
நாட்டிடு செப்பு குப்பி நடுவினிலே
போட்டிடு சீலை பொருந்தேளு செய்திடே. 234

செய்திடு தாழிச் சிறப்பாய் நடுவினில்
வைத்திடு குப்பியை வாகாய் மணவிட்டு
யெரித்திட்ட அடுப்பில் யியல்பாய் அறுசாமம்
கொய்திடு அனலைக் குறுக எரித்திடே. 235

யெரித்திடு தாழியிலியல் பாய்க் குளிர்ந்தபின்
விரித்திடு குப்பியை வேண்டி யெடுத்திடுக்
குறித்த கோடாசுரிக் குணமாகச் சிவந்துதான்
தரித்ததோர் வேதைக்குத் தான வணாமே. 236

தானவ னான தரும்பஞ்ச பட்சியைக்
கோணவன் தன்னாற் குறிப்பிடன் சொல்லு
வேணான பூரமும் அப்புனில் ரசமும்
வானவர் போற்றும் ரசமுங் கூட்டிடே. 237

கூட்டிரசமுங் குரு பச்சை வெள்ளையுந்
தாட்டிக மான தளவாய் மனோசிலை
நாட்டிய வீரம் நலமான லிங்கமு
மாட்டி யொன்றாகப் மடியப் பொடித்திடே. 238

பொடித்திடு மருந்தை போட்டிடு குப்பியில்
தொடுத்திடு சீலை சுருக்கமாயேழு செய்
விடுத்திடு தாளியில் வேண்டி மணலிட்டுக்
கொடுத்திடு தீயைக் குருக்காறு சாமமே. 239

சாம மெரித்து தனலாறி நின்றபின்
ஆமெனக் குப்பியை அடவா யுடைத்தேடு
நாமென நின்ற நடுபஞ்ச பட்சிதான்
காமனை வென்ற கடுந்தீயு மானதே. 240

தீயான குங்குமம் பாசாணஞ் செப்புவேன்
மாயான கெந்தி மனோசிலை தாரமுந்
தாயான பச்சை தருலிங்க வீரமுங்
காயாத வெள்ளை கடுந்துத்தஞ் சாரமே. 241

## ரெத்த பாசானம்

சாரமாம் நாகந் தனிச்சூரம் வங்கமும்
பாரமாய்க் கூட்டி படியப் பொடித்திடு
காரமாய் நீரில் கடுகப் பிசறியே
வாரமாய்க் குப்பியில் வாரி யடைத்திடே. 242

அடைத்திடுங் குப்பிக் கஞ்சுமண் சீலைசெய்
யுடைத்திடத் தாழி யிலூன்றி மணலிடுஞ்
கூடத்தினி லக்கினிக் காரண மாக
திடப்பட அஞ்சு சாம யெரித்தியே. 243

பொரித்திடுந் தாளியி லியல்பாய்க் குளிந்தபின்
குறித்திடுங் குப்பியைக் குணமா யுடைத்தெடு
தரித்திடும் மஞ்சள் தன்னிறம் போலவே
பரித்திடுங் குங்குமப் பாசான மானதே. 244

## ரெத்த பாசாணம்

ஆனதே ரெத்த பாசாணத் தன்மைகேள்
வேண மனோசீலை பெரிதான சிங்கியும்
வானவர் சூதம் வளர்வீரம் நாகமுங்
காணவே லிங்கங்கட்டி தான் கெந்தியே. 245

கெந்தகப் பச்சை கெம்பீர வெள்ளையும்
பந்தம தாகப் படியப் பொடித்திடு
அந்த மயத்தி னரிதான் பாசாணம்
சொந்தமா யிட்டு கத்தேழு சீலையே. 246

சீலைமண் செய்து சிறப்பான தானிய
வாலைய மாக அணைத்து மணலிடு
வாலையைப் போற்றி வைத்திடு நாளையில்
கோழைகள் நீங்கி கணவா யுருகிமே. 247

உருகித் திரண்டு உருமையாய்க் கட்டுண்ணும்
தருகி மறுநாள் தானே யெடுத்திடும்
மருகிய குப்பியை வளமாயுடைத் தெடு
கருகிய ரெத்த பாசாண சக்தியே. 248

## கோமுக பாசாணம்

சத்தான கோமுகத் தன்மைதனைக் கேளு
வித்தான வீரம் விளங்கும் மனோசிலை
முத்தான வெள்ளை முழுநீல தாரமுஞ்
சத்தான லிங்கமுந் தருசூத நாகமே. 249

நாகமுங் கெந்தியும் நயமாகக் கூட்டியே
பாகமா யொன்றாய்ப் படியப் பொடித்திடு
ஆகமாஞ் செப்ப அதிலி லடக்கியே
தாகமாய் தாழியில் தனித்து மணலிடே. 250

மண்ணிட்டுத் தாழியில் வளமா யடுப்பினில்
கண்ணி ட்டுப் பார்த்துக் கடுக எரித்திடு
விண்ணோற்று நின்று வேதனைப் போற்றியே
பண்ணுற் றிறக்கிப் பதிவா யெடுத்திடே. 251

யெடுத்திடு செப்பை யிதமாயு யுடைத்தெடு
கடுத்த சரக்கு கனமா யுருகியே
தொடுத்ததோர் கட்டியாய் தோன்ற யிருந்திடு
படுத்த கோமகப் பாசாணப் பண்பிதே. 252

## துருசு பாசாணம்

பண்பான துருசுப் பாசாணஞ் சொல்லுவேன்
நண்பான லிங்கம் நாக ரசமுடன்
வெம்பாத பச்சையும் வெள்ளையுந் தாரமும்
நண்பான வீரமும் நல்ல கெவுரியே. 253

## துத்த பாசாணம்

கெவுரி யொன்றாய்க் கெணிதமாய்க் கூட்டியே
சவுரியமாகத் தகத்துப் பொடி செய்து
கவுரிய செப்புக் கவசந் தனிலிட்டுப்
பவுரிய பாண்டத்தில் பதித்து மணலிடே. 254

மணலிட்டு செம்மி மதியைத் தொழுதபின்
கண்விட் டடுப்பில் கதிக்க யெரித்திடு
தனலிட்டு நாலு சாம மெரித்தபின்
அனல்விட இறக்கி ஆத்தி யெடுத்திடே. 255

யெடுத்த கலச மியல் பாயுடைத்திட
தொடுத்த மருந்து துருவமாய்க் கட்டியே
அடுத்த துருசு அதுநெருப் பாகிகும்
படுத்த துருசு பச்சைப் பாசாணமே. 256

பச்சையாந் துத்த பாசாண செய்கைகேள்
யிச்சைத் துருசு யினிரச கெந்தகங்
கொச்சை மனோசிலை கூர்வெள்ளை தாரமும்
நிச்சைய வீரமும் நேரான லிங்கமே. 257

லிங்கமுடன் துத்தம் நேராய்ப் பொடிசெய்து
அங்கமாய் நாக அரிதான டுப்பில்
சங்கையுடனே சமத்தாய்ப் பொடி யிட்டுத்
தங்கநலக் குப்பிக்குச் சமத்தாய் செம்மணலிடே. 258

செம்மண் விட்டு சீருள்ள குப்பியைத்
தம்மயச் செப்புத் தாளி தனிலிடு
நன்மையதா யனல் நன்றா யெரித்திடு
உண்மை நால்சாமம் உகந்து யெரித்திடே. 259

யெரித்த பதந்தான் நல்லநெல் பொறித்திடு
தெரிந்து யிறக்கிச் சீறாய்க் குளிர்ந்தபின்
அறிந்துநல் குப்பியை அன்பா யெடுத்திடு
மருந்துடன் குப்பியும் வாகா யொன்றாகுமே. 260

ஒன்றாகக் கூடி உருகித் திரண்டிடும்
நன்றாக நீயும் நயமா யெடுத்திடு
குன்றாத சத்துக் குருவிது மக்களே
பன்றான துத்தப் பாசாண வித்தையே. 261

**ரசித பாசாணம்**

வித்தாம் ரசித பாசாணம் விள்ளுவேன்
சுத்தமான வெள்ளை துலங்கும் ரசமுடன்
பத்தான வீரமும் பாசாண தாரமு
முத்தாம் மனோசீலை முழுநீலப பச்சையே. 262

பச்சையும் நாகமும் பதிவான காரமும்
யிச்சையாய்க் கூட்டி இசையப் பொடித்திடு
நிச்சயமாக நேர்வெள்ளிக் குப்பியில்
உச்சித மாக ஊட்டி அடைத்திடே. 263

அடைத்திடுங் குப்பியை அயமான பாண்டத்தில்
திடத்துடன் வைத்து செம்மி மணலிடு
படைத்திடுஞ் சத்தியைப் பண்பாகப் பூசித்து
கடத்தினில் லக்கினி கருவா யெரித்திடே. 264

எரித்திடு சாம மீறாறு கூட்டியே
துருத்தி யனல்போல துலங்க எரித்திடு
குறித்த மெழுகுபோல குறித்த சரக்குங்
குப்பியுங் சட்டியுந் தானே உருகுமே. 265

உருகித் திரண்டு ஒடுங்கி யிருந்திடுஞ்
தருகிய பாண்டந் தானே குளுந்தபின்
மருகி யிராதே மனதா யெடுத்திடு
பருதி ரசிதப் பாசாணச் சிங்கியே. 266

## சூதப் பாசாணம்

சிக்கியாம் சூதப் பாசாணம் செப்புவேன்
தங்கிய சூதமும் தாரமும் வீரமும்
பொங்கிய கெந்தியும் பொற்சிலை பச்சையும்
லிங்கமும் வெள்ளையும் நேரான காரமே. 267

காரமோ டொன்றாய் கதிக்கப் பொடிசெய்து
சீர்கார வங்கச் சிமிழியி லடக்கியே
நேரே பெருஞ்சட்டி நிறுத்து மணலிட்டு
கூர்பெரும் நாதனைக் குறித்திடுப் பேத்திடே. 268

ரதியே தீபமீறாறு சாமந்தான்
காத்திடு தெரித்திடு சுடுஅனல் தாவவே
சேர்த்த மருந்துஞ் சிமிழு முருகிவிடும்
வார்த்தி யிறக்கி வரிசையாய்ப் பாத்திடே. 269

பார்த்திடும் போது படிகம்போல் கட்டியே
நேர்த்திய தாக நிலைக்கு மருந்தது
போர்த்தியே பாரு புதுமைகள் கண்டிடு
சாத்திய சூத பாசாண சத்தியே. 270

## கெந்தி பாசாணம்

சத்தியாங் கெந்திப் பாசாணத் தன்மைகேள்
முற்றிய வெள்ளையு முதுவீரப் பச்சையுஞ்
சித்த மனோசீலை சிவதுத்த நாகமும்
பத்திய கெந்தகமும் பரமான லிங்கமே. 271

லிங்க ரசமுடன் நேர்சரி கூட்டியே
அங்க மதாக அமத்திப் பொடித்திடு
சங்கை யுடனே தாம்பூரக் குப்பியின்
வாங்க குடுத்து உறுதி மண்சீலையே. 272

சீலை வலுவாய் சிமித்து மண்தாழியின்
ஆலைய மாக அமத்தி மணலிடு
வாலையைப் போற்றி வைத்துநல் தீயெறி
நாலு முறுகி குப்பி யிருகுமே. 273

இறுகுமே யாறு சாமத் தியல்புடன்
மறுகி யிறக்கி மறுநா ளெடுத்திடு
குருகிய குப்பியைக் குணமா யுடைத்தெடு
திருகிய கெந்தி பாசாண செம்மையே. 274

## நீலிப்பாசாணம்

செம்மையாம் நீலிப் பாசாணஞ் செப்புவேன்
உண்மை கெவுரி உடலிங்கம் வீரமும்
வன்மையாங் கெந்தி வளர்சீலை தாரமும்
நன்மையாய் சூதமும் நாகமுங் கூட்டிடே. 275

கூட்டிக் குழையக் குமிற பொடித்திடு
போட்டிடு குப்பியில் பொறுத்த மணலிடு
நாட்டிடு தாழியில் நல்மணல் கொட்டியே
மாட்டி நீதியை மயங்க யெரித்திடே. 276

யெரித்திடு சாமம் ரெண்டரை தண்ணிலே
குறித்த சரக்கு குருகவே கட்டுண்ணு
மெரித்த அனலு மிதமாய்க் குளிர்ந்தபின்
தரித்தநல் குப்பியைத் தகர்த்தே யெடுத்திடே. 277

யெடுத்திடு கட்டியை யின்பங் குளிரவே
கொடுத்திடு லோகங் குமிரப் பழுத்திடுந்
தொடுத்திடும் பூசையைச் சுந்தரம் போலவே
முடித்திடுஞ் சாதி முழுநீல வர்ணமே. 278

வர்ணம் நிறைந்த வரிசையைப் போற்றியே
தருண மதாகிய தன்னிலைப் பற்றிடு
சொர்ணம தான சோதனைக் கண்டபின்
சரணம தென்றுநீ தாளினைப் பூசியே. 279

**காக பாசாணம்**

பூசிய காகம் புனைந்த பாசாணத்தை
பேசுவ நேராய் பிரியமுமாய்க் கேளுங்கோ
வீசிய கெந்தகம் விரிந்த மனோசீலை
மாசில்லா வீரம் வடி வெள்ளைத்தாரமே. 280

தாரமாஞ் சூதமுங் தன்னாகப் பச்சையும்
பாரமாய்க் கூட்டிப் பதியப் பொடித்திடு
காரமா மயச் செப்பி லடக்கியே
சாரமாய்ச் சட்டி தனிலிட் டெரித்திடே. 281

எரிப்பது நாலு சாமம் யெரிந்தபின்
குறிப்புடன் சட்டி குளிர யெரித்திடு
குறிப்புட னயச் செம்பைத் தகர்த்திடக்
கருப்புள்ள காக பாசாணங் காணுமே. 282

## சொர்ணபாசாணம்

காணவே சொர்ணப் பாசா ணத்தை
பூணவே சொல்லுவேன் புகழான தங்கமும்
தோணவே வெள்ளைத் தொடுசீலை தாரமும்
பேணவே சூதமும் பெரிதான நாகமே. 283

நாகமும் வீரமும் நயமான காரமும்
பாகமாய் யொன்றாய்ப் படியப் பொடித்திடு
ஆகமாய்த் தங்க அகலி லடக்கிடு
வேகமாய்த் தாளியில் விடுத்து மண்ணிட்டே. 284

மண்ணிட்ட வாகாய் யடுப்பினில் தாளியைக்
கண்ணிட்டு னோக்கி கதிக்க யெரித்திடு
தண்ணோற்று நின்ற சரக்குடன் தங்கம்
ஒன்னோற்றுக் கூடி உருகி யிருக்குமே. 285

இருகி மணிபோ லிருக்கும் புரியது
மருகிய லோகத்தில் மாட்டிடத் தங்கமா
யுருகிய நல்மணி ஒன்றான பூரண
தருகியே சொர்ண பாசாணத் தங்கமே. 286

## லவண பாசாணம்

தங்கம் லவண முகிலான சத்துக்கேள்
பொங்கிய காரமும் புகழானச் சாரமுந்
தங்கிய வீரமுந் தருவானப் பூரமு
மங்க மனோசிலை யரிதான சூதமே. 287

சூதமும் லிங்கமுந் துடியாம் வெடியுடன்
நீதமாய்க் கூட்டி நிறுத்துப் பொடித்திடுப்
பாகமாயங் குப்பியில் பதித்துமண் சீலைசெய்
சீதமண் தாளியில் செலுத்தி மண்செம்மிடே. 288

செம்மி மணலிட்டு சீரா யடுப்பினில்
கம்மி யிராமல் கதிக்க மணலிடு
வெம்மி முச்சாமம் வெந்து உருகிடுங்
மொம்மிய குப்பியைக் குணமா யெடுத்திடே. 289

யெடுத்திடு குப்பியு மிளகி யுருகியே
தொடுத்திடு கட்டியாய் சுருக்கி யிருந்திடு
மடுத்திடும் வேதைக்கி ஆதி மயமிது
படுத்த லவணம் பாசாணச் சுண்ணமே. 290

**நாக பாசாணம்**

சுண்ணமாம் நாகந் துலங்குபா சாணத்தைத்
திண்ணமாய்க் கொள்ளும் சிவமான சூதமுங்
கண்ணான லிங்கமுங் கார்வங்கமப் பச்சையும்
பொன்னான தாரமும் பொட்டிலுங் காரமே. 291

காரமோ டொன்றாய்க் கடுக பொடித்திடு
பாரமாங் குகையில் பதித்து மேல்மூடியே
சாரமண் சீலை சமத்தாய்ப் பொதிந்தபின்
சீராய்க் கெசபுடம் செய்தனல் மூட்டிடே. 292

மூட்டிய னலது முதிரக் குளிர்ந்தபின்
நாட்டுங் குகையை நயமா யுடைத்தெடு
பூட்டு மருந்து பொன்றி யுருகியே
வாட்டிய யீயம்போல் வலிந்து இருக்குமே. 293

இறுகி மணிபோ லிருந்திடுங் கட்டிதான்
பருகிய நாகப் பாசாண மானது
சொருகிடி லோகந் தோன்றப் பளுத்திடுங்
குருவுரை கண்டுதான் கூட்டி முடித்திடே. 294

முடித்த பாசாண முப்பத்தி ரண்டுமே
வடித்த மெழுகுபோல் வகைக்குமூன்று சொன்னேன்
அடுத்த முறையிது ஆரு மொழிந்திலார்
யெடுத்த முடிவிது யெண்ணூறும் பார்த்திடே. 295

எண்ணூறுங் பார்த்தவர்க்கிடர் இனி யில்லை
தன்னூ ரறிந்திடுந் தானந் துலங்கிடும்
கண்ணூர் திறந்து கற்பூர தீபமாம்
விண்ணூர் மடபதி மெய்ஞ்ஞான தேசியே. 296

தேசிகன் சொன்ன சிவஞான போதகம்
நேசம தாக நினைவி லறிந்தபின்
வாசிதன் னொளிபோல வசனித்த யெண்ணூறு
பேசிய மந்திரம் பெரிதாம் பொருளிதே. 297

பொருளிது வென்று போன்றினார் சித்தர்கள்
திருவான மந்திரஞ் செகத்தினி லறிந்தால்
உருவான மானிட முளரிப் பசப்பியே
தருவாம் நிலைதனைச் சாற்றார்கள் பாவியே. 298

பாவிபல நூலைப் படித்து பலந்தன்னைப்
தாவி யறியாமல் களப்பட்டு விழுவான்
கூவிய சொல்லைப் குறியாய் மதியாமல்
ஆவி பதறி ஆசிப்பான் கோவியே. 299

கோபிகள் சென்று நிலைவல் தவிப்பான்
தாபித மான சமைய மறிந்திலான்
நாபிப் பொருளை நங்கென்று ருத்திடான்
தூபியில் தீபந் துலங்கான துரோகியே. 300

துலங்கும் வழியைச் சொல்லுவேன் கேளு
நலங்கொண்டு மூலம் நடுவே பிடித்திடு
வலங்கொண்டு அந்த மதியை யிறக்கியே
தலங்கொண்ட பூரணந் தானது நந்தியே. 301

நந்திக் கொழுந்து நடுவான மூச்சுடா
உந்திக்குக் கீழே ஒளிகொண்ட வெண்மதி
அந்திக்கி முந்தி அறிவான பூரணஞ்
சிந்தித்து வாசியைத் தீபத்தில் வைத்திடே. 302

வைப்புச் சரக்கு வகையுடன் சொன்னதைத்
தப்பு வராமல் தனதா யறிந்திடு
அப்புனில் உப்பு அமந்திடும் மாறுபோல்
செப்பிய மந்திரஞ் சேர்வுஞ் சித்தியே. 303

சித்தியதாக சிறந்து பிறந்திடும்
முத்தி சரக்கின் உண்மையைச் சொல்கிறோம்
அத்தி கற்கடக மறிவான கொளகம்
வேத்திய தாரம் விசையான சூதமே. 304

சூதான கெந்திதுடி வீரப்பாசாணம்
மாதாவை கிராந்தம் வடித்தால் பாசாணம்
சீதமுற தஞ்சீர் பந்த பாசாணம்
கோதைத் தொட்டிக் குதிரைப் பாசாணமே. 305

பாசாணஞ் சங்மாம் பகுத்த கெ[illegible]யாம்
வாசான துத்தம் வங்ககந்தப் பாசாணம்
கோசம் பவண்குரு கொடிலிங்கப் பாசாணம்
சாதரசக் காண்டத் தாள மெண்ணுமே. 306

எண்ணு மனோசிலையே காலின் பவலொடு
கண்ணுங் காலாங்கி கற்பரி அஞ்சனம்
விண்ணுங் கச்சாலம் விரைசீ தங்கமாம்
சிண்ணு காரமுகில் சிலர்மத உண்ணுமே. 307

உண்ணிய அப்பிரகம் யேகாந்த வெள்ளையுஞ்
சொன்னதன் ணாண்டுச் சுயமாய்ப் பிறந்து
தன்னருள் தன்னால் தனித்தப் பாசாணத்தை
உண்ணியே பார்த்து உறுதியாய்க் கண்டிடே. 308

உறுதி யெட்டெட்டு முகந்த பாசாணத்தில்
சுருதியாய் வைப்பினில் சொன்னதென் னான்குதான்
குருமுறை தானென்று குவிந்து மனதில்
பெருமை யெண்ணூறைப் பேணிப் பணிந்திடே. 309

## கார சார விபரம்

பேணிப் பணிந்துப் பலமாக நின்றிடு
ஆணிப் பொண்மாத்து அதிகத் தெரிசனம்
காணிக்கைக் கொண்டு கடல்மலை ஓடினும்
பேணித் துருவம்போ லெண்ணூறுங் கிட்டுமே. 310

யெண்ணூறு மந்திர மிருளை யகற்றிடு
மெண்ணூறு மந்திர மேக நிறாமய
மெண்ணூறு மந்திர மின்பச் சுடரொளி
யெண்ணூறு மந்திர மேகாந்த தீபமே. 311

யேகாந்த தீப மிருளை யகற்றிடு
மேகாந்த தீப மென்றிசை யண்டமாம்
யேகாந்த தீப யிருதய மானது
யேகாந்த மாக யெண்ணூறும் பார்த்திடே. 312

எண்ணூறுக் குருதிபோ லதுவுஞ் சொல் லாதய்யா
கண்ணூறு வராது கருணை வளர்ந்திடும்
நண்ணும் பொருளிது நற்குறி தீபம் போல்
பண்ணும் பொருளிது பாரிதுக் கொவ்வாதே. 313

ஓவ்வாக் கசடர் ஊனில் மிகுந்தவர்
செவ்வா கமத்தின் சீரது கேட்டவர்
கவ்வா பொருளைக் கவின்மட மாந்தர்கள்
எவ்வாறு கந்தாலு மெளிதாய் இகந்திடே. 314

இகழாத கார சாரத்தி யல்புகேள்
அகலா வழலை ஆதிப்பூ னீருடன்
புகழாகச் சாரமும் பொருள் சத்தி சாரமும்
பகலவச் சாரமும் பதிகாசச் சாரமே. 315

சாரமே யவச்சாரம் சீனமுங் காரமும்
கதித்த நல்சூதனும் பார்கற் பூரமும்
பதிவாய் அமுறியுஞ் சிறுகல் லுப்புச்
சிறந்த இனங்களே சிந்தித் திணங்கியே. 316

இணங்கியே இந்துக் கேதுவாம் வளகியுங்
குணங்குமே சவுடு கோதிலா லவணமதில்
வணங்குமே நன்றாய் வடிந்து இனங்களே
பிணங்கும் பிடர்ப்பு பொசிந்து லவணமே. 317

லவணம் பொன்னம்பர் நாறு மீனம்பர்
தவன கடல்நுரை தான் காய்ச்சு லவணமுங்
கவனத் துடனே காரசாரங் கள்தான்
புவனந் தனில்வளர் பொருளிரு பத்தஞ்சே. 318

அய்யஞ்சு கார சாரத் தட்வுகள்
மெய்யஞ்சு பார்த்து வேண்டி யெடுத்திடு
செய்யுந் தொழிலுக் கிதுமூல மாகிடும்
வையகந் தன்னில் வளருப்புக் கண்டிடே. 319

கண்டிடு மூலங் கருணை பராபரம்
நின்றிடு மந்த நேரமனை தன்னிலே
சென்றிடு வாசி தீபக் கொளுந்தினில்
ஒன்றிடுந் தேகம் உறுதியாஞ் சித்தியே. 320

## உபரச விபரம்

சித்திக்கு ரேசகம் சிவமய மாகிடும்
பத்திக்கும் பூரகம் பதிவானி சத்தியாம்
முத்திக்கும் கும்பக முதலாம் பராபரம்
சுத்திக்கு மூலச் சுடரொளி தன்னிலே. 321

தன்னிலை வன்னி தானந் தொடுகுறி
விண்ணிலை யந்த விபர மறிந்திடு
முன்னிலை யான முத்தி நடுமனை
கண்ணதின் கண்ணின் கருணை பார்த்திடே. 322

பார்த்திடு முபரசம் பண்ணூற் றிருபதுஞ்
சாத்திடக் கேளு தன்னருள் தன்னினால்
மாத்துரு பச்சை வருபொன் னிமிளையுங்
காத்திருங் கஞ்ச லோக நிமிளையே. 323

நிமிளை ரசிதம் நேர்காந்த நிமிளையுந்
தமிழ்ப் பொன் னப்பிரகம் கடிய சிகப்புடன்
தமிளக்கு ருஷ்ண வேதந் தன்னூசி
காந்தம் மிளவாகக் காந்த உருளையே. 324

உருளைக் கறக்காந்த முகந்த கல்நாரு
தருசாத்திர பேதி சலாசத்து கல்மதம்
கருஅஞ் சனக்கல் கருங்கல் படிகமும்
வருக்க காணீரில் வளராக வர்க்கமே. 325

வர்கங் கெருட வருபட்சி ஓடு
சுத்த யெலும்பு சுகமாயிரஞ் செங்கல்
நத்தை கிளிஞ்சி நல்லாமை முட்டை
உத்தமம் நன்று உடனாக வண்டதே. 326

வண்டானைக் கொண்பு மாட்டுடன் பண்ணியுங்
கண்டாகக் கலம்கொம்பு கதித்த பூனாகமு
மொன்றான யிந்திரமுடன் பல்லு செவ்வட்டை
நன்றாந் தவளை நற்கோழி கரடியே. 327

கறடு நற்சங்கு கதித்த நல்சிப்பியுஞ்
சறடு நவரத்தினந் தனிவகை ஒன்பதும்
நிறடு கெண்டகச் சீலைநேருஞ் சுடலைக்கல்
மறடுகள் மஞ்சள்கல் மாக்கல்லு தேக்கல்லே. 328

தேக்கு தவளைக்கல் சிலவங்கஞ் சிலனாகம்
வாக்கண்ம பேதிவாளர் சத்தி பேதியுங்
தாக்கும் பொன்பேதி தருமாங்கிஷ பேதி
பூக்குமு வர்மண் பூசுகறக் கிட்டமே. 329

கிட்ட கருமணல் செம்மணல் சுத்தமண்
திட்டமுன் னாட்டுக்கல் சீறுகரு வண்டு
பட்டெலி முள்ளூ பரும்பன்றி முள்ளூடன்
சட்டங் கடல்நுரைத் தான்மீ னெலும்புமே. 330

எலும்பு முள்சங்கு யியல்புகோ ரோசினை
களும்புத் தம்பளக் கருணாகப் பச்சையுஞ்
செளும்புகள் மரகதஞ் சேர்வெள்ளிச் சுக்கான்
களுங்காகத் தண்டு காகாத சீலையே. 331

சிலைவளர் கண்டா மிறுகங் கலப்பர்
சிலையுங் கடுமந்தார சிலைக்கு மாங்கிசச்
சிலைமலை வளரசா ளைக்கிராமந் துளிர்கல்
துலைதெரி படிக்கல் தூவியே காவியே. 332

காவிய செம்பு மணல்நாக மண்ணுடன்
தூவிய வங்கமண் துள்ளும் வெள்ளியமண்
மேவிய வெள்ளைமண் மேருவா மேமமண்
தாவிய லோகமண் தனிமயி லிறுகுமே. 333

இறுகுகருஞ் சுக்கானி யல்பான காரணக்கல்
குருகு குருந்தக்கல் கூறுவே னின்னுங்கேள்
திருகுமா ரசித சிலையேமச் சிலையோடும்
மருவும் னாகச்சிலை வளர்வங்கச் சிலையே. 334

வங்கம் வெள்ளியச் சிலையாம் அயச்சிலை
அங்கந் திராச்சிலை அணிவெங் கலமலை
தங்கும் பித்தளை தனிச்செம்பு மாமலை
சங்க முபரசந் தானூற்றி ருபதே. 335

நூத்தியிரு பதுரச முண்மையாய்க் கண்டபின்
சாத்திய வாத முந்தனில் வசிஅஞ்சண
மாத்து மறையுடன் வகை நாலுஞ்சித்தியாம்
தேத்திய மூலம் சிக்கெனக் காணுமே. 336

காணும் புருவக் கமலமூத்த மூர்தமுந்
தோணும் நாற்றீயந் தொடுகுறி தன்னிலே
பேணவே வாசி பிரளா திருத்திடி
லாணுவம் நீங்கி அதீதமாஞ் சித்தியே. 337

சித்திக்கு மூலஞ் சீருடன் சொல்வேன்
முத்தி நடுவதில் முன்னிலை பத்தியே
பத்திய தாகப் பரம்பதி யென்று
சித்தம தாக சிம்மென் னின்றிடே. 338

நின்றிடத் தியானம் நிலைக்கு மீதுதனில்
வின்றிடப் போகா விண்ணிடி தான்விழும்
மண்டமும் பிண்டமு மடங்குமித் தியானமாங்
கண்டிடு ஆதிக் கருணைப் பொருளிதே. 339

கருணைப் பொருளிதைக் கறக்கிச் சிவமதுக்
கருணைப் பொருளதாய்க் கண்டிடச் சொல்வோங்
கருணை அங்உங் அம்மென்று காரணமாய்க்
கருணை வளர்ந்திட உகாரசிவஞ் சித்தியே. 340

சித்தி சிவமது சிமதி லேற்றிட
முத்தி கொழுந்து முனைகொண்டு வாவியே
பத்திச் சுழியைப் பகுரெண் டுறுத்திடும்
நித்திய தீபம் நிலைக்கும் நிலையிதே. 341

நிலையதைக் கண்டு நினவாய்ச் செவித்திடு
கலைபணி ரெண்டுங் கருத்தி லடங்கிடுந்
தலைதனில் தீபந் தானே துலங்கிடுந்
துளையில்லை நெத்தித் துருவ மதாமே. 342

தாமே துருவந் தன்னிலை கண்டபின்
நாமே றுண்டு நடுமனை சித்தியாம்
ஆமென வாசி ஆனந்தப் போதமாம்
வாமம் பெருகி வளரும் பூரணமே. 343

பூரண மான புதுமலர் வாவியைக்
காரண மாக தனதா யறிந்தபின்
சீரண மான சிந்தைத் திறப்படும்
மாரணஞ் செய்து மதியைக் களைந்திடே. 344

களைந்திடும் போது காரண ரவியை
அளைந்தது போற்றி ஆவியைக் கண்டால்
விளைந்திடும் பிறவி வேரது அத்திடும்
துளைந்திடும் வாசினூ லேணி யாமே. 345

ஏணிப் பளுவை யிதமா யறிந்தபின்
ஆணித் திறத்தால சையா திருத்திடும்
பூனித்த மலரில் புகுந்துற வாகினால்
தோணிக் கரசன் துலங்குவான் சித்தியே. 346

சித்தியாம் பூரணஞ் செப்பும் வகைகேள்
சத்தியுஞ் சிவமுந் தன்னோடு பூரமும்
நித்தியம் போற்றி நினைவை யறிந்தபின்
பத்தி நின்றய்யம் பதறி ஒடுங்குமே. 347

ஒடுங்கும் நிலைதனி லோடி ஒடுங்கினால்
அடங்கிய வாசி யதனுள் ளடங்கிடு
மடங்குந்தி ரேகத்தை மாதர் விந்துவில்
ஒடுங்கும் யோணி உண்மைய தாகுமே. 348

## துருசு சத்துரு மித்துரு

ஆகுந் துருசு அடங்கிய சத்துரு
வாகுஞ் சவுடு பருதொட்டி அஞ்சணம்
வேகு மினங்கள் சீனஞ் சூடனும்
ஆகுநல் அப்பிரக பாசாணக் கல்லுப்பே. 349

உப்பு யிந்துப்பு உருகாந்த நாகமுந்
தப்பு நல்வங்கஞ் சவுக்காரந் தன்னொடு
மெய்ப்பாந் துருசு வேண்டிய சத்துரு
ஒப்பான மித்துரு உண்மையைக்கேளுமே. 350

கேளரி தாரங் கெடிசாரக் காரமும்
வாழும் நற்சூதம் வளர் கெந்தி
வீரமும் நாளுங்குபரி நற்சிலை பூரமுந்
தாளுங் கெவுரி நற்பண்ணை லிங்கமே. 351

லிங்கமுடனே நேரான மித்துரு
அங்க மதாக அறிவா லறிந்துநீ
சங்கை யுடனே சந்துருக் கொண்டிடும்
பங்கமாய் மித்துரு பதறி யெளுப்புமே. 352

யெழும்பிய சாரத் தியல்பான சத்துரு
நலம்பிறச் சொல்லுவேன் நல்ல கல்லுப்புடன்
கொளம்பிய மிந்து கூறும் படிகியும்
வளம்பிய காந்தம் வங்கம் வளகியே. 353

வளகி யேரண்ட மடித்திடுஞ் சுக்கான்
பளகு கல்சுண்ணம் பாரில் கடல்நுரை
அளகு கிளிஞ்சி அப்பிரகந் தன்னொடு
உளையுஞ் சவுடு உடன் காரீயமே. 354

ஈயமோ டெல்லா மிலங்கிய சத்துரு
தாயக மாக தன்மை யறிந்திடு
நேயம தாக நின்றிட மித்திரு
வாய்மை யறிந்து வகையுடன் கேளுமே. 355

## வெடியுப்பு சத்துரு மித்துரு

கேளடா தாரங் கெடிசிலை கெந்தியும்
வாளடா வீரம் வளர்வெடி காரமும்
நாளுடன் லிங்கம் நல்ல கெவுரியும்
சேலுட நாகமுஞ் செப்ப நிமிளையே. 356

நிமிளை காரியம் நின்ற கல்நாருடன்
குமிளை அவத்தங் கொடியநல் மித்துரு
தமிழை யறிந்து தனதாய் வகையுடன்
உமிழப் படாமல் உகந்து நீபாருமே. 357

பார வெடியுப்புப் பணியும்நல் சத்துரு
காரியம் ரெண்டுங் கடியதோர் சூடனுஞ்
சாரச் சவுடு குளிப்பச்சை வெள்ளியுங்
கோரக் குரும்பு கூர்காந்தத் தொட்டியே. 358

தொட்டிய செம்பு சூரசிலை கெந்தி
கட்டிய காந்தம் கடுஞ்சிங்கி ராசா
கொட்டிய காந்தங் கொடுசுரை கெந்தியும்
விட்டதீ முருகல் வேண்டுஞ் சத்துருவே. 359

சத்துருத் தன்னைச் சாத்தினோண் நன்றாய்
மித்துரு பாகம் விளங்கிடக் கேளுஞ்
சுத்தும் படிக்கிச் சொரிந்த கல்லுப்பு
முத்திய காரமும் லிங்கமும் வீரமே. 360

## கல்லுப்பு மித்துரு சத்துரு

வீரான துத்தம் விளங்கிய தாரமுங்
சாரணைத் தந்தங் கடல்நுரை நாகமும்
நாறாம் நிமிளை நவரோமக் கம்பளி
பாராண மித்துரு பார்த்து முடித்திடே. 361

முடித்த கல்லுப்புக்கு முன்னான மித்துரு
அடுத்த யிரும்பு அதிபூரஞ் செம்புடன்
தொடுத்த வெங்காரஞ் சொன்ன கெவுரியுந்
கடுத்த நல்நாகம் காந்தமுந் தாரமே. 362

தாரம் நிமிளைதனி வெள்ளைப் பாசாணம்
பார்அ பிரகம் பருலிங்க வங்கமும்
நேரான மித்துரு நிலையை யறிந்தபின்
தவறான சத்துருப் பெருமையைக் கண்டிடே. 363

## கார சத்துரு மித்துரு

தன்னொடு காரச் சத்துரு தன்னையே
விண்ண மில்லாமல் விளங்குஞ் சலாசத்து
மூன்றும் புவியண்ட முடன்கூடன் பூரமுஞ்
சுண்ண வகையெல்லாம் சூள்காரச் சத்துரே. 364

காரத்தின் மித்துரு கட்டுடன் சொல்லுகிறேன்
வாரத்து பாசம் பாசாண வர்க்கங்கள்
சீரொத்த லோகங்கள் சிறந்தமித் துருவிது
நேரொத்துப் பார்த்து நிலைத்து முடித்திடே. 365

## சீனச் சத்துரு மித்துரு

நிலைத்துநலச் சீனத்தில் நேர்மையின் சத்துரு
உலைத்ததோர் காரத்தின் உகமை அறிந்திடு
அலைத்தநல் மித்துரு அப்படி ஆகிடும்
பிலத்துடன் அறிந்துநீ பேணிக்க ணங்கண்டிடே. 366

## தங்கச் சத்துரு மித்துரு

கண்டிடு தங்கத்தின் கதித்த நல்சத்துரு
விண்டிடு நாகம் விளங்கிய லிங்கமும்
பண்டுறு பச்சையும் பகுத்த நல்நிமிளையும்
இன்று நலக்கெவுரி யினங்களும் வெள்ளையே. 367

வெள்ளை சவுடு வியதாள கமுந்
துள்ளிய சிங்கி துலங்கு மனோசிலை
கொல்லு மப்பிரகங் கொடிய கிளிஞ்சியும்
துள்ளிய குதிரைப் பல்சூதமு மண்டமே. 368

அண்டமாங் கெந்தி அசோமுகங் காந்தமும்
பொன்றிய வீரமும் பொன்னம்பர் சத்துரு
நன்றிது சத்துரு நயமாய் புனைந்திடக்
கொன்றிடு மென்றுங் குறித்திடுந் திண்ணமே. 369

திண்ணம தாகச் செப்புவேன் மித்துரு
சொன்ன சத்துருவதை தொகுத்து அகத்தியே
யென்ன சரகத்து மித்துரு வென்னதன்
தன்மை யாகச் சாதித்துப் பார்த்திடே. 370

## சூதச் சத்துரு மித்துரு

பார்த்திடு சூதம் பரிசிக்குஞ் சத்துரு
சேர்த்திடு வெள்ளை கெவுரி நல்சிங்கியுஞ்
சாத்தியச் சத்தி சாரங் குதிரைப்பல்
காத்தி டிரும்பு கடுவெடி காந்தமே. 371

காந்தம் பொன்னம்பர் கருசார சூடனும்
நிறந்து கற்சவுடு நிமிளைபூ னீருடன்
பாந்துரு வாகப் பத்தியச் சத்துரு
சேர்ந்த றிந்தனை செலுத்துவ திண்ணமே. 372

திண்ண மதாகிச் சிறந்திடும் மித்துரு
நன்ன அப்பிரகமும் நாகமுங் காரியு
மன்னைய கெந்தக மணிசீலை வங்கமும்
திண்ணமாகத் தொட்டிய்யுஞ் சார வீரமே. 373

வீரநல் வெள்ளியும் விளங்கிய செம்புடன்
கார்பச்சை சாரமும் காரமுந் துத்தமும்
பாரஞ்சனக் கல்லும்தீ முருகலுந்
சேரிது வெல்லாஞ் மித்துரு வென்னே. 374

யென்னமோவென் றுருகா திரும் புக்கு
விண்ணமாஞ் சத்துரு வெங்காரம் வெண்கலம்
கன்னப் பிறகமுங் காரண்டத் தோடுடன்
யென்ன நிமிளை யுமோசிது வங்கமே. 375

வங்கங் கிளிஞ்சி வளர்கெந்தி சாரமும்
அங்கந் திருச் சிங்கியான் கெவுரியும்
பொங்கிய வெள்ளையும் பூக்கும்பூ னீறு
செங்கை சலாசத்து சேரவுஞ் சத்துதர. 376

சேரு மிரும்புக்குத் திறமான மித்துரு
நேர் வெள்ளி நாகமும் நெடிய கெவுரியும்
பார்கந்தப் பூரம் பழுத்திடு செம்பும்
கூராசா வர்கங் கொடிய பூனாகமே. 377

## காந்த சத்துரு மித்துரு

நாகமாந் தங்கம் நடுக்கெந்தி செம்பும்
வாகுடன் சூடன் மயூரச் செம்புடன்
பாகுடன் கூட்ட பருத்த யிரும்புக்குத்
தாகமித் துருவன் சாத்துமென் னூரியதே. 378

எண்ணிய காந்த மியல்பான நாலுக்குத்
தண்ணிய மித்துரு சத்துருக் கேட்டிடு
நன்னு மிரும்புக்கு நாட்டு வகையதை
உன்னி உரைத்து உண்மையாய்ப் பார்த்திடே. 379

## நாக சத்துரு மித்துரு

பார்த்திடு நாகம் பதறிய சத்துரு
போர்த்து கிளிஞ்சி பொருந்திய அண்டமுங்
காத்து வெடியுங் கல்லுப்பு வங்கமு
ஆத்தும் படிகம் அருளான தங்கமே. 380

தங்கத் தறாவிந் தனிவெள்ளி வெங்கலம்
பொங்கு நண்டோடு புதுவீரச் சிங்குடன்
அங்க மிளகும் பின்வெள்ளை பாசாணம்
மங்கு வளகில் வளரன்ன பேதியே. 381

வேதித்த னாகம் பெருமைதன் சத்துரு
கோதித்துப் பார்த்து புருவத்தில் நின்றிட
வாசித்த மித்துரு வலுவை வகையதைப்
போதிப்போம் கண்டிடும் பூரணந் தன்னிலே. 382

தன்னான னாகமுந் தனிஅப் பிரகமும்
பொன்னும் நிமிளை பொருந்துஞ் சலாசத்து
சென்னிய சூதம் செம்பு கெவுரியுங்
கண்ணான கெந்தி கடும்பூ னாகமே. 383

ஆக மயூரச் செம்புக் குனாகம்
வாகமிச் சாரம் பதிபா லிவையெல்லாம்
மேக மிரும்புக் கியல்பான மித்ரு
ஆகம தாக அறிந்துகொள் ளுண்மையே. 384

உண்மைக் காரிய முருளஞ்சத் துருவகை
நண்மையாய்ச் சொல்வோம் நடுமையக் காந்தந்
தன்மை கிளிஞ்சி தருமண்ட வத்தமும்
வண்ணங் கெவுரி வருந்ததைக் கெந்தியே. 385

கெந்திகற் கண்ணங் கேளுஞ்சத் துருவியது
பத்திய மித்துருப் பகர்வது கேளு
அந்த மயூர மதினுட செம்புவும்
குந்து பூனாகங் கூர்னாகச் செம்புவே. 386

செம்பு வெள்ளியுஞ் சேர்வங்கச் செம்புவே
வம்பு மித்துரு வெண்வகை அறிந்திட
அம்புவி தன்னி லறிவார் பெரியோர்கள்
நம்பு அவர்பதம் நாட்டங்கள் காணுமே. 387

## வெள்ளீயம் சத்துரு மித்துரு

காணும் வெள்ளீயங் கருவாய் செம்பண்ண
வேணுமே சத்துரு மித்துரு உனக்காம்
பேணு காரீயமும் பேருந்துதச் சூதமும்
ஊணுமே சத்துரு மித்துரு உகந்திடே. 388

உகந்த சரக்கை உரிமையாய் கேட்டிட
மிகிந்திடுஞ் சத்துரு மித்துரு நன்னாளில்
அகந்திடப் படவென்ற அமர்த்தி எடுத்திட
சிகந்தனில் சித்தனாய் கித்து பெருகுமே. 389

பெருகுஞ் சிகமதில் பேறான சித்தர்கள்
தருகியே மித்துரு சத்துரு தன்னையே
உருகியரிந்து உண்மையாக் கார்த்திடார்
திருகும் பிறவியில் செனித்தழல் வார்களே. 390

உழன்று தவித்து உறுதி யறியாமல்
தழன்று அறிவது தானே மயங்கிடுஞ்
சுழன்றிடுங் காயச் சுழியில் அமைந்திடுங்
கழன்றிடும் வாசி களருஞ்சத் துருவதே. 391

சத்துரு மித்துரு தன்னை யறிந்துநீ
புத்தியுடனே நீபொருந்த அகத்திடு
சித்தர் அருளாலே அகற்றுவரெண் டல்லால்
தத்து மனதுக்கு வளருஞ்சா ரணையிதே. 392

சாரணை தீத்திடு தரும ணேண்மணிக்
காரண மாகக் கவுத்தி லடங்கிடுஞ்
தாரண மான தறுவும் பிலத்திடும்
பூரண வாசியும் புத்தியிற் செல்லுமே. 393

புத்தியில் வாசி புகுந்து றவாகினால்
நெத்திக் கண்ணின்று நேரே துலங்கிடுஞ்
நத்தும் புருவ நடுவின் இடமதில்
உத்து நீபாரு ஒளிகொண்ட தீபரே. 394

தீபமிலங்கு தீர்க்கமது சொல்லுவோம்
பாவமிருந்த பரும்புளி யெண்ணையுங்
கோபமிகுந்த கொடும்பாக்கிலைச் சுண்ணஞ்
சாபம் விளைக்குந் தனிமீ னிறைச்சியே. 395

யிறைச்சி முதலாய் இவைக ளற்றிநீ
நிறை சேர்த்தமுது நேருடன் கொண்டிடு
உரை சத்து கற்பமுறுதியாம் பூரணம்
மறைசித்து பாரு மானந்தப் போதமே. 396

போதமாய் நின்ற பூரணந் தன்னையே
நீதமாய்க் கண்டு நின்மனம் போற்றி
சிவபாத மடிமுடி பத்திய தீபமும்
சோதி மயமெனத் தூன்றிய னாதமே. 397

நாதமும் விந்துவும் நயமா யறிந்து
நீதமா யந்த நிலையினில் வாசியைப்
பேதம் வராமல் பினைத்து நிறுத்தினால்
பூத மொடுங்கிப் பொருந்துஞ் சுழியிலே. 398

சுழியினில் வாசி சுழன்று உருகாமலே
வழிதுகை கண்டு வாசியை யேத்திடு
அழிபடு தேக மாதி நிலைத்திடு
முழி நடுகிரக முன்னிலை பின்னே. 399

பின்னிலைப் பிடறி பெருகிய பூரணந்
தன்னிலை யதுவெனச் சார்ந்து குறித்திடு
வன்னியும் வாசியும் வளரும் குகையது
சென்னியின் பாகந் தெட்சினை யாகுமே. 400

ஆகும் நல்தெட்சணம் மகபதி வீசனும்
பாகுட னறிவாய் வளரும் நல்தீபமாய்
போகும் பெருகியப் பூரணக் கொங்கையர்
யேகமா யெங்கு மிகுந்ததைக் கண்டிடே. 401

கண்டு பிடித்துக் கனலை யெறித்திடு
அண்டியை ஆவி யதனு ளடங்கிவிடும்
மண்டிய வாசி மதியுடன் சேர்ந்து
நின்ற ரவியிடம் நேர்ந்தது உண்மையே. 402

உண்மை யிப் படியென் றுகந்துநீ வாசியைத்
தன்மை யிதென்று சார்ந்து செலுத்தினால்
சின்மய மாகி திறக்குமஞ் சிவயோகம்
நன்மை யிதெனவே நாட்டங்கள் கண்டிட. 403

நாட்டக் கணங்கூசும் நன்றா யுருட்மேல்
யேத்திடு வாசியை யேகாந்தப் போதமாய்
வட்டங்களில்லை மனையுந் திடப்படு
தேட்டங் களென்ன சிவயோக சிந்தையே. 404

சிந்தை பஞ்சாட்சர மந்திரத்தைச் செப்பிடு
அந்தியுமஞ் சந்தியும் அந்திநிலை யில்நிலச்
சொந்தமா மூலச் சுடரா யெழும்பியே
புந்தியில் நின்றது பூரண மாகுமே. 405

## செய்நீர்

பூரண தீட்சை கோதிரு மெண்ணூறில்
பூரண மென்ற புதுமை அறிந்திலார்
பூரண மான புதுவை அறிந்தவர்
பூரண கொங்கையைப் போதிப்பான் கண்டிடே. 406

கண்டது பத்து நாலு சரக்கு
கொன்றிடச் செயநீர் குருமுறை சொல்லுவேன்
மன்றதோர் பூவில் நேர்வீர சாரமுஞ்
சென்றிடப் பொடித்துச் சேரு பீங்கானிலே. 407

பீங்கானி லிட்டுப் பேணிப் பணியில்வை
பாங்கான செய்நீர் பருகிப் பெருகிடுஞ்
தூங்காமல் நின்று சொலித்திடும் நீரதை
வாங்கிடு குப்பியில் வளமதில் ரொம்பவே. 408

வளமதில் சரக்கை வாட்டித் துவைத்திட
சி[illegible]தில் [illegible]மை பாய் தீர்க்கமாய்க் கட்டிடும்
நலமுடன் கட்டிள நல்ல சரக்கினில்
பலனதி லுண்டு பக்குவம் கண்டிடே. 409

கண்டிடக் கேளு கதித்த மெழுகுநீ
உண்டிடும் பூவும் உடனஞ்சாரப் பச்சையும்
விண்டிடும் பூரம் விவரிக்க ஒன்றாகவே
சென்றிடக் கூட்டிச் செய்நீர்விட் டாட்டிடே. 410

ஆட்டி வழித்து அகண்டபீங் கானில்வை
நாட்டும் பணியில் நல்ல சிவமாகும்
மூட்டு நல் குப்பியில் உடன்வீரன் தாக்கிடு
தேட்டுடனினிது சிவந்திடும் பாரே. 411

## வெடியுப்புச் சுண்ணம்

பாரு செய்நீரில் பட்டச் சரக்குகள்
நேரு டனாட்ட நிலைத்த மெழுகதாஞ்
சீருள்ள மென்நாகத்தில் சித்து விளைந்திடும்
காரு நவலோகம் கதிக்கப் பழுக்குமே. 412

பழுக்குமே வகைதனைப் பகருவேன் மக்களே
அழுக்கு மணத்தை அறுத்த கற்றிடும்
இழுக்குப் பிறவித் துயரைக் களைந்திட
செழிக்குமுள் மூலஞ் சிவயோகமஞ் சென்றிடே. 413

சென்றிடும் போது சேரச் சிவமயம்
கன்றிடும் போது கல்மண லேமமாம்
விண்டிடும் வார்த்தை விளங்கிய மந்திரம்
நின்றிடும் பற்பம் நேர்தனை கண்டிடே. 414

நேர் வெடியுப்பு நிலையானச் சீனமுங்
கார்சிப் பிச்செயநீர் கதிக்க கேசரி
வீறுற்ற செய்நீர் விட்டு யரைத்திடு
வாருற்ற சாமம் வகைநால ரைத்திடே. 415

அரைத்ததை வில்லையாக இரவியில் வைத்து
விரைத்திடப் போட்டு விரும்பி யெடுத்திடு
உரைத்திடு ஓட்டில் ஒடுக்கிமண் சீலைசெய்
திரைத்தது உலர்த்தி புடந்தீர்ந்து யெடுத்திடே. 416

யெடுத்திடச் சுண்ணம் என்னன்று சொல்வேன்
தொடுத்திடு முப்புச் சுண்ணத் தினையிது
அடுத்திடச் சரக்கைத் தட்டி நோக்கிடும்
விடுத்த துருசு வெண்மையைக் கேட்டிடே. 417

### துருசுச் சுண்ணம்

கேட்டிடு சுண்ணமு முங்கெடியான வீரமும்
நாட்டிச் சரியிடை நல்லநீர்க் கூட்டியே
ஆட்டியே பச்சை யிந்த யிடைக்கிதைப்
பூட்டி மண்சீலை பொருந்த அழுத்திடே. 418

அழுத்திக் கணக்கு அறிந்து புடமிட
வெளுத்திடும் சுண்ணம் விரும்பி எடுத்திடு
களித்திடுஞ் சுண்ணந் துருசுக்கு நீருவுதால்
தெளித்த சரக்கை தெளிவுடன் பாரே. 419

### சாரச் சுண்ணம்

பார்சாரச் சுண்ணம் பகருவேன் மக்களே
வீறான பூவும் வெடியுடன் பச்சையும்
நேரான சுண்ணம் நேர்சரி யாகவே
காரான சாருமுங் கல்வத்தி லரைத்திடே. 420

அரைத்த மருந்ததை ஓட்டில் பிடித்துநீ
நிரைத்த ரவியில்நீரகாய்ப் போட்டிடு
மறைத்திடில் ஓட்டில் மண்ணது செய்துமேல்
திரத்துடன் புடமிது செம்மையாய் செய்திடே. 421

### கல்லுப்புச் சுண்ணம்

செய்திட்டு பாரு செய்சாரம் நீரியே
கொய்திட்ட சுண்ணங் கொடுஞ்சுறுக் காய்விடும்
வைத்திட்ட வாசிக்கி மார்பாணி யானது
மெய்யுத்த சுண்ணம் விசையான சுண்ணமே. 422

சுண்ணமாய்க் கல்லுப்பைச் சொல்லுவேன் மக்களே
திண்ணமாஞ் சூடனுஞ் சேர்வெடி சாரமும்
வண்ணமாம் பச்சை வளர்வீரந் தன்னோடு
சொன்னக் கல்லுப்புடன் தோன்ற யெடுத்திடே. 423

எடுத்திட்ட ரைத்திடு யேகமாம் நீரதில்
தொடுத்திடு வில்லையைச் சுருள் ரவியிடு
படுத்திடு ஓட்டில் பதியமண் சீலைசெய்
கொடுத்திடு புடத்திற் கொடுஞ்சுண்ண மாகுமே. 424

ஆகுமே கல்சுண்ண மாறு மரிந்திலார்
வாகுடன் பேசி வகையிடு மாந்தரை
பாகுடன் கூட்டிப் பயின்று திரியாதே
ஆகமம் அண்டி அறிந்தே பிழைத்திடு 425

பிழைத்திட வேண்டிப் பேசினேன் மக்களே
நிலைத்திடு காரம் நேர்மையின் சுண்ணத்தை
தளைத்திடு நாதம் தன்னொடு வீரம்
மலைத்தோர் வெடியு மானதோர் பச்சையே. 426

பச்சை சரியெடை பருத்த வெண்ணீரதில்
இச்சையா யரைத்து திருவில்லை போல்
வச்சிடு ஓட்டில் வளம்பிற சீலைசெய்
நிச்சய மாக நிறுத்திப் புடமிடே. 427

புடமதில் காரம் பொருந்தி கதித்திட
மடவுடன் சுண்ண மாறு மரிந்திலார்
திடமான லோகஞ் சினத்தி லுருகிடும்
விடமான காரம் வெண்சுண்ண மார்க்கமே. 428

**காரச் சுண்ணம்**

மார்க்கமதாக வழுத்துரோங் கேளு
தீர்க்கமாஞ் சீனம் சிறந்திடுஞ் சுண்ணத்தை
இயற்கையாய் சொல்லுவோ மினியபூச் சூடனுந்
தீர்க்கமாம் வீரனுந் திறமான கம்பியே. 429

## சீனச் சுண்ணம்

கம்பியோ டொன்றாய் தணக்குடன் கூட்டியே
நம்பியே சீனம நாட்டி யரைத்திடு
வெம்ப உருட்டிடு வெயிலி லுலர்த்தியே
பண்புட னேஅகலில் பதித்தது மண்சீலையே. 430

சீலைமண் செய்து திறமாய் புடமிட்டால்
வாலைய மாக மடித்து யெடுத்திடு
சூள நற்சீனந் தும்பிற மாகவே
வேலைக் கதிகம் வெண்சுண்ண மாகுமே. 431

## நாகச் சுண்ணம்

ஆகுமே நாக மதிகமாஞ் சுண்ணத்தைப்
பாகம தாக பண்புடன் பார்த்திட
வாகுட னாகமுஞ் சூதமுங் கூட்டி
ரகமாம்வீரம் எழில் பச்சைப் பூரமே. 432

பூரமுங் கம்பியும் பொருத்த ஒன்றாகவே
காரமும் நீரில் கதிக்க வரைத்திடு
வாகுடன் கூட்டி வட்டது பண்ணியே
நீரதுகாய நினைவா யுலர்த் திடே. 433

உலர்த்திடும் வில்லையை ஓட்டி லமைத்திடு
பிலத்துடன் மண்ணது பேணிப் பிடித்திடு
குலத்துடன் எருவைக் கூட்டிப் புடமிட
நிலத்தினில் நாகம் நிலையாத சுண்ணமே. 434

## வங்கச் சுண்ணம்

சுண்ணமாய் வங்கத்தைச் சூட்டுகிறேன் மக்களே
திண்ணமாம் வங்குமுஞ் செயசூதப் பச்சையும்
துண்ணாத வீரமுஞ் சூடனுங் கம்பியு
மொன்னாக் கூட்டி உருட்டி யரைத்திடே. 435

அரைப்பது நன்றா யரைத்துத் திரட்டியே
விரைத்திட வெய்யிலில் விரும்பி யெடுத்திடு
திறந்துட னெட்டில் திறமாய் மத்தியே
நிரைத்திடு சீலைமண் நிச்செய மாகவே. 436

### கருவங்கச் சுண்ணம்

ஆக நூறெருவில் அமர்த்திப் புடமிட
வேகமாய் நீரில் வெளுத்திடுஞ் சுண்ணமே
ஆகமந்தோரு மறியாரிச் சுண்ணத்தை
பாகமாய்ப் பார்க்க பழுத்திடும் வேதையே. 437

வேதைக்கு நல்ல விளங்கிய காரீயம்
வாதிக்குச் சுண்ணம் வயணம் படுத்துகிறோம்
நீதிசே ரீயமும் நேர்சூதங் கூட்டியே
சாதிசேர் பச்சையுந் தன்னோடு வீரமே. 438

வீருடன் சூடனும் விளங்கிய கம்பியும்
நேருடன் கூட்டின் எட்டடங் காட்டியே
சீருடன் வில்லைச் சிறக்கப் பிடித்துநீ
தாருட னேட்டில் தரித்துமேல் மூடிட. 439

மூடி மண்சீலை மூடித் தரித்துநீ
மாடுட னெருவில் வைத்துப் புடமிட
கூடே னியம் பக்குழன்று பொருவியே
வாடி யெரிந்து வெளுத்திடுஞ் சுண்ணமே. 440

சுண்ணப் பெருமை சொல்ல முடியாது
விண்ணிருஞ் சூதம் விரைத்துப் படிந்திடும்
நண்ணிய வேதைக்கி நாடுந் திறவுகோல்
எண்ணுந் துரைக்கு யிவைகுரு பீடமே. 441

குருவான பீடங் குறித்திடும் வெள்ளியைத்
திருவான சுண்ணமாய்த் தீரும் வரிசைகேள்
கருவான சூதமுங் கார்வங்கங் கூட்டியே
உருவான வெள்ளியி லொன்றாய்ச் செலுத்துமே. 442

## வெள்ளிச் சுண்ணம்

செலுத்திப் பொடித்து சீர்வெடி யுப்புடன்
கொளுத்திடுஞ் சூடனுங் கூர்பச்சை வீரனு
மழுத்தமாகக் கூட்டி மைய ரைத்திடு
வளித்து உருட்டி வட்டது பண்ணுமே. 443

பண்ணிய வட்டை பானுவில் சுன்றிட
நண்ணிய போட்டு நாடி யெடுத்துநீ
திண்ணமாய் மூடித் தரித்துமண் சீலைசெய்
சென்னியை னோக்கிச் சிவசிவா யென்னுமே. 444

சிவசிவா என்னும் எருவின் புடத்திலே
தவமான சரக்கைக் கூட்டி மொன்றாகவே
அவமாகப் பொன்றி அனலி மடிந்திடு
உவமான மில்லா உயர்சுண்ணம் உண்மையே. 445

## அயச் சுண்ணம்

உண்மையாய்ச் சுண்ணம் உறுதி மதியதை
தன்மையாய்ப் நீற்று தகைமை யறிந்தவர்
நண்ணும் கயிலாச வாசமாய் அயத்தைச்
சுண்ணமாய் நெசமதாக நிறுத்து முறைமைகேள். 446

முறைமைகேள் சூத நாதமும் பாசமாய்
நிறைவாகக் கூட்டிக் காரமும் சாரமும்
திறமையாய் அயத்தை நிறுத்தி அரைத்திடே
விரைவுடன் கல்வத்தில் இட்டுப் பொடித்திடே. 447

பொடித்திட்ட அயத்தைப் போடு சரியிடை
வெடித்திடு முப்பு வீரமும் பச்சையுங்
கடித்திடுஞ் சூடனுங் கணக்குடன் கூட்டியே
வடித்த மெழுகுபோல் வணங்க அரைத்திடே. 448

அரைத்திடும் பழச்சாறு தனுடன் செயநீர்
திறத்துடன் விட்டுத் தீர அரைத்திடு
வரத்துட னரைத்து வட்டது பண்ணியே
உரத்துடன் ரவியி லொன்ற யுலர்த்திடே. 449

### காந்தச் சுண்ணம்

ஒன்றி உலர்ந்து உருண்டிடும் வட்டத்தைச்
சென்றிட அகலின் சேர்த்துமண் சீலைசெய்
நன்றிது வென்று நாட்ட முணர்ந்துமேல்
கன்றியே யெருவிற் சொருகிப் புடமிடே. 450

புடமது நீதான் பொருந்திப் புடமிட
திடமுடன் அயமும் திறமாய் வெளுத்திடு
விடமென்னக் கொடிய வெண்சுண்ண மாகிடுந்
தடமென்ன வேதைக்குத் தானய மானதே. 451

ஆனதோர் காந்த மதிகநல் சுண்ணம்
பலமான காந்தமுந் தேன் தன்னுடன் யிரும்புத்
தொகுத்துப் பொடிசெய்து திரட்டிடப் புவல்வீரம்
காணுமே முப்புவல் வீரம் பச்சையை 452

பச்சையே பச்சையுடனே பரமான சூடனும்
வச்சயிடைக்கி வளமாகக் கூட்டியே
நிச்செயந் தேசிச்சார் விட்டு ஆட்டியே
அச்சமொடுங்க அரைத்து வழித்திடே. 453

வழித்துத் திரட்டி வலையமாய்ப் புடமிடு
முளித்து முருட்டி மூடிவெடி உப்புடன்
வழித்து அரைத்து அடையது செய்து
செலுத்தி யெருவில் செயமாகப் புடமிடே. 454

புடமது கேசமாய்ப் போட்டு எடுத்திடு
திடமான காந்த வளமாய் வெளுத்திடும்
அடிமுடி யொன்றாய் அமந்திடுஞ் சுண்ணத்தைத்
திடமுடன் காண்பவன் சித்தனு மாகுமே. 455

ஆகுமே சித்து அவன்ரேகைச் சித்தியால்
போகுமே வேதை பொன்வெள்ளி ரெண்டுக்கு
வாகுடன் சுண்ணம் வைப்புச் சரக்கது
பாகுடன் செய்து பலனறி வார்களே. 456

வாரான தங்கம் வளம்பிறச் சுண்ணமாய்
கூறான சேதி குருமுறை சொல்லுவோம்
நீறான சூதமும் நெறிய வங்கமும்
பேராக ஒன்றாய்ப் பெலக்க உருக்கிடே. 457

## தங்கச் சுண்ணம்

உருக்கிய சத்தி ஒன்றுடன் ரெண்டுசேர்
நெருக்கிய தங்கம் நேராய் நொருங்கிடும்
முருக்கிய வீரனு முடிவெடி யுப்புடன்
கருக்கிய சூடனுங் காலான பச்சையே. 458

பச்சையொடொன்றாய்ப் பதியக் கல்வத்தில்
வச்ச சரக்கை வளமா யரைத்திடு
காச்சிடும் நீருங் கரும்பழச் சாறு
நிச்சய மாக நினைவால ரைத்திடே. 459

அரைப்பது மைபோ லரைத்துத் திரட்டியே
உருபடவில்லை உலர்த்தி ரவியினில்
திறம்பட அகலில் செலுத்தி மணலிடு
மறைப்புடன் புடத்தில் வாட்டி யெடுத்திடே. 460

எடுத்து மறுபடியிறுக அரைத்துமே
தொடுத்து முன்பல துலங்கப் புடமிடு
அடுத்து நற்தங்க மலர்ந்தும் மலர்ந்திடுஞ்
தடுத்திடுயேம முந்தான் சுண்ண மானதே. 461

ஆனதோ ரேம மடங்கிய சுண்ணத்தால்
வானவர் முனிவர் வரைதெரிந் தேறினார்
கோன வனான குருசாமி சுண்ணந்தான்
பேணுவாய் லோகத்தில் பிணைத்திட யேமமே. 462

யேமத்தை நீத்த யெளிதோயென் மக்களே
வாமனத்தி னாலே மனதை யறிந்திடு
காமத்தை வென்று கருணைக் கண்பார்த்திடே
சேமத்தில் வாசி திக்கும்நல் தீபமே. 463

## கர்ப்ப விபரம்

தீபக் கொழுந்து சிறந்திடும் நாதம்
தூபத்தில் சூதந் துலங்கிய விந்து
நீபத்தி யாக நின்று நிலைதனில்
கோபத்தை நீத்த கும்மெனும் நாதமே. 464

நாதமும் விந்துவும் நலமுடன் கூடினாலே
போதம் நிறைந்த பூரணங் கண்டிடும்
நீதமாம் பூரண நேர்நிலைகண்டபின்
வாதமும் வசியமும் வந்திடுஞ் சித்தமே. 465

சித்தமொன்றாக சிவபதங் கண்டபின்
முத்திக் கொளுந்து முனைகொண்டு லாவியே
பத்திய விந்து பரமான னாதமு
முத்தி உணர்ந்து நின்றாதே ஒன்றாக. 466

ஒன்றாக ரெண்டா யுடனது மூன்றுமாய்
நின்றா டிக்கொண்டு நினைவை அறிந்திலார்
பண்றான சோதிபருதி மதிச்சுடர்
கண்டாரு மில்லை கற்பகத்தின் சாரமே. 467

கற்பத்தின் சாரங் கருதுவோம் மக்களே
உற்பத்தி யான உகமை யறிந்திலார்
கற்பத்தி னில்லா சாரைவெண் சாரைதான்
சிற்பத்தில் காண சிசவயோகஞ் சித்தியே. 468

சித்தம் பெருகி சிவஞான போதமாம்
சித்தம் பெருகி சிவயோக தீபமாஞ்
சுத்தம தாகி துலங்கும் பதிதனில்
சுத்தமாய் நின்ற சுடரான தீபமே. 469

தீபம் நிறைந்த சிவானந்த மூலமாந்
தீபம் நிறைந்த சிவாய சிவமது
தீபம் நிறைந்த சிவாய சிவமதைத்
தீபத்தை நோக்கிச் செலுத்திச் செபித்திடே. 470

செபித்திடக் காலஞ் செப்புவேன் மக்களே
குவித் தெழுந் தையங் கூறுபஞ்சாட்சரம்
அவித்திடு மாலின் அனலும் மேலும்
தெவிட்டும் சிந்தை தளராது திண்ணமே. 471

தளராமல் நீயும் தன்னிலை பற்றியே
தளராமல் அந்த தானங் குறித்திடுக்
களராத விந்தைக் கண்டு செலுத்தினால்
உலராது காய முண்மையில் திண்ணமே. 472

## வல்லாரை கற்பம்

திண்ணமாய் நின்று சிவமது செய்தபின்
உண்ணவே கற்பம் உறுதி மனந்தேறு
மென்னவோ வென்று யிருந்து மருகாதே
பொன்னனி மூலம் பொருந்திய வாசியே. 473

வாசி மனோண்மணி மருவிய சத்தியைத்
தேசமா மாலையில் நிறுத்திச் செபித்திடு
தேசிக னான சிவமது குறுதியாம்
பேசிய சத்தியைப் பிலமாய்ச் செபித்திடே. 474

பிலமான மனதைப் பிடித்துர வாகினால்
குலமான தேகங் குன்றாதொரு னாளும்
நலமான வாசி நாடி வளர்ந்திடுஞ்
தலமான தீபந் தன்னருள் போதமே. 475

போதம் நிறைந்த பூரண வாவியில்
நாதமும் விந்துவும் நாடி யிருந்திடும்
பாத மடிமுடி பத்தித் தெழுந்த தால்
வாதமும் வசியமும் வணங்குவது திண்ணமே. 476

திண்மையும் நன்மையுஞ் செகமய மாச்சுது
தன்மை யதனால் தானதைக் கண்டிடு
உண்மை வெளிப்படு முறுறி யுகந்திடுஞ்
செம்மையும் வெண்மையும் சேரும் வல்லாரையே. 477

வல்லாரை தன்னை வணங்கு முறையதை
நல்லா ருனக்கு நயம்படச் சொல்லுவோம்
யெல்லாருங் கண்டு யெளிதா யிருந்திட்டார்
வல்லா ருகந்து வரைகடந் தார்களே. 478

கடந்து மோகக் கர்ம வினையதைத்
தொடர்ந்தேறாமத்து புருவத்தி லேறினார்
படர்ந்த வல்லா ரையைப்பத்தி எழுந்துநீ
அடந்திடுங் காடியில் அமர்த்திப் பிழிந்திடே. 479

பிழிந்திட்டு அடுப்பேத்தி பேணி பொடிசெய்து
நலந்திடு சர்க்கரை கணக்குச் சரியதாய்
நெளிந்திடு மணத்தை நேரதில் செலுத்தியே
அளந்து வெருகடி அன்பாய் பொசித்திடே. 480

பொசித்திடு மண்டலம் பொருந்தி உட்கொண்டால்
கசிந்திடு சீதநீர் கண்டு யிறங்கிடும்
நசித்திடு பித்தமும் நடுநிலை தன்னிலையே
வசித்திடு தேகம் வரண்டு சிறக்குமே. 481

சிறக்குமே தேகம் சிறுகதி ரோடியே
ஒறக்குமே வாசிஉள் நின்றுலர் விடும்
நிறக்குமே மூலம் நிலைதனிற் தீபம்
சிறக்குஞ் சிவாய சிவமான அண்டமே. 482

அண்டங் கடுக்கா யாகும் அறிந்தார்
அண்டங் கடுக்கா யாகு மரிந்த
வண்டங் கசடு ஆகும் அணைதனில்
அண்டத் தடுத்து அரூபியு மாவனே. 483

அருபமாய் நின்ற ஆதி கடுக்காய்
குருமாப் பதிதனில் கூர்மை யறிந்திடு
குருமா பதிதனில் கூர்மையறிந்த பின்
பருவமாய் நின்றதைப் பார்த்து எடுத்திடே. 484

எடுத்திட்ட முரியில் யியல்பாய் அமர்த்தியே
விடுத்திட் டுலர்த்தி விதையதை நீக்கிடு
பொடித்திட்ட தூளைப்போட்டிடு காடியில்
மடித்திட வைத்து மறு ஒளிஉலர்த்திடே. 485

இருத்து மறுஒளி யல்பா யுலர்த்தியே
மருத்து மிப்படியும் நீவளமாகச் செய்திடு
திருத்த மாயிம்முறை செய்திருப் பத்திலே
விருத்த மாத்திவரும் வாங்கி வெளுக்குமே. 486

வெளுத்திடும் பொடியதை வெயிலு லர்த்தியே
அழுத்தமா முறலில் அழுத்தி யிடித்திடு
செழித்திடும் பொடியைச் சேர்வச் சிரகாயம்
வழித்துப் பரணியில் வைத்து விரையெடே. 487

எடுத்த விதையை யிதமா யுலர்த்தியே
அடித்து னோக்கி அள்ளிடு பானையில்
படித்திடு சட்டிப் பானை அளவதாய்
நடுத்திர மாக நாட்டித் தமரிடே. 488

வடித்த தயிலம் வளமான குப்பியில்
கொடுத்து நீமூடி குருவை வணங்கிடு
தொடுத்தக் கடுக்காய்ச் சூரணந் தன்னில்
அடுத்தத் தயிலம் அளவா யெடுத்திடே. 489

அளவென்ன சூரண மானா மிருவிரல்
பிலமான தயிலம் பேணு மொருவிரல்
நலமா யெடுத்து நன்றாயு ருட்டியே
செலமான நாவிற் செலுத்தி மிளுங்கிடே. 490

செலுத்தி மிழுங்கி திறமான மண்டல
மழுத்தமாய்க் கொண்டு அருளை வணங்கிடு
சகித்த மலமுஞ் சலமு மொன்றாக
நெளித்த புழுவுட னேறா யிரங்குமே. 491

நேரா யிரங்கி நிலைக்கு முன்வாசி
சீறாக நின்று சித்து வளர்ந்திடும்
வேறான வாசி பிலத்து நிலைத்தது
கூறான மூலங் குடியிருப் பாகுமே. 492

இருப்பான் வீடும் யேகயிரு தைலம்
குறிப்பான மூலம் குண்டலிச் சத்தியாம்
நெருப்பான சத்தியை நினைவாய் வணங்கினால்
வெறுப்பான தில்லை வேண்டும் நல்காயமே. 493

**காயாதி கற்பம்**

காயாதி கற்பங் கருவென்று சொல்லுகிறேன்
மாயாதி மூலம் வளருமுன் மூலம்
மோயாத சத்தி ஒளிகொண்ட மூலமுஞ்
சாயாமல் மூன்றுந் தனக்குள் பார்த்திடே. 494

**சாரச் சுண்ணக் கற்பம்**

பார்த்திடும் ரவிமதி அக்கருஞ் சுடருடன்
சேர்த்திடும் மொன்றாய் திறமான கல்வத்தில்
வார்த்திடு நாதநீர் வளங்கொண் டரைத்ததைப்
போர்த்தி வழித்து போந்த திரட்டிடே. 495

திரட்டி ரவிதனில் சீறா யுலர்ந்தபின்
உருட்டி வட்டொட்டில் ஒடுக்கிமண் சீலைசெய்
சுருட்டி ரவிதனில் சுழன்று உலர்ந்தபின்
மருட்டி மாய்கை வணங்கிப் புடமிடே. 496

வணங்கிப் புடமது வைத்திட குக்குடம்
இணங்கி மும்மூல மிடுகி மலர்ந்திடும்
வணங்கி எடுத்து வடிவான செம்பினில்
யிணங்கி யதனை யியல்பாய் பொசித்திடே. 497

பொசித்திடு பணவிடை பொருந்து மதுவினில்
வசித்திடும் வாதமும் வளரய பித்தமும்
நசித்து நடுங்கி நமனும் விலகிடும்
பசித்திடும் பூரண பற்பம் தன்மையே. 498

தன்மை பொருந்துஞ் தனுவான தேகத்தில்
உண்மை ரசவற்க மூட்டு மூர்த்தியாம்
நன்மையாய் தேகம் நாடும் சொரூபத்தில்
புண்மை யுடலைப் பொருந்தி யருந்திடே. 499

அறிந்த மனத்தா லாதி நிற்பாடும்
அறிந்த மனத்தால் தந்தி திறப்படும்
மரிந்த மணத்தை அன்புடன் போற்றினால்
விரிந்திடும் வாசி விசையி லொடுங்குமே. 500

ஒடுங்கிய தேகமு முறுதி திறம்பட
அடங்கிய பற்ப அறிந்து உணர்ந்திடு
துடங்கிய சாரச் சுண்ண மருந்தினால்
மடங்கிய அத்தி விலுக்கும் திண்ணமே. 501

திண்ணமாய் மண்டலஞ் செலுத்திடு காரத்தை
உண்ணப் பயந்து ஒடுங்கி யிராதே
வின்னங் களில்லை விரசு கொடுத்திடு
மண்ணி லுணக்கு அருளின் வாரே. 502

## வெடியுப்புச் சுண்ண கற்பம்

வாரம் வெடியுப்பு வளறுமிச் சுண்ணத்தை
காரனும் மண்டலங் கசிந்து உணர்ந்திட
சீர்சதை மாங்கிஷந் திறமாய் வலுத்திடும்
பார்நீர் பனைப்புப் பதையா திருக்குமே. 503

இருக்குமே தேகம் யெந்தனா ளாகியும்
உரைக்குமே வாசி உண்மை திறப்படு
பரைக்கும் நரைதிரை பாற்றிப் பசனையாஞ்
சிறக்குமே தீபஞ் சிவானந்தி மூலமே. 504

### கல்லுப்புச் சுண்ணக் கற்பம்

மூலங் கல்லுப்பு முடித்திடு சுண்ணத்தைக்
காலமே மண்டலங் கருதி உணர்ந்திட
சாலவே நரம்பு தானது திருக்கிடும்
ஞாலமாந் தேகம் நலியா திருக்குமே. 505

நலியாத காரம் நாட்டிய சுண்ணத்தை
எளிதாக மண்டலம் ஏத்திடு தேகத்தில்
பலியான பித்தநீர்ப் பணைப்புத் தெரிந்திடும்
நெளியாது வாசி நேர்நிலை உண்மையே. 506

உண்மையாஞ் சீனம் உருகிய சுண்ணத்தை
நன்மையாய் மண்டலம் நாடி உணர்த்திடு
வெண்மை சிலேற்பணம் விளையா திருத்திடுஞ்
தன்மை யிதென்று சார்ந்திடு மூலமே. 507

மூலமாந் தங்க முடித்திடு சுண்ணத்தைச்
சாலவே மண்டலந் தானது உண்டிட
கோலமாம் வாதக் கொடிய நீர்த்திடுந்
தூலமோ யில்லை சுருக்கிடுந் தேகமே. 508

தேகமாம் வெள்ளி செப்பிய சுண்ணத்தை
ஆகமா மண்டலம் அறிந்து உணர்ந்திட
தாகமாம் மூலந் தனில்சூ தந்திடும்
வேகமாய் தேகம் விசைகொண்டி ருக்குமே. 509

இருக்குமுன் தேகம் யேகாந்தப் போதமா
முருக்குமுன் தேக மொன்றுஞ் சிறுபிள்ளை
யிருக்க நடக்க யிளையாதொரு னாளும்
கருக்கும் மயிருங் காலனு மில்லையே. 510

காலா மிரும்புக் கருவான சுண்ணத்தை
நாளெண்ணி மண்டலம் நயமாய் பொசித்திட
கோளாந் திசைவாய்வு குடில் மகிழ்ந்திடு
மாளாம் வயசு மகாகோடி காலமே. 511

## காரச் சுண்ணக் கற்பம்

காலமே நீயுங் காந்தநலக் சுண்ணத்தைப்
பாலுடன் கூட்டி பருகிடு மண்டலம்
மேலுடன் காந்தலும் வெக்கை வெதுப்புடன்
சூலையுடன் பாண்டு துலைக்குங் கிராணியே. 512

## சீனச் சுண்ணக் கற்பம்

கிராணியுஞ் சோகையுந் கண்கண்ட மாலையுந்
தீராத யீளையுந் திறமான இன்பமும்
வேறான காந்தப் பெருமையைக் கண்டதே
நேராக நின்ற நிலையைவிட் டோடுமே. 513

ஓடுமே நாக மொடுங்கிய சுண்ணத்தை
ஆடுடன் பாலில் லருந்திடு மண்டலங்
கோடாங் கிராணி கிளம்பிய மூலமும்
வாடாப் பவுத்திரம் வளரஞ்சுக் குட்டமே. 514

## தங்கச் சுண்ணம்

குட்ட முடனே கொடிய வியாதிகள்
நட்டமென் றெண்ணி நடுங்கி அகண்டிடு
மிஷ்ட மானாக மியங்கிய பற்பத்தாலது
துஷ்ட வியாதிகள் தொடரா திருக்குமே. 515

இருக்குமே வங்கத்தி லுவப்பான சுண்ணத்தைக்
கருத்துடன் வெண்ணெயில் காலமே மண்டலந்
திருத்தமாய்க் கொண்டு தீர்க்கமாய் நின்றிட
உருக்கும் வியாதியுடன் மேகந் தீருமே. 516

தீருமே மேகத் தீரா உபாதையும்
வீறுடன் கைகால் வெளுப்புக் கடுப்புடன்
கூறுடன் தேகங் கொடியதோர் காந்தலும்
வேறுடன் உடனே துலங்கி ஒடுங்குவே. 517

ஒடுங்கு கார்வங்க முருகிய சுண்ணத்தை
அடங்கிய நீமண்டல மருந்திடு தேனிலே
முடங்கிய மேக மூச்சு சுவாசமு
இடங்கெட்டோ மென்று யெழுந்திருந் தோடுமே. 518

ஓடும்விப்புருதி உருக்கும் பரங்கிகள்
நாடுங் கபாலம் நடுங்கிய சூலையும்
தேடுங் கைகாலில் திருக்கிய புத்துடன்
வாட நடுங்கி மயங்கிக் குதிக்குமே. 519

குறிக்கின்ற மூலிகை கூறினோ மெட்டெட்டுஞ்
தரிக்கின்ற மூலிகை தானது பத்துண்டு
நெருக்குந் கருநெல்லி நேர்சோதி விருட்சமுங்
கருக்குங் கொடிவேலி கல் தாமரையென்னே. 520

## அயச்சுண்ண கற்பம்

யெண்ணுங் கருந்தாளை யேரும் பொற்சீந்தியும்
சொன்னகரு நீலி சொர்ணத் திராயுடன்
அஞ்சனமா முண்ட கஞ்சாயா விருட்சமு
முன்னிய மூலிகை ஒடுங்கிய பத்துமே. 521

பத்தான மூலிகை பாரு பொதிகையில்
சித்தாதி கூட்டஞ் சென்றிடப் போகாது
பத்தாசை கொண்டு பார்க்கநீ வேண்டினால்
சித்தாதி தன்னிடஞ் சேர்ந்து வணங்கிடே. 522

## நாகச் சுண்ணக் கற்பம்.

வணங்கி நிலைநின்றால் வாவென்ற ழைத்துப்போ
இணங்கிய மூலிகை யின்பமாய்க் காட்டுவார்
மனங்கு விந்தந்த மார்க்கமாய்க் கண்டபின்
வணங்கு கருநெல்லி வளமையைப் பார்த்திடே. 523

வளமையைக் கண்டு வரிசையாய் மண்டலம்
நளமையாய்க் கொண்டு நாட்டங்கள் பெற்றிடும்
யிளமையா தேகமும் இலங்கு கவனமுந்
தலைமையாய்க் கொடுமுடி தானமுங் காணுமே. 524

காணுஞ் சதுர கிரியது தன்னுள்ளே
தோணும் சுடரொளி தூண்டாத் தீபமும்
பேணி நீநின்ற பெருமையைக் கண்டேன்
கோனவன் கண்டு குறிகாட்டு வானே. 525

**வங்கச் சுண்ணக் கற்பம்**

குறிகண்ட போதே கூடுஞ் சிவயோக
மறிகின்ற கற்ப மனையும் காயசித்தி
நெறிகின்ற வாதமும் நேரா வசியமும்
தெரிகின்ற போதே சிவசித்தி நாமே. 526

சித்தான மூலியில் சித்துக் களுண்டதில்
பத்தான மூலியில் பழுத்திடும் லோகங்கள்
சத்தாஞ் சரக்குகள் தானே வணங்கிடும்
ஒத்தாசை யாக உரைக்கின்றேன் வாதமே. 527

வாதம் வசியமும் வகையுடன் சொல்லுரேன்
நீதமாய்க் கண்டு நிலையை யறிந்திடு
நாத மொடுங்கும் நடுநிலை தன்னிலே
போதமாய் நின்ற பொருளை யறிந்திடே. 528

பொருளை யரிந்திடப் பொருந்துஞ் சிவயோகம்
பொருளை யறிந்திடப் பூரண தேகமாம்
பொருளை யறிந்திடப் பொன்றா தொருநாளும்
பொருளே சிவாயமாய் போற்றி மகிழ்ந்திடே. **529**

## வங்கச் சுண்ண கற்பம், காரவங்க சுண்ண கற்பம், பத்து மூலிகை விபரம்

யகிழ்ந்து முன்சொன்ன வைப்புச் சரக்கதில்
பகுந்திடு வேதை பண்பதைக் கேளு
அகந்தனி லுப்பு ஆதி லவணமும்
உகந்திடு லவண முகில்பா சாணமே. 530

## கருநெல்லி கற்பம்

பாசாண உப்புப் பதியுடன் வாங்கி
ஆசாரமாக அந்நீரில் சுத்தி செய்ய
பேசாம வாதி பின்னது கூட்டியே
ஊசரந் தண்ணி லுகந்து அரைத்திடே. 531

அரைத்திடும் வில்லையை அன்புடன் ஓட்டில்
அரைத்து மண்சீலை வழித்திப் புடமிடு
விரைத்துடன் லவணம் வெந்து உருகிடும்
நிறைதுடன் லவணம் நேருடன் லிங்கமே. 532

லிங்கம் லவணம் நேருட னாட்டியே
அங்கமா யுருட்டி அப்படிப் புடமிட
பங்கம் வராமல் பதிய உருக்கிடுந்
தங்க மதுக்குச் சரியிடை தாக்கிடே. 533

## ஆதிசரக்கில் வேதை

தாக்கு குகையில் சத்தி யிருக்கியே
பாக்கியம் வேண்டிப் பதித்திடு வெள்ளியில்
ஆக்கிய வெள்ளியதி லாத்தி ஒன்றிட
தீர்க்கமாந் தங்கந் திசைமாற்றி ருக்குமே. 534

இருக்குங் குடவணி லெட்டரை மாத்துவாம்
நெருக்கிய செம்பதில் நேரது ஆர்தாம்
பெருக்கி ரவிமதி பேணிக் கொடுத்திட
திருக்கற் பத்துமே சென்றிட ஆரதே. 535

சென்ற களங்கில் சேர்பாதி கெந்தியும்
நின்றதோர் வீரம் நீட்டிப் பொடித்திடு
வின்றதில் செய்நீர் விடுத்துரைத் துருட்டியே
அண்டமா மோட்டி லடக்கிப் புடமிடே. 536

## லவண லிங்கச் செந்தூரம் நாக பாசாண களங்க வேதை களங்க செந்தூரக் கற்பம்

புடமிட் டெடுத்திடு பொருமிச் செந்தூரமாம்
நடமிட்ட வெள்ளியில் நாட்டிடு ஹூற்றொன்று
திடமிட்டு ருக்கித் தெளிந்த பின்பாத்திடு
தடமுற்ற தங்கந் தன்வய திருபதே 537

இருளுரை செம்பில் எடுத்திடு னூத்தொன்று
கருவுடன் மாத்துக் கண [illegible] பதினாறு
முருவட [illegible] கதத்தி லூதிட யேளரை
தருவுடன் குடலினிற் சாதிக்க பத்துமே. 538

பத்திய செந்தூரம் பணவிடைக் கொண்டாடிட
நித்திய மாகி நிலைத்திடுந் தேகமுஞ்
சித்தியு முத்தியு சேர்ந்து திறப்படும்
முத்தி பெருகி மூதண்டங் காட்டுமே. 539

காட்டுமே நாகங் கதித்த பாசாணத்தில்
நாட்டிய உப்பு நன்றாய்ப் பொடித்திட்டு
ஆட்டிய செய்நீ ரதுமட் டரைத்துடன்
கூட்டி யுருட்டிக் குணமாய்ப் புடமிடே. 540

குணமுட னாகங் குழன்று உருகிடு
மினமுடன் தங்க மீய்ந்து உருகிடும்
சினமுடன் ரெண்டுஞ் சேர்ந்து உருகியே
கனமுட னாகங் களங்கது வாமே. 541

களங்கது தன்னை காட்டிடு வெள்ளியில்
நலங்கொண்டு பத்தில் காட்டி உருக்கிடு
பலங்கொண்டு வெள்ளி பழுத்திடும் பத்தரை
குலங்கண்டு குடவனிற் கூட்டிடு தங்கமே. 542

தங்கமாஞ் செம்பினில் தாக்கயி ரஞ்சுடன்
அங்கமா மாத்து அதிகம் புடத்தினில்
சங்கையுடனே தானே பழுத்திடு
மெங்கும் நிறைந்து இருக்கச் செந்தூரியே. 543

**கெந்தக பாசாண களங்க செந்தூரம்**

செந்தூர மாகச் செப்புவேன் கெந்தக
மந்தமாம் வீர மதினிடை களங்கையுஞ்
சொந்தமாய்க் கூட்டிச் சுருள அரைத்திடு
விந்துநீர் தன்னில் மேவி யுருட்டிடே. 544

உருட்டி ரவியி லுலர்ந்தபின் னோட்டினில்
கருத்துடன் மூடிக் கதிக்கமண் சீலைசெய்
இருத்துடன் புடத்தி லொடுக்கி எடுத்திட
திருத்தமாய் நின்று செந்தூர மாகுமே. 545

ஆகுமே வெள்ளி அமைத்திடு னூத்தொன்று
பாகமாய் நின்று பழுத்திடுந் தங்கமாய்
தாகமாய் வங்கத்தில் தடவிப் புடமிட
வாகுடன் கட்டி வலித்து பழுக்குமே. 546

பழுத்திடும் லோகம் பத்தரை தப்பாது
அழுத்தமாய் நீயும் அஞ்சிப் பணிவிடை
செலுத்திடத் தேகத்திற் சிறுகதி ரோடிடும்
நெளிந்திடும் வாசி நேர்மனை புக்குமே. 547

புக்குமே கெந்தகம் பொருந்திய பாசாணந்
தக்குமே வேதை சமத்தமரில் மெத்தவாஞ்
சிக்கிய உப்புந் திறமான கெந்தியு
மொக்கவே கூட்டி உருக அரைத்திடே. 548

அரைத்திடுஞ் செயநீ ரன்புடன் வில்லைசெய்
திறத்துடன் ஓட்டில் வசலுத்திப் புடமிடு
நிறத்துடன் கெந்தி நேரா யுருகிடு
வரத்துடன் அதுக்குநேர் வளர்தங்கச் சேர்த்திடே. 549

சேர்த்து உருக்கத் திறமாயு ருகிடுஞ்
சாத்திய கெந்திச் சத்துத் திறமது
போற்றிய வெள்ளியிற் பொருந்தா யிரத்தொன்று
மாத்து சுகஷ்த்திர மார்க்கமென் சொல்வேன் 550

சொல்லுவேன் செம்பில் சொல்ல முடியாது
வெல்லுவேன் குடவனில் வேண்டிய மாத்துமாந்
தள்ளுவர் வங்கச் சகஷ்த்திரத் தொன்றிட
துள்ளிய மாத்துத் தோணக் கண்கூசுமே. 551

கூசுமே கெந்தி குருவாங் களங்கத்தில்
நேசமார் வீரம் நேர்சரி கூட்டியே
வாசமாம் நீரில் வணங்கி அரைத்ததை
தேசுவை நோக்கித் திறமாய் வழித்திடே. 552

வழித்திடு வில்லைபோல் வளமா யுலர்த்திடு
அழுத்திய ஓட்டில்வைத் தன்புடன் மண்ணிடு
குலத்துட னெருவைக் கூட்டிப் புடமிடு
செழித்திடுங் கெந்தி செந்தூர மானதே. 553

ஆன செந்தூர மளவற்ற வேதையாம்
தோணவே லோகத்தில் தொட்டுத் தடவியே
ஆனதோர் தீயிலழுத்தி கொளுத்தினால்
காணவே மாத்துக் கணக்கது யில்லையே. 554

யெல்லையே நோக்கி யிருந்து பூசித்து
நல்ல செந்தூரத்தில் நயமாய்ப் பணவிடை
கொள்ளவே தேகங் குறுகா தொருநாளு
முள்ளவே உள்ளி ஒரு கோடி உள்ளியே. 555

## துருசு பாசாணம் களங்க செந்தூரம்

உள்ளி துருசு உகந்த பாசாணத்தை
ஆளித்த உப்பு அதில்சூதங் கூட்டியே
வாளித்த நீரில் வணங்க அரைத்திடு
பாளித் துருட்டிப் பதிவாய்ப் புடமிடே. 556

பதிவாய்த் துருசு பண்சூதம் உப்பு
சதிராகக் கூட்டித் தானேயுரு கிடுந்
ததியான தங்கந் தானது சரியாய்
மதியுடன் கூட்டி மணதாயு ருக்கிடே. 557

உருக்குங் களங்க முகனமென சொல்வேன்
பருக்கிய வெள்ளி பத்தது தூக்கி
உருக்குங் களங்க மொன்றது தாகக
நெருகசிய மாத்து நேரன்ப தாகுமே. 558

அன்புடன் செம்பினி லறுப தரையாம்
பண்புடன் குடவனிப் பத்தரைக் காணுஞ்
செம்புடன் லோகஞ் சேரப் பழுத்திடும்
நம்புங் களங்கத்தை நன்றாய் செந்தூரியே. 559

நன்றாய்க் களங்கிடை நாட்டிடுங் கெந்தகம்
பண்றான வீரம் பதியப் பொடித்திடு
குன்றாத நீரில் குணமா யரைத்திடு
சுண்ட வழித்துச் சுருள உருட்டிடே. 560

சுருள உருட்டிச் சுகமா யுலர்ந்தபின்
அருளான ஓட்டில் அடைக்கிமண் சீலைசெய்
மருவான சோதியை வணங்கிப் புடமிட
உருவானச் செந்தூர முறுதியாய்க் காணுமே. 561

உறுதியாய் வெள்ளியில் ஒருணூத்துக் கொன்றிடு
உறுதியாய் நின்று ஒளிகொண்ட தங்கமாம்
திருகிய லோகஞ் சேரப் பழுத்திடுந்
தருகிய வங்கத்தில் தடவிப் புடமிடே. 562

தடவிப் புடமிடந் தானே பழுத்திடுங்
குடவனுப் படிக் கூர்மையாய்க் கண்டிருந்
திடமுடன் மண்டலந் தின்னும் பணவிடை
அடவிடன் வாசி அசையா திருக்குமே. 563

### தாளக ஈய களங்கச் செந்தூரம்

இருக்கின்ற தாளக மென்னென்று சொல்லுவேன்
உருக்கிய உப்பு ஒன்றிடும் பச்சையும்
நிறுத்துடன் கூட்டி நின்றநீர் விட்டரை
கருக்குட னரைத்துக் கருவாக வட்டிடே. 564

வட்டது ஓட்டில் விரைந்துமண் சீலைசெய்
திட்டமாய்ப் புடத்தில் செலுத்தி அனலிடு
இட்டமா யுருகி யிருக்கு நல்லீயமாய்
மட்டமாய்த் தங்கம் வைத்து உருக்கிடே. 565

உருக்கு மிடையது ஓடா திருந்திடுந்
திருக்கென்ன வெள்ளியில் சேர்த்திடும் நூத்தொன்று
அருக்கணும் அமர்ந்து அதனிலு ருகினால்
சுருக்கென்ன மாத்து சொல்ல வொன்னாது. 566

சொல்லாத செய்தி துலங்கிடுஞ் செம்பினில்
நல்லாப் பழுத்திடுங் நாடுங்கு டவனில்
உள்ளாங் களத்தி லுடன்சேரு கெந்தக
தள்ளாத வீரனுந் தாக்கிப் பொடித்திடே. 567

பொடித்திடு நீரில் மொன்ற அரைத்திடு
அடித்திட்ட வில்லை போலாக்கு யுலர்த்தியே
வடித்திட்ட செப்பில் வைத்துப் புடமிடு
எடுத்து நீபார்க்க யேக செந்தூரமே. 568

யேக செந்தூர மேற்றிடு வெள்ளியில்
தாகமாய் நூத்திலத் தாக்கி உருக்கினால்
வேகமாய் மாத்து வேன்தா னுண்டு
ஆகமாய் வங்கத்தி லழுத்திப் புடமிடே. 569

### வீர பாசாண களங்கச் செந்தூரம்

புடமிடத் தங்கம் புடத்தங்க மாகிடு
திடமான லோகத்தில் செலுத்த நல்லேமாம்
விடமான செந்தூரம் விரும்பிப் பணவிடை
உடமான மாக யுண்டுமண் டலமதே. 570

மண்டலங் கொண்டிட மாயவனா குவாய்
கண்டிடுந் தேகங்கதிர் போலொளி யிடும்
மெண்டிசை முழுதுமெக்க கெவுன மாம்
அண்டர்கள் போத்த அரூப மாகுமே 571

அரூபமாய் வீர மடங்கும் பாசாணத்தில்
கருவான உப்புக் காரமுங் கூட்டியே
உருவான நீரிலுகந் தரைத்து ருண்டைசெய்
உருவான ஓட்டில் வைத்துப் புடமிடே. 572

புடமது காட்டி பொகுநத உருகிடுந்
திடமுள்ள தஙகஞ சேருஞ் சமனெடை
அடங்குடன் குகையில அமர்த்தி உருக்கிட
விடமுள்ள தங்கமும வீரனுங் கூட்டுமே 573

கூடி உருகுங் குருவாங் களங்கத்தை
நாடிய வெள்ளி நயந்திடு மென்பதில்
சாடி உருகத் தங்க மதாகிடும்
வாடி யிராதே வளர்செம் பிற்றாக்கிடே. 574

தாக்கிடச் செம்பு தானே பழுத்திடு
தாக்கிடு லோகமுந் தன்மை யுமப்படி
பாக்கிய மாகிப் பழுத்திடும் வேதையைப்
பாக்கிய மென்று பதிவா யிருந்திடே. 575

அதிவன்றி நீயூம் பார்த்து மகிழ்ந்திட்டால்
நிதியென்று காண நினைவு மளிந்திடும்
மதியுடன் விதியையும் வணங்கி நீபார்த்திடில்
விதிமதி யொன்றாய் விளங்கும் திண்ணமே. 576

திண்ணமாய் வீரஞ் செலுத்துங் களங்கத்தி
லுன்னிய கெந்தியுடன் வீரங் கூட்டியே
வன்னி யினீரல் வலுவா யரைத்திட்டு
மின்னிய வட்டாய் விளங்கப் பிடித்திடே. 577

பிடித்திடும் வட்டைப் பெருகிய செம்பினி
லடைத்துப் புடமதில் லன்புடன் வைத்திடு
உடைத்திடு மருந்தை உருகிச் செந்தூரமாம்
திடத்துடன் வெள்ளியில் சேர்த்திட தங்கமே. 578

தங்கமாம் வங்கத்திற் தடவிப் புடமிட
மங்கள மாக மருவிப் பழுத்திடே
மங்கமாய்ச் மைச்சுண்ணம் அமர்ந்திடும் வாக்கியம்
குங்கி டைக்கமே ஏகாந்த தீபமே. 579

யேகாந்த மாகி யிருக்குஞ் செந்தூரத்தை
யேகாந்த மாக யிருந்து பொசித்திட
யேகாந்த தேக மென்னென்று சொல்வேன்
யேகாந்த வாசி யிருதய மூலமே. 580

மூலங் கெவுரி மொழிந்த பாசாணத்தில்
சாலவே உப்புத் தன்னொடு பச்சையுஞ்
சீலமாய்க் கூட்டிச் சேர்த்தரை விந்துவில்
பாலமாஞ் செப்பில் பதித்துப் புடமிடே. 581

## கெவுரி பாசாண களங்க செந்தூரம்

பதித்திப் புடமிடப் பருவமாய்க் கட்டிடுங்
கதித்திடுந் தங்கங் காட்டுஞ் சரியெடை
விதித்திடுங் குகையில் விளங்க உருகிடத்
துதித்தது ஒன்றாய்த் துலங்க உருகுமே. 582

துலங்குங் கெவுரி தோன்றுங் களங்கமதாம்
பலங்கண்டு லோகத்தில் பாச்சிடத் தங்கமாங்
களங்கத்தில் கெந்தியுங் கட்டிய வீரனிம்
மலங்கவே கூட்டி மாட்டிப் பொடித்திடே. 583

மாட்டிப் பொடித்து மடங்க அரைத்திடு
தீட்டிய நீரில் திரட்டி யுருட்டியே
நாட்டிடு செப்பில் நயந்து புடமிட
வாட்ட மில்லாமல் வளருஞ் செந்தூரமே. 584

வளர்ந்திடு லோகத்தில் மாட்டுஞ் செந்தூரத்தை
உலந்திடு மெருவி லுருக்கிப் புடமிடப்
பலந்தரும் லோகம் பழுத்திடுங் தங்கமாங்
கலந்திடு முத்தியில் கருணையில் நின்றிடே. 585

நின்றிடு வெள்ளை நிலைத்த பாசாணத்திற்
கொன்றிடு முப்புக் கூர்பச்சை வீரனு
மொன்றதாய் கூட்டி யுருட்டி யரைத்திடு
சென்றிடு விந்துவில் சேர்த்தரைத்து ருட்டியே. 586

**வெள்ளைப்பாசாண களங்கப் பற்பம்**

உருட்டிக் குகையி லுறுதிப் புடமிட
மருட்டிய வெள்ளை மயங்கி உருகிடுஞ்
திருட்டில்லா வெள்ளி சேரு சரியெடை
மெருட்டிய வெள்ளையும் வெள்ளியுங் கூடுமே. 587

கூடியுருகிக் குணமாய்க் களங்க தாம்
நாடிய செம்பில் நாட்டு னூத்தொன்றுத்
தேடி யுருகத் தெகுட்டாத வெள்ளியாஞ்
சூடிக் களங்கத்திற் சூதமஞ் சேர்த்திடே. 588

சேர்த்திடு வீரந் திறமாய்ச் சரியெடை
நேர்த்தியாய்க் கூட்டி நிலைத்திடு விந்துவிற்
போர்த்தி யரைத்துப் போடு புடத்தினி
லாத்தி யெடுக்க அதிகமாம் பற்பமே. 589

பற்ப மெடுத்துபதியான செம்பினி
உற்பணமாக உருக்கி னூத் தொன்றிட
அற்புத மாகி அலர்ந்து வெளுத்திடு
தப்பித மில்லை தானானவெள்ளியே. 590

தானான வெள்ளிதன் கயிலாச மாம்
பூணாத மாத்து புகழா யிரத்தெட்டு
தேனான வங்கச் சேர்த்துக் குகையிலே
கோணா துருக்கு குருபற்பம் போட்டிடே. 591

பற்ப மதனிற் பதிந்த உடனே நீ
உற்பன மாக உருஞ்சி உருகிடு
அற்புதமான ஆன வெள்ளீயமும்
விற்பனமாங் குரு வெள்ளி யுமானதே. 592

வெள்ளி யென்றெண்ணி மேவி யிறாதே
தெள்ளிய செம்பில்ச் சேர் னூரிலொன்றிட
துள்ளிய மாத்துச் சொல்லவும் போகா
தள்ளிய லோகமுந் தானிது வாமே. 593

## ரச சிங்கி களங்கு

தான் ரசசிங்கி தன்னுட பெருமைகேள்
வானுகர் கெந்தி வளர ரிதாரமும்
பேணுந் துருசு பெருலிங்க வீரமும்
பூணுங் கருப்பும் பொருந் தெளுத்தூட்டிடே. 594

கூட்டி யரைத்திடு குருவான செய்நீரில்
நாட்டி யரைத்து நன்றாய் வளித்திடு
பூட்டிடு வில்லை பொருந்தவே செய்துநீ
வாட்ட ரவியில் வைத்து எடுத்திடே. 595

யெடுத்திடு வில்லை யிதமான செப்பில்
அடைத்துப் புடமிட அன்புடன் னுருகிடு
கொடுத்திடு தங்கங் கூட்டி சரியெடை
விடுத்திடு குகையில் வேண்டி உருக்கிடே. 596

உருக்கு களங்கத்திலுடன் சேரு கெந்தகம்
நெருக்கிய வீரமும் நேர்சரி காரமும்
திருக்கரம் கூட்டிச் சேர்த்தரை விந்துவில்
கருக்குள்ளே பூட்டி வில்லைப் பொருந்த ஆட்டியே. 597

ஆட்டிடுங் கமலை அமர்ந்திடும் பாலிலே
நாட்டி யரைக்க நல்ல மெழுகதாக
கூட்டி யுருட்டிக் குணமா யெடுத்திடுந்
தீட்டும் பரிசனந் தீபமுந் தூபமே. 598

தூவிப் போக நல்லோக மடிக்கியே
தாபித மாக மணந்தானது பூசிப்பின்
நாபித மூலத்தில் நல்தணல் வைத்துமேல்
கோபிக மாகக் கொடுத்திடு மெழுகதே. 599

மெழுகதிர்ச் செல்ல மேலே புகையேளு
பளுகிணி வாசல் பார்த்து அடைத்திடு
நெளுகிடும் புகையிற் நேரான லோகமும்
மளுகிப் புளுகி மழன்று பழுக்குமே. 600

அளன்றிடு மெழுகதிலன் பாயெடுத்து நீ
தளன்றிடு மேனி யிற்றானே தடவிடு
உளன்றிடு தேகம் உறுதி வயதாங்
களன்றிடு நரம்புங் கடுக யிருகுமே. 601

இருகிடுந் தேகம் மிகுந்த மெழுகதைப்
பருகி யெடுத்துப் பாச்சிடு வெள்ளியில்
சொருகிலப் பழுக்குஞ் சொரூபம் மெழுகது
மருகியிறாதே மார்க்கத்தில் நின்றிடே. 602

மார்க்கமாய் நின்று மலையிலே சஞ்சரி
தீர்க்கமாய்ச் சித்தர்கள் செய்த பொருளுகள்
பார்க்கப் பனிரெனும் பருமலை போலவே
இயற்கையாய் நின்று யெளிதாகப் பார்த்திடே. 603

யெளிதாகப் பார்த்து யேகிடு மப்பாம்
நெளிதாக நீயும் இன்றதை ஆசித்தால்
வளியோடே சித்தர் வந்து உன்திடம்
பளியாத யிரைப் பயிற்றுவர் பார்த்திடே. 604

**அஞ்சன பாசாண மை**

பார்த்திடு அஞ்சன பாசாணந் தன்னையே
காத்திடுந் தொட்டியுங் கற்பரி கார்முகில்
சேர்த்திடு லிங்கம் சிலாமத அஞ்சனம்
போற்றிட ஆறும் பொருந்தொன்றாய்க் கூட்டிடே. 605

கூட்டி அயச்சட்டி குமுறவே காய்ந்தபின்
போட்டு வருத்திடு பாருந்த வாய்நீர்விட்டு
நாட்டி வருக்கையில் நாற்சரக் காணுமே
வாட்டி கருகி வலுவாய்ச் சிவக்குமே. 606

சிவந்த சரக்கை திறமான கல்வத்தில்
சிவந்த நீர்விட்டு சேர்த்தரை சாமந்தான்
சிவந்த முப்பாலுந் தேனு மொன்றாக்கியே
சிவந்தனை நோக்கி சேர்த்தரை மையதாம். 607

மையான மைசெய் மார்க்க மறிந்திலார்
மையான மையை வளிந்துச் சிமிழியில் வை
மையான தேவி வளரஞ்சனா தேவி
மையமாய் நின்று வழிக்காட் டுவாளே. 608

வழியென்ன வென்றால் மையான மையை
நெளிதான் மைய நெத்தியில் பொட்டிடு
சளியோடே நின்று சுழற்றி நீபார்த்திடத்
தெளிவாகப் பூமிக்கண்திறக்குங் கண் பார்த்திடே. 609

பார்த்திடு மேலே பதிவா யிருந்துநீ
பார்த்திடும் போது பகல் நட்சத்திரம்
பார்த்திடத் தோணும் பதிங்கோடி காதமும்
பார்த்திடக் கிட்ட பதிவா யிருக்குமே. 610

பதிவான நெய்யில் பதித்து மைநீட்டியே
பதிவாய்த் திலகம் பதித்து மலையின்மேல்
பதியேறிப் பலம் பெறச் செய்கையிற்
பதிவா யிருக்கும் பாருயிர் பயிருமே. 611

## லிங்க பாசாண களங்க செந்தூரம்

உயிருடன் பயிரு முகந்து வசியமாம்
பயிருடனு யிரும் பகுந்துற வாகினால்
வெயிலுடன் பணியையும் விரும்பி யிருக்கலாம்
பயிருந் னோயிலாய் பார்மனை கண்டிடே. 612

கண்டிடு லிங்கம் கனத்த பாசாணத்தில்
விண்டிடு கெவுரி விளங்கிய பச்சையும்
நின்றதோர் உப்பு நேர்சரி கூட்டியே
சுண்டிய நீரில் சுத்தி யரைத்திடே. 613

சுத்தி யரைத்து சுருள் வளித்துமே
பத்தி யுடனே பதிவா யுருட்டிடு
வெத்திரலில் வி[illegible] சய[illegible]லர்ந்தபின்
முத்தம் பெருகிடச் செப்பி லடக்கியே. 614

செப்பி லடக்கித் திறமாய்ப் புடமிட
ஒப்பு ரவாக உருகித் திரண்டுமே
அப்புறம் தங்கமதுக் கிடை சேர்த்துநீ
மெய்ப்பாய்க் குகையில் விரும்பி யுருக்கிடே. 615

முருக்கிய சத்து முடனின்ற தங்கமும்
நெருக்கி யுருகி நேராய்க் களங்கமாந்
திருக்கிய களங்கமும் சேர்த்திடு வெள்ளியில்
பெருக்கிய மாற்றுப் பேச வொண்ணாதே. 616

ஒன்றான களங்க முடைத்து நொருக்கியே
கண்ணான கெந்தியும் காரமும் வீரமுந்
திண்ணமாய்க் கூட்டிச் சேர்த்தரை விந்துவில்
உன்னி வளித்து உருட்டித் திரட்டிடே. 617

திரட்டி ரவியிற் சிக்கெனக் காய்ந்தபின்
உருட்டியே செம்பி லொடிக்கி புடமிடு
நெருட்டு கள்மடங்கி நேராய்ப் பொருமியே
சிறுத்துச் சிவந்து செந்தூர மாகுமே. 618

ஆகுமே செந்தூரம் மளவற்ற வேதையாம்
பாகுட னீயும் பணவிடை மண்டலம்
வாகுடன் கொண்டு மணத்தை நிறுத்திட
தேகம் நிலைத்துத் திறமாங் கெவுனமே. 619

திறமாய் வகுப்பில் சிவக்க முறைமைகேள்
நிறமான லிங்கமும் நேர்பச்சைத் தாரமும்
முரமாய் அயத்தொட்டி ஒடுங்கிய கெந்தியும்
பரமான காரமும் சல்வீரம் கூட்டிடே. 620

கூட்டி யொன்றாகக் குமுறப் பொடித்துநீ
நாட்டுவாய் நீரில் நன்றாய்ப் பிசறியே
தாட்டிக மாகத் தாயைச் சட்டியில்
போட்டு மருந்தைப் பொருந்த வறுத்திடே. 621

வறுத்திடும் போது வளமாய்க் கருத்திடுங்
கருத்திடுஞ் சரக்குக் கருத்தாய் வெளுத்திடு
நிறத்துடன் வெளுத்து நின்று சிவந்திருந்
திருத்தமாய்ச் சிவந்து செந்தூர மாகுமே. 622

ஆகுமே செந்தூர மருந்தில் சிவந்து
பாகுடன் உள்ள பகுந்த முறையிது
வாகுடன் வெள்ளித் தகட்டில் மருவியே
ஆகமாய்ச் சாம்பலி லவர்த்திப் புடமிடே. 623

அழுந்திப் புடமதி லாற்றி யெடுத்திட
பழுத்திடும் வேதைப் பார்க்கக்கண் கூடிடும்
கழுத்திடு யோகமுங் கண்டு பழுத்திடும்
அழுந்திய மச்சன் வாக்கிது சித்தமே. 624

சித்தம் பெருகி செழிக்கு மெண்ணூரிதை
உத்தம் ரிடத்தி லுகந்து நீபேசி
மெத்தய மான மாந்தரி டத்தினில்
சற்று மிறாதே தன்னிலைப் பார்த்திடே. 625

## கோடாசூரி பாசாண செந்தூரம்

தன்னிலைப் பற்றிதான் தானமரிந்து நீ
உன்னிலை ஒடுங்கி உறுதியில் நின்றிட
வின்னிலை தன்னில் வேத மனோண்மணி
சென்னி லினடுவே சிறந்திடுந் தீபமே. 626

சிறந்த ரவியி சீரொக்கும் சரக்கதே
மறந்து விடாதே மகாகோடிடா சூரியு
மாந்தருங் கார்முகி லானதீ முறுவலும்
நிறைந்திடுங் கெந்தியு லிங்கமு மானதே. 627

ஆனசரக்கு மஞ்சுஞ் சரியிடை
கோனரு ளாலே கூட்டிப் பொடித்திடு
தாணமாம் வெங்கலத் தகட்டில் பார்த்தியே
பூணவே செய்நீர் பொருந்தத் தெளித்திடே. 628

தெளித்து ரவியில் சுருள் உணர்த்திடு
வெளித்ததை பொருந்த வாய்நீர் விட்டுமே
அழுத்திப் பிணைந்து அமுக்கு ரவியினில்
சுழித்தது காந்தியில் சுழன்று புகையுமே. 629

புகைந்து கருகிப் பொலிவாய்ச் சிவந்தது
தகந்து பொருமி தளன்று செந்தூரமாம்
முகந்து தெடுத்து உருமையாய்க் குப்பியில்
உலகந்தனித் துயிர்போ லன்புடன் போற்றுமே. 630

போற்றிய வெள்ளியில் பூசிப் புடமிட
நேர்த்திய தாக நேராய்ப் புளூத்திடு
மாத்திய செம்பி லளுத்தி உருக்கிட
தேத்திய மாத்துத் திருவரு ளாகுமே. 631

திருவாம் ரவியில் சிவந்த செந்தூரத்தை
உருவாம் தேகத் திலுட்டு பணவிடை
குருவான யில்லங் குன்றாதொரு னாளுங்
கருவான வாசி கன்றா திருக்குமே. 632

இருக்குமே தேக மெந்த னாளாகிலுந்
திருக்கறச் சத்தி சிவத்தைப் பணிந்திடு
நெருக்கிய வாசி நேறாய் வணங்கிடுந்
திருக் கண்ணனுக்குத் தீவினை யில்லையே. 633

தீவினை யான சிந்தை திறப்படு
தாவிய வாகி தாண்டி தொருநாளுங்
கூவிய அண்டங் குறியாஞ் சுழிதனில்
மேவிய தாண்டி விளக்கொளிக் கண்டிடே. 634

கண்டிடு பற்பங் கருணை துலங்கிட
விண்டிடக் கேளு விளங்கிய வீரமும்
நின்றிடு நாகமும் நேரச லிங்கமும்
துன்றிய காரமுந் துலங்குஞ் சலாசத்தே. 635

சத்து முதலாறாத் தானோர் சரியெடை
பத்தி யொன்றாகப் பதியப் பொடித்திடு
வெத்தியாஞ் செய்நீர் விட்டு அரைத்துமே
முத்தியாஞ் சாம மூவிரண் டாட்டியே. 636

ஆட்டி வளித்து அடை போலப் பிடித்துநீ
காட்டு ரவியில் கருக உலரவே
நாட்டிய வில்லை நன்றா யுலர்ந்தபின்
பூட்டிடு ஓட்டில் பொருந்த மணலிடே. 637

மணலிட்டு லர்த்தி வாகாய்ப் புடத்தினில்
அனலுற்றுத் தாவி அதிர்ந்து வெளுத்திடு
மனதுற்று நீயும் வணங்கி யெடுத்திட
தனலுற்ற வெண்மையாய்த் தானது பற்பமே. 638

பற்ப மதுவே பதிவா யெடுத்துநீ
அற்புத வெள்ளியி லனைத்துப் புடமிடு
துப்புர வாகத் துலங்கப் பழுத்திடுஞ்
செப்பிய லோகமுஞ் சேரப் பழுக்குமே. 639

## நாக பற்பம்

பழுத்திடும் பற்பம் பணவிடை கொண்டிட
நெளித்திடுந் தேகம் நின்று நிலைத்திடு
களித்திடும் வாசியுங் கருவினிற் சென்றிடு
முளித்திடு கண்ணும் முனையினிற் புக்குமே. 640

புக்கிய நாகம் பொருந்திய பற்பமாய்ச்
சிக்கெனச் சொல்லுவேன் செம்மை யதாகவே
தக்கிய ரசமுந் தாரமும் வீரமும்
தொக்குஞ் சலாசற்று துணையான காரமே. 641

காரமோ டொன்றாய்க் கதிக்க அரைத்திடும்
வாரமாம் நீரில் வளித்து துருட்டியே
யீரமே சுண்ட யிரவியில் வைத்திடு
சேரவே ஓட்டில் தனித்துமண் சீலையே. 642

சீலையமுத்தி திறமா யுலர்ந்த பின்
வாலையைப் போற்றி வைப்புடந் தன்னிலே
சூளை யெரிந்து சுழன்று குளிர்ந்தபின்
ஆலைய மாக அர்ச்சித் தெடுத்திடே. 643

எடுத்திடு மல்லிகைக் கிணையாக பற்பமாய்த்
தொடுத்த திருக்குஞ் சுகமா யெடுத்திடு
மடுத்த தோர்பற்ப மாதிக் குருவிது
முடித்த பொருளில் முதலாம் பொருளிதே. 644

## தாள பற்பம்

பொருளான பற்பம் பொருந்த யெடுத்துநீ
அருளான வெள்ளியி லனைத்திடு நூத்தொன்றுங்
குருவான தங்கங் குறையா தொருநாளும்
மிருளான செம்பும் ஏமமு மாகுமே. 645

ஆகிய பற்பம் மதிலோர் பணவிடை
பாகுடன் தேனில் பதிவாக மண்டலம்
வாகுடனங் கொண்டு மனதை நிறுத்திடத்
தேகம் நிலைத்துச் சிவயோகம் புக்குமே. 646

புக்கிய தாரம் பொருந்திய பற்பமாய்
நிற்கும் வகைகேள் நேரான வீரமும்
நக்கிய நாகமுந் தான்ரச பச்சையுமஞ்
சிக்கிய சத்தோடு சேர்சாரங் கூட்டிடே. 647

கூட்டிக் கவசத்தில் குமுட்டிப் பொடித்துநீ
பூட்டிய நீரில் பொருந்த அரைத்திடு
நாட்டி அரைத்து நன்றா யுருட்டியே
வாட்டி ரவியில் வலுக்க யெடுத்திடே. 648

யெடுத்திடும் வட்டை யிதமான ஓட்டினில்
தொடுத்திடு சீலைமண் கருக்கட்டி யுலர்ந்தபின்
விடுத்திடு புடத்தில் விரும்பி யெடுத்திடே
அடுத்ததோர் பற்பமதில் வேதை யாச்சே. 649

வேதைச் சரக்கு விரும்பு முபரசஞ்
சாதிச் சரக்கு தருகார் சாரமும்
நீதிச் சரக்காய் நிலைத்த பழச்சாரமு
மாதிச் சரக்கு அனைத்தையுங் கண்டிடே. 650

## சகல சரக்கிலும் சத்தெடுக்கச் செய்நீர்

அனைத்தையுங் கண்டு அதில் சத்தெடுக்க
யுனைத்திடுஞ் செய்நீர் புதுமையைக் கேட்டிடு
நினைத்திடு அண்டமும் நேரான பிண்டமுஞ்
சினத்துடன் வகைக்குச் சேர்பலம் ஐம்பதே 651

அன்புடன் கூட்டி அமிழ்த்திடு பாண்டத்தில்
நன்புடன் தன்னில் நாட்டு மருந்துகேள்
பண்புடன் வீரமும் பாசாணம் பச்சையுந்
தன்படு பூரமுந் தன்னொடு காரமே. 652

காரமுஞ் சாரமுங் கருவான சீனமும்
பாரென்ன பேதியும் பருந்திடு துத்தமுஞ்
சீருள்ள கெந்தியுந் திருவான தாரமுங்
கூருள்ள கார்முகில் குவிந்தயத் தொட்டியே. 653

தொட்டி யுடனே சூழு மீனம்பருங்
கெட்டியாய்க் கட்டுங் கெம்பீரக் கட்டியுந்
திட்டமாய்க் கண்டிடுஞ் சேர்பதி னைஞ்சுமே
வட்ட உரலி லிடித்து எடுத்திடே 654

இடித்துப் பொடித்து யேரண்டப் பானையில்
தொடுத்த தொன்றாகச் சுருளப் பிணைந்துநீ
கடுத்திடு மமுரியுங் காரநீர் கூட்டியே
அடுத்திடு மருந்தில் அதில் விட்டுக் கிண்டிடே 655

கிண்டு ரவியில் கெனிதமாய்த் தாங்களில்
கண்டு நீவைத்திடு கதிரவ னொளிபட
நின்று நன்றாகக் கீழே நீகிண்டிடு
சுண்டி மருந்து சேர்வரச் சுண்டுமே. 656

கண்டு மருந்தைச் சுகமா யடுப்பினில்
கண்டித மாகக் கடுகி எரித்திடு
மண்டி யோர்பக்த மனதா யெரித்திட
நன்றதாய் சுண்ணமாம் நாலொன்று சாரமே. 657

## கெருட பச்சிலை பற்பம்

சாரம் பொடித்து தயவான சுண்ணத்தில்
காரமோ டொன்றாய் கடுக கலந்து நீ
பார்த்துப் பணியில் பதிவாய்நீ வைத்திட
ஊருமே செய்நீ ரொடுங்காத கங்கையே. 658

கெங்கையா நின்ற கேணிநீர் தன்னிலே
மங்காது பாசம் வளர்கார சாரமும்
பொங்கும் பாசாணமும் பொருந்திய லோகமு
மங்கமாய் நீரில முத்தி உருக்கிடே. 659

உருக்கிடச் சத்தா யுருகி நிலைத்திடும்
பெருக்கின்ற செய்நீர் பெருமைபின் தன்மையால்
கருக்கண்டு முடிக்க காசினி தன்னிலே
யிருக்கின்ற பேரினி லெண்கோடிக் கொன்றுமே. 660

கோடியி லொன்று குருபுத்தி கூர்மை
நாடி யெடுத்து நயமா யெண்ணூரில்
பாடிய சொல்படி பயனறி வானாய்த்
தேடிய சத்தில் தெளிவதைக் கேட்டிடே. 661

கேட்டிடு கெருடப் பட்சியை மைந்தனே
நாட்டிய நீரில் நன்றாய் அரைத்ததை
நீட்டி வளித்து திறிமா யுருட்டுநீ
பூட்டிய ஓட்டினில் போந்தமண் செய்திடே. 662

செய்திட் டுலர்த்தி திறமாய்ப் புடத்தினில்
கொய்திட் டெடுக்க குருவான பற்பமாம்
மெய்திட்ட மாகி விளங்கிய பற்பத்தை
கைதிட்ட மாகக் கருவினில் கொண்டிடே. 663

கொண்டிடு மண்டலங் குருவை நினைந்துநீ
நின்றிடும் போது நீள்திசை தன்னிலே
சென்றிடு விடங்களும் திறமான நோய்களுங்
கண்டிடும் போதினில் கதறி நடுங்குமே. 664

## நத்தைப் பற்பம்

நடுங்கி விடங்களும் நாடா தொழிந்திடும்
ஒடுங்கி நீயிருக்கு மூரிலில் விடமுண்டோ
திடங்கொண்ட கெருடன் முட்டைக் கருவினில்
படங்கொண் டெழுந்த பார்நாகஞ் சித்தியே. 665

சித்தான நத்தை சிப்பி யெடுத்துநீ
ஒத்தாசை யாக உடன்சேரு சத்தியை
முத்தான நீரில் முருக அரைத்துமே
பத்தாசைக் கொண்டு பருவில்லை பண்ணிடே. 666

பண்ணி உலர்த்தி பருவமாய் ஓட்டினில்
லுண்ணிய மூடி யுறுதி மணலிடு
சென்னியை நோக்கிச் சிறுகப் புடமிட
புண்ணிய மாகப் பொருகி நீராகுமே. 667

நீறான பற்பம் நேர்மை லகுவிது
பாறான பாலில் பணவிடை கொண்டிடு
நேறாக மண்டலம் நிலைத்திடு ரெண்டினில்
சீரான நாகஞ் சிசுவினுக் காகுமே. 668

நாக்கு மெதுவாய் நலமா யிருந்திடும்
வாக்கு மொழிகள் வளமது மெத்தவாம்
வாமதாக்கு மமுர்தந் தானே சொலித்திடுந்
தூக்கிய தூக்கமுஞ் சுழன்று ஒடுங்குமே. 669

## ஆமை ஓட்டுப் பற்பம்

ஒடுங்கிய ஆமை ஓட தெடுத்து நீ
அடங்கு மமுரியில் அன்புடன் சுத்திசெய்
மடங்கிய ஓடும் வளர்சுத்தி பூரமுங்
திடங் கொண்டரைத்து சேத்து உருட்டிடே. 670

சேர்த்து உருட்டித் திடமாய் ரவியினில்
பார்த்தது யுலர்ந்தபின் பண்புட னோட்டினில்
தாத்தி மேல்மூடித் தனதாய் மணலிட்டு
வாத்திப்புடத்தில் வரிசையாய் வைத்திடே. 671

## அஷ்த்தி பற்பம்

வைத்திட் டெடுக்க மாசற்ற நீறுபோல
மெய்த்திட்ட மாக விளங்கி யிருந்திடுங்
கைத்திட்ட மான கருவான பற்பத்தைச்
செய்திட்டக் குருவென்று தேர்ந்து பணிந்திடே. 672

தேர்ந்து தினமோர் பணவிடை எடுத்து
நேர்ந்து தேன்பாலில் அளவாய்ப் பொசித்திடக்
கூர்ந்தொரு மண்டலங் குணமா யெடுத்தபின்
சார்ந்திடு மேனியுந் தளரா திருக்குமே. 673

தளரா வாசி தான்மன வேகமாய்
மலரா னபூத மண்டலஞ் சுத்தலாம்
களராது வாசி கண்ணொளி கூர்மையாஞ்
சுழலாம் வக்கரஞ் சொல்லோடி சுத்துமே. 674

சுத்திய அஷ்த்தி சுருதி முடிவுகேள்
பத்தியாங் கேசரி பருமுத்து கஷ்த்தியாஞ்
சுத்தியாய் ரெண்டுஞ் செலுத்தி அமுரியில்
வைத்தியாய்க் காய்ச்சி விரும்பி யுலர்த்திடே 675

உலர்த்திப் பொடித்து உடன்சேர் கருசலும்
நிலத்த முதுண்ட நேர்சரி பீசமுங்
குலத்துடன் மூன்றையுங் குருவா னத்தினில்
பிலத்துடன் அரைத்துப் பேணி உருட்டிடே. 676

உருட்டிப் பதிவாய் ஓட்டின்மேல் சீலைசெய்
கருத்துட நாதனங் கண்டு புடமிட்டு
திருத்த மாய்தந் திரமாய் வெளுத்திடும்
நிருத்தி நிறையாய் நின்றிடும் பாரே. 677

பாரான பற்பம் பணவிடை தேனிலே
சீராகக் கொண்டு சென்றிடு மண்டலம்
நேராக மண்டலம் நிலைத்திடும் போதினில்
பேரான தேகம் விலத்து வலுக்குமே. 678

வலுக்குங் கெதிகள் வளர்கரி நிகரில்லை
செளிக்கு மனமுஞ் சிந்தையும் பூரணம்
நெளிக்கின்ற அஷ்த்தி நேர்மையின் கூறினால்
களிக்கின்ற வாசி துள்ளா தடங்குமே. 679

**சுக்கான் பற்பம்**

அடங்கிய சுக்கானறி னந்திர மெத்தவர்
முடங்கிய கல்லை முதிரப் பொடித்துமே
துடங்கிய நீரில் தோணட் பிசறியே
திடங்கொண் டுலர்த்து திடமாய் ரவியிலே. 680

ரவியி லுலர்த்த நாலஞ்சு கைமுறை
புவியான கல்லுப்புப் புகமுடன் கத்தியாங்
குவியாமற் சற்று கூட்டத்துச் சத்தியாம்
அவியாம் மூன்று அளவிடை போன்றதே. 681

ஒன்றாகக் கூட்டி உருநீர் விட்டுமே
நன்றாக ஆட்டி நாடி உருட்டிடு
குன்றா ரவியில் குணமா யுருட்டியே
பன்றான ஓட்டில் பத்திமண் சீலையே. 682

மண்ணது செய்து வணங்கிப் புடமிடு
தண்ணிமை யாகத் தருவான பற்பயா
முன்னிய பற்ப மொருத்தரு மறிந்திலார்
புண்ணிய நாதன் போதித்தான் கண்டிடே. 683

கண்டிதமான கடுஞ் சுக்கான் பற்பத்தைச்
சுண்டிய நெய்யில்சுகமாய் பணவிடைக்
கொண்டிடில் தேகங் குளுந்து வலுவதா
மண்டிய விந்து மார்க்கமாய் கட்டுமே. 684

கட்டிய ஓடு கடிய கபாலமாஞ்
சுட்டதன் சத்தைச் சுகமா யெடுத்திடு
திட்டம தாக தேசாதி சத்தியு
மட்டமாய் மூன்றுவைகை சரிதா னெடே. 685

தானே எடுத்து தளுகெங்கை நீரினில்
பூணவே தட்டிப் பொருந்த அரைத்திடு
பேணா தரைத்து பிலமா யுருட்டியே
காண ரவியில் கடுக உலர்த்திடே. 686

கடுக உலர்த்தி கவியமண் சீலைசெய்
கொடுகி யெருவிற் சுகமாய்ப் புடமிடு
அடுகிய சத்து ஆக வெளுத்திடு
மருவிய பற்பமா சில்லாப் பற்பமே. 687

## கல்நாறு பற்பம்

பற்ப மதனை புதிய மனதில்
அற்புத மான ஆச் பணவிடை
சிற்பர னோக்கி செலுத்திடு தேனிலே
உற்பன மாகும் உறுதியாம் தேகமே. 688

தேக முறுதி திறந்து வலுத்திடும்
பாகமாம் நேத்திரம் பதியத் தெளிவதா
ஆக மாய்தூர் துளையே யரியலாந்
தாகமாய் தீபந் தானறு துலங்குமே. 689

துலங்கிக் கல்நார் சுகமது மெத்தவாம்
யிலங்கு மன்னுரை யிடித்து ஆம்பிசினில்
விளங்கவே போட்டு விரும்பி எடுத்திடு
நிலங்கொண்ட நாரது நிரைகத் தியாமே. 690

சுத்தி தன்னோடே **சுகமாஞ் சலாசத்து**
வெத்தியாம் பூரம் விசைக்காசுக் கட்டியாம்
பத்தியா னாலும் பதிய ஒன்றாகவே
சித்தியாம் நீரில் சிறக்க அரைத்திடே. 691

அரைத்த துருட்டி அலர்உலர்ந்த பின்
திறத்துட னோட்டில் செலுத்திமண் பூசியே
உரத்துட னெருவி லொடுக்கிப் புடமிட
நிறத்துட னாரது நீரி வெளுக்குமே. 692

வெளுத்திடும் பற்பம் விரும்பி எடுத்திடு
அழுக்கறப் பல்லை யழுத்தி விளக்கிடும்
நெளித்திடும் பல்லு நேரா யிருக்கியே
வலுத்திடுந் தத்தம் வகைவிளிக் கேட்டிடே. 693

கேட்டிடு மைந்தா கெட்டியாய் கற்களை
நாட்டியே பல்லில் நன்றாய் நோக்கலாந்
தீட்டிய கல்நார் திறமது நன்மையால்
ஆட்டிய பல்லும் அசையா திருக்குமே. 694

இருக்குங் கற்பத்தை யிதமா யருத்திடும்
மருக்கிய பித்தமும் வாயினால் போய்விடும்
கருக்கிய விந்துவுஞ் சுகமாய் சொளித்திடுஞ்
திருக்கறப் பாத்துச் செய்து முடித்திடே. 695

முடித்திடக் கேளு முனையாஞ் சலாசத்தைத்
தொடுத்தத் தண்ணீரில் சுருக்கெனக் காய்ச்சிடும்
கருத்தது சுத்தியாங் கருவாய திணோடு
வெடித்திட முப்புமேல் பூரமுங் கூட்டிடே. 696

கூட்டி யரைத்திடு குளுவான நீரதில்
நாட்டி வளித்து நலமா யுருட்டியே
ஓட்டினில் வைத்து ஒடுக்கி மணலிடு
தாட்டிக மாகத் தனதா யுலர்த்திடே. 697

உலர்த்தி எடுத்து உண்மையைப் போற்றியே
விலத்துட னெருவில் பேணிப் புடமிடு
குலத்துடன் சத்துங் குணமாய் வெளுத்தது
பலத்தினி லதிகப் பற்பமு மாகுமே. 698

ஆகிய பற்ப மருந்தும் பணவிடை
வாகுடன் மண்டலம் வருந்தி யுள்ளந்
திடதேகம் பிலத்து சிறுகதி ரோடியே
வாகுடன் தேகம் பளீரெனத் தோணுமே. 699

தோணு மொளிவு சுடரொளி ஒவ்வென
காணுமே மூலங் கருணையில் வாசியால்
வேணு மெண்ணூர் பிலமான மந்திரம்
வெணு மென்றெண்ணி விரும்பி அறிந்திடே. 700

அறிந்திடச் சித்து அனேக விதமுண்டாம்
சொறிந்திடு முத்தின் தோளிலது கேட்டிடு
பரிந்திடு முத்தும் பருவெடி யுப்புடன்
விரிந்திடும் பூரமு மேலான வீரமே. 701

## முத்து பற்பம் பாளச் சுண்ணம்

வீரமாய் நாலும் விளங்க ஒன்றாகவே
காரமாம் நீரிலக் கடுக அரைத்திடு
பாரமாய் நாலு சாமம் பயின்றபின்
சீராய் வளித்துத் திரமா யுருட்டிடே. 702

உருட்டி உலர்த்தி உருக்கிப் புடமிடத்
திருத்தமாய்ச் சுண்ணத் திறமா யிருந்திடும்
நிறுத்தப் பணவிடை நினவாக மண்டலங்
கருத்துடன் கொண்டிடில் காரணங் கேட்டிடே. 703

கேட்டிடு மைந்தா கிருபையாய் நேத்திரம்
நாட்டிய மாகி நன்றாய் விலகிடுந்
தொட்டிய தூர தலையுந் தெரிந்திடுந்
தேட்டுடன் பகல் நட்சத்திரந் தெரியுமே. 704

தெரியும் பாளத் திறமது கேட்டிடு
நெறியின் பலத்தினில் நேர்மையாய்ச் சுத்திசெய்
துரியமா முத்துச் சுண்ணமுங் கூட்டியே
விரிவுள்ள நீரை விட்டு அரைத்திடே. 705

அரைத்தது ருட்டு அளவது முன்போல
திடத்துடன் புடமதில் சென்று வெளுத்திடும்
நீரத்துடன் வெளுத்து நின்றது சுண்ணமாம்
வரத்துடன் குருவைநீ வணங்கி மகிழ்ந்திடே. 706

வணங்கிப் பணவிடை மாசற்ற தேனில்
இணங்குநீ மண்டலம் மிகுந்து போற்றிட
குணங்கி களார மனதாய்க்கூட்டி நினைந்தது
மணங்க மிளகு விந்திடவந்தது சித்தியாம் 707

**கோமேதகச் சுண்ணம் புற்பராகப் பற்பம்**

சித்தியாம் கோமேதக சித்திகள்
முத்தியாய் நின்ற முறையது சொல்லுவோஞ்
சித்தியாங் கோமே தகமதை நெய்யினிற்
பத்தியாய்க் காய்ச்சிப் பாலில் கழுவிடே. 708

கழுவி யெடுத்துக் கற்பூரங் கம்பியும்
பழுதா மூன்றும் பார்த்துச் சரியிடை
வலுவுறக் கூட்டி வாய்நீர் விட்டுமே
தொழுது நீயாட்டிச் சுண்ட வழித்திடே. 709

சுண்ட வழித்துச் சுருள் உருட்டிநீ
நன்றாய் நீஓட்டில் நாட்டி மணலிடு
சென்றது காய்ந்துச் சிவக்க புடமதில்
நின்றது வெந்து நிலைத்திடுஞ் சுண்ணமே. 710

சுண்ண மெடுத்து சுகமாய்ப் பணவிடை
பண்ணிய கலசம் பாலில் பொசித்திட
துண்ணிய தேகம் சுயவச்சிர காயமாம்
விண்ணுயர் வாசியும் விசையினில் செல்லுமே. 711

செல்லுமே வாசி தீப நுனியினில்
நல்லுறவாக நடந்துற வாடியே
அல்லும் பகலும் அலைகடல் தன்னிலே
துள்ளி நடந்து துயில்வது சுண்ணமே. 712

திண்ணமாம் புஷ்பராகத் திறமது
பண்ணி நெய்யினில் பருவாய்க் காய்ச்சியே
துண்ணிய வீரனுஞ் சூரனுஞ் சாற்றுமே
எண்ணிய நாலு மியல்பா யெடுத்திடே. 713

## வைர பற்பம்

யெடுத்திட்ட ரைத்து இதமான நீரினில்
பிடித்திடு வட்டது பேணி உலர்த்தியே
தொடுத்திடு ஓட்டில் சுத்தி மணலிடு
நடுத்தர மாக நாட்டிப் புடமிடே. 714

நாட்டிப் புடத்தில் நயமா யெடுத்திட
தீட்டிய பற்பஞ் செம்மையா தகிடுஞ்
தாட்டிக மாகச் சமத்தாய்ப் பணவிடை
தேட்டுடனே னெய்யிற் செலுத்தி அருந்திடே. 715

இருந்திடு மண்டல மென்னென்று சொல்வேன்
பரிந்திடும் பூமி பாதாளம் தோன்றிவிடும்
சொறிந்திடும் புற்பராகத் தோளி லிது
அறிந்து நீபார்த்து ஆதியைப் போற்றியே. 716

போற்று வைரம் புதுமைனயக் கேட்டிடு
சாத்தும் வைரந்தான் தனதாயெடுத்து நீ
நீற்றும் வகையும் நின்னயஞ் சொல்வேன்
பார்த்திடு வீரமும் பதிவான பூரமே. 717

பூரமுங் கம்பியும் பொதுவன வெள்ளையும்
கூறுட நாலுங் குணமா யெடுத்துநீ
சாரமாம் நீரில் தனதா யரைத்ததைப்
பார்சிறு குகையாய்ப் பருவமாய்ப் பண்ணிடே. 718

பண்ணிய குகையும் பதிவா யுலர்ந்தபின்
நுண்ணிய வைர முட்ட தாக்கியே
துண்ணிய சில்லுஞ் சுகமாய்ப் பொருந்திடே
மண்ணது பூசி வலுவாயு லர்த்திடே. 719

உலர்த்திப் புடமதில் உறுதியாய் வைத்திடு
நிலத்துடன் வைரம் நீரி வெளுத்திடும்
குலத்துடன் குகையுங் கூட்டிப் பொடித்துநீ
பிலத்துடன் குருவைப் பேணி வணங்கிடே. 720

வணங்கிய பற்பம் வாருதி நாதமாம்
இணங்கிய கலசப்பாலில் இதமுடன்
குணங்களோர் மனதாய் கூர்ந்து பணவிடை
மணங்குவிந் தன்புடன் வணங்கிப் பொசித்திடே. 721

பொசித்திடு மண்டலம் பூரண் மாகவே
வசித்திடும் தேகம் வலுவது மெத்தவாம்
சித்திடும் வாசி நடுநிலை புக்கிடுந்
திசைக்கதிக் கரசனாம் சித்தனு மாவானே. 722

**பச்சை பற்பம்**

ஆனதோர் பச்சை அதனுடன் வீரமுந்
தோண நற்பூரம் தொகுத்து மூன்றையும்
பேணச் சரியிடை பிலமா யெடுத்துநீ
பூணநீர் விட்டுப் பொருந்த அரைத்திடே. 723

அரைத்து யேதுவா யடைபோலு ருட்டியே
நிரைத்துடன் ரவியில் நிணவா யுலர்ந்தபின்
தீர்த்துட னோட்டில்ச் செம்மி மணலிடு
திறத்துடன் புடத்தில் வைத்தன லாத்திடே. 724

சாத்திய புடமது தனலாகி நின்றபின்
தேற்றிய பச்சை திறமுட னீரியே
போற்றிய பற்பம் பூரண மாகிடும்
வாத்தி யெடுத்து **வணங்கிநீ பூசியே.** 725

பூசித்து மைந்தா பூரணந் தன்னிலே
நேசித்து நீயும் நினைவாய்ப் பணவிடை
ஆசித்து அந்த அருளை வணங்கிட
மாசத்து தேகம் வலுவா யிருக்குமே. 726

இருக்குமே தேக மிளையா தொருநாளு
மருக்கும் படையி லலைந்து திரியில்
நெருக்கிய வெட்டு நேராய் பொருந்திடுஞ்
சுருக்கி பச்சை தொழிலரி தன்மையே. 727

**நீலச்சுண்ணம் வயி - சாகரிய பற்பம்**

தன்மையாம் நீலந் தானது வசியமா
முண்மையா மதனுள் ளொடுங்கிய வீரமுஞ்
செம்மையாங் கம்பியும் சேரதில் கண்டம்
தண்மையாய் நாலுஞ் சரியிடை தானெடே. 728

தானெடுத் துத்தந் தானது நீரினில்
பேணவே அரைத்துப் பெருக உருட்டி
ஊணவே ஓட்டிலுருத்தி மண் சீலைசெய்
தோண உணர்த்தி சுகமாய்ப் புடமிடே. 729

புடமது கணக்காயிப் போட்டு எடுத்திட
திடமுள்ள பூலஞ் சிவந்து வெளுத்திடும்
மடவுடன் வெளுத்து அழன்றது சுண்ணமாய்
விடமதன் கோடி வெண்சுண்ண மாகுமே. 730

சுண்ண மெடுத்துச் சுகமாய்ப் பணவெடை
திண்ணமாய் எடுத்து தேனில் செலுத்திடு
மண்டலம் உண்ணிய வாசிஓடா தொடுங்குமே
புண்ணிய மான புதுமையைக் கேட்டிடே. 731

கேட்டிடு மைந்தா கெணி யாதுலகினில்
தாட்டிக மான தன்னுயிர் பயிர்களுந்
தேட்டிமை யாகச் சேர வசியமாம்
பூட்டிய நீலம் புதுமையின் நன்மையே. 732

நன்மையாய் நின்ற நடு வைடூரியஞ்
செம்மையாய் அதனில் சேர்சிவ சத்தியும்
உண்மையாம் வீரம் உடனதி லண்டமுஞ்
தன்மையாய் அஞ்சும் சரிஎடை தூக்கிடே. 733

தூக்கிப் பொடித்து சுககண்ட நீரினில்
தாக்கி அரைத்துத் தனதாய் உருட்டிடு
பாக்கிய மாகப் பற்றிப் புடத்தினில்
வாக்கியஞ் சொல்லி வைத்தனல் மூட்டிடே. 734

## மூலிகையில் மகிழங்காய் பற்பம்

அனலது மூட்டி ஆறி யெடுத்திடு
நினைவுடன் அஞ்சும் நேராய் வெளுத்திடும்
குணமுடன் வெளுத்துக் கூறிய பற்பமாம்
மனமுடன் நீயும் வணங்கி எடுத்திடே. 735

எடுத்திடு பற்ப மியல்பாய்ப் பணவிடை
தொடுத்திடு மண்டல சூதகமா மமுரியில்
கடுத்திடும் வாசியோகங்கள் ஒரு நாளும்
முடித்திடு நடுவே நாடலும் சித்தே. 736

சித்தென்ன மைந்தா செப்புவேன் கேளு
வித்தான மூலிகை விசையாம் களங்காய்
ஒத்தாசையாக உண்ணும் பதார்த்தமும்
பத்தாசை கொண்டு பார்க்க இளிக்குமே. 737

இளிக்குஞ் சிகப்பை எடுத்துப் பொடித்துநீ
அளிக்கின்ற வீரமும் அண்டமுஞ் சேர்த்து
பளிக்கின்ற நீரில் பதிய அரைத்துமே
தொளிக்கின்ற வட்டது துவளப் பிடித்திடே. 738

பிடித்திடு ஓட்டில் பேணி மணலிடு
கடுத்திடு ரவியினில் காய்ந்து எடுத்துநீ
தொடுத்திடும் புடத்தில் தோண வெளுத்திடும்
விடுத்திடும் பற்பம் விசையான பற்பமே. 739

பற்ப மெடுத்துப் பாலில் பணவிடை
உற்ப பணமாக உளட்டுநீ மண்டலங்
கற்ப மதாகிக் காயஞ் சிவந்திடும்
அற்புத மாகி அசையாது வாசியே. 740

அசையாது வாசீயிது சிவ யோகமாய்
திசையான தீட்சை தீபந் துலங்கிடும்
வசையான லோகம் வணங்கி ஊதிட
பிசகா திருக்கும் பெருமைகள் மெத்தவே. 741

## பஞ்சபூத லவணம்

பெருமையாய் சித்து பேரு மெண்ணூரதே
உருமையாய் கண்டு உள்ளன்பு கூர்ந்திட
வறுமையைக் கண்டு மவுனந் திறப்படும்
பெருமை யினாலஞ்சு பூத மறிந்திடே. 742

அறிந்திடும் பிருதிவி ஆனதோர் சத்தியாம்
விரிந்திடும் மப்புவிசை யாம் சிவமது
நெறிந்திடுந் தேய்வு நேர்சொன்னீர் நாதமாம்
பரிந்திடு வாய்வு பால்வாய் நீரதே. 743

நீரா மாகாசம் நிறைந்திடும் விந்துவாம்
பாரான அஞ்சு பகுந்தஞ்சு பூதமாம்
சீரோ டறிந்து சேர்க்கத் திறமுள்ள
கூறான வாதம குருமுறை திண்ணமே. 744

திண்ண மாய்சுஞ் செப்பு வகையது
உண்ணி.ய செய்நீர்க் குறுதி முறையிது
செண்மையாய்க் கண்டு சேர்த்து முடிந்திடு
பொன்னி மையான பொருளது போதமே. 745

போதமாய் உப்பு பொருந்திய பூதங்கேள்
நீதமாம் பூமி நேரிந்த கல்லுப்பு
சீதமாம் அப்பு தேரிசார் சத்தியம்
வேதமாம் தோய்வு வெடி சவட்டுப்புதே. 746

உப்பான வாய்வு உடன்பச்சை வெங்காரஞ்
செப்பு மாகாசஞ் சேர்பூரம் வாலையும்
மெய்ப்பாக கூட்டி விளங்கி முடித்திட
அப்பா குருமுறை அறிந்துகொ ளுண்மையே. 747

உண்மையாம் பூமி ஒடுங்கிய தங்கமாம்
தன்மையாய அப்புத் தருவான காரீயந்
தென்மையாந் தேய்வு செப்பிய செப்புவாம்
பொன்னமையாம் வாய்வு பொருந்து யிரும்பிதே. 748

## பஞ்சலோகம்

பொருந்து மாகாசம் புகல்நாகம் ஐந்தாக
வருந்திநீ யஞ்சும் வகையாக முடித்திட
திருந்திய வாதந் திறமது மெத்தவாம்
மருந்திசைப் பார்த்து ஆதியில் நின்றிடே. 749

நின்ற பாசாணம் நிலைத்திடு பூதத்தை
விண்டிடக் கேளு விசையான பூமிதான்
கண்டிடு தொட்டி கார்முகில் சிங்கியும்
நின்றிடு பவளப் புத்து நிலமதே. 750

நிலமான அப்பு நாராங் கெவுரியுங்
குலமான வெள்ளைக் குதிரைபலக் கோமுகந்
தலமான கோழித் தலையான கெந்தியும்
நலமாமிது வெல்லாம்நாடிய அப்பிதே. 751

நாடியே தேய்வு நலமான கெந்தகந்
தேடு மனோசிலை திருவரி தாரமுங்
கூடிய வீரங் கூர்செம்புத் தொட்டியும்
பாடிய சொல்லும் பதிவான தேய்விதே. 752

பதிவான வாய்வு பகர்சார கண்டருங்
கெடியான லிங்கமும் கெடிபஞ்ச பச்சியும்
நீதியாங் கெவுரி மெத்த பாசாணமும்
விதியாஞ் சரக்கு வேண்டிய வாயுவிதே. 753

வேண்டு மாகாசம் விளங்குகிறேன் மைந்தனே
தாண்டிய சூத பாசாணந் தன்னொடு
தூண்டிய நாகந் துலங்கும் பாசாணமும்
மாண்டுகொள்ளிதுவெல்லாம் ஆகாச மென்னுமே. 754

யெண்ணு முபரச மேற்கஞ்சு பூதந்தான்
விண்ணு லகறிய விளங்கிய பூமிகேள்
துண்ணிய காரந் துலங்குஞ் சலாசத்து
பொன்னும்அப் பிரகமும் பூனாக வத்தமே. 755

**பஞ்சபூத பாசாணம் பஞ்சபூத உபாசம்**

வந்தமுடனே வருசுக் கானீர் கள்
சுத்தமப் பகஞ் சுகமான நீர்க்கல்
பத்தமுடனே பதிவா மிவை யெல்லாம்
வெற்றியாய் நின்று விளங்கிய பூதமே. 756

விளங்கிய அப்பு விசையான சங்குடன்
துலங்கு நன்றோடு சுகமுட்டை நத்தையு
மிலங்குங் கிளிஞ்சி யேலாமை தன்னோடு
பலங்க ளிதுவெல்லாம் பார்அப்புத் தானிதே. 757

பாறான தேய்வு பகர்இந்திர கோபம்
நேராம் பூரம் நிரைநாள் நிமிளையுந்
சீரா மெலும்பு செயலான கொம்புடன்
மாறா திதுவெல்லாம் மருளாத தேயுவிதே. 758

மருளாத வாயுவும் மதியான கல்மத
மிருளான கல்நார் யேரன்ன பேதியுஞ்
சுருளான ரோமஞ் சுகசாஷ்திர பேதி
குருவா மிதுவெல்லாம் குணமான வாயுவிதே. 759

குணமா யாகாசங் கூறுவோ துத்தமுஞ்
சீன மயிர்க்காந்தஞ் சேர்கெண்டகச் சிலை
இனமா காசித மிலங்கும் பாசாணமுங்
கனமாமிது வெல்லாங் காணு மாகாசமே. 760

## பஞ்சபூத ஒடுக்கம் கபால தீட்சை

காணவே அஞ்சு பூதக் கருவுகள்
தோண உபாசஞ் சூல்கார சாரமும்
பேணும் பாசாணம் பெருமையின் நீரதில்
பூணவே பஞ்ச பூத மறிந்திடே. 761

அறிந்ததைப் பூதமங்கங் கறிந்திட
திரிந்திட வாதமுஞ் சேர்வசி அஞ்சனம்
பொருந்து மிதுவெல்லாம் பூதத் தடங்கினால்
விரிந்திடுஞ் சித்துகள் வெளியில் நின்றாமே. 762

ஆடும் வரிசை அசவையைக் கேட்டிடு
தேடும் பிறுதி விசிலத் லடங்கிடும்
நாடுஞ் சிலமது நற்றீயீரக் குன்றிடும்
வாடிடுந் தீயது வாயுவிற் சென்றுமே. 763

சென்றது வாயுவுஞ் சேரு மாகாசத்தில்
பொன்றியே நின்று பொருந்த உணர்ந்திடும்
நன்றி அறிந்தால் நாடு நிகரில்லை
சுண்டென்ற ரேகஞ்சுக சித்தி யாகுமே. 764

சென்றது வாயுவுஞ் சேரு மாகாசத்தில்
போன்றியே நின்று பொருந்த உணர்ந்திடும்
நன்றிது அறிந்தால் நாடு நிகரில்லை
சுண்டென்ற தேகஞ் சுகசித்தி யாகுமே. 765

ஆகுமே சித்தி அருமை யெண்ணூரிதை
வாகுடன் பார்த்து வரிசை யறிந்திட
பாகுடன் சித்து பலித்திடு மைந்தனே
போக்கும் வரத்தும் புதுமையைக் கண்டிடே. 766

கண்ட தறிந்து கருவினில் நின்றிட
தொண்டர் களுன்னைத் தொழுது வணங்குவார்
அண்டமும் பிண்டமும் அதினிட வாடயைப்
பிண்டத்தில் கண்டு நீ பேணி யிருந்திடே. 767

இருந்திடும் பிண்டமே தென்றினை யாதே
விரிந்திடும் மூலம் வெளியான சோதியில்
பரிந்திடும் வாசி பரம பதியிது
தெரிந்த துணர்ந்து சிவயோகஞ் சென்றிடே. 768

சென்றிடு கபால தீட்சையைக் கேட்டில்
நின்றிடும் உச்சியில் நினவாய் பரியெனுஞ்
சுன்றிடும் நெத்தியிற் சுருள ஓம்என்றிடு
கண்டது கண்டத்திற் கமங் கென்றிடே. 769

அங்கென்ற மார்பில் மத்திடு உந்தியில்
சிங்கென்று வங்கென்று வணங்கி யிருந்திடு
சிங்கென்ற மூலத் திறத்தில் வலுத்திடும்
பொங்குங் கபாலம் பொருந்திய தீட்சையே. 770

பொருந்திய தீட்சையைப் புனித மாக
வருந்தி யென்னாளும் வணங்கி யிருந்திடு
திருந்திய தேகஞ் சிவகயிலாச மாம்
யிருந்திடு மந்தமே காந்த மாகவே. 771

ஆகமா யந்த அருள்சிவ சத்தியைப்
பாகமாய் நீயும் பணிந்து வணங்கியே
யேகமாய் நின்று இணங்கிய தீட்சையைத்
தாகமாய்ச் சொல்லச் சாத்து விபூதியே. 772

பூதியை மைந்தா புனிதமாய்க் கொண்டுநீ
ஆதியை நோக்கி அணிந்திடு உத்தளம்
நிதியாயேகி வெட்டி இசைத்துமே
சாதித்து மூலத் தனலை யெழுப்பிடே. 773

யெழுப்பிடு ரோகம் ரெண்டரை தன்னிலே
கழிப்பதில் பூரகம் சுருக்கதி லொன்னரை
செழிப்புடன் கண்டத்தில் சேர் அங்கமென
வழிப்படும் வாசால் வாகாய்த் திறக்குமே. 774

திறந்திடும் நிலையில் சீக்கிரம் சிம்மென
நிரந்திடும் கும்பகம் நிணர்ந்த பதிதனில்
வரந்தருந் தீபம்வானதின் தன்னிலே
சுரந்திடு மேனி போலக்காணாது பார்த்திடே. 775

பார்த்திடு வெளியில் பரம வெளிதனைக்
காத்திடும் போதில் கருவான வாசியைச்
சாத்திடும் யோகஞ் சத்தான போதமாம்
பூதத் திருந்திடும் பூரண வாசமே. 776

வாசம் நிறைந்து வளர்ஞான தேசியை
நேசமா யந்த நிலைதனில் காண
தேசம தெங்குஞ் சொல்லிலும் வருமோ
பாசம தாக பார்த்திடு குருவே. 777

குருவை யறியக் கூடுமோ மைந்தனே
கருவை யறிந்து காலது கொண்டு
திருவுரு வாகி சிறந்த அறிவினால்
அருள்வர் போத மண்டதிற் கண்டிடே. 778

அண்டத்தில் பிண்ட மடங்கிய வாரும்
பிண்டத்தில் அண்டம் பேர்கொண்ட வாருங்
கண்டத்தில் நின்ற காரணந் தன்னிலே
விண்ட வாசற்குரு விலாச மதாமே. 779

தானான விந்து தருவான பூரணமு
மூனக அந்த முகுவானக் காரணங்
கோணாமல் கண்ட குறி அறிபவர்தான்
தானான நாதன் தானவ னாமே. 780

நாதமும் விந்துவும் நடுநிலை தன்னிலே
நீதமாய் சென்று நேர்ந்துற வாகி
போதமாய் நின்ற பொருளை அறிபவர்
பேதம் கண்ட பெரிய வராகுமே. 781

ஆக மறிந்து அந்தப் பதிதன்னில்
யேக மாயந்த வீண்ருசி தள்ளியே
யேகமாய் நின்ற நின் பாசம்தான்
பாக மறிந்தவாப் பராபர மாமே. 782

மரத்தினில் வித்து மணிகொண்ட வாறு
முறத்தினில் அந்த ஒலி கொண்டது
வரத்தினில் பெற்ற அசையை யறிட
கரத்தினில் நெல்லிக் கனியென்ன லாமே. 783

கனிக்கி பலருசி காரண மானது
மணிக்கி நல்லொளிவு மாரண மானது
மனுக் கொண்ட போதமய்யர் திருவடி
செணிக்குன்ற மூலஞ் சேர்ந்தவர் குருவே. 784

குருவான தீட்சை குறியான வாறு
திருவான நந்தி செயமான வாறும்
பரியான தேசி பரமான வாறும்
கருவான மூலங் கண்டவர் முத்தரே. 785

முத்தான உப்பு மொழிவான பச்சையும்
வத்தான அப்பு வடிவான செய்கையும்
சித்திரன் காலந் தெரிகின்ற உண்மையும்
மத்தான திருவுரு அறிபவர் ஞானியே. 786

ஞானி யாரண்டம் நானே நன்மையு
மூணுநீர் பாய்ந்து ஓடின தாரையும்
வானுவீர் கெற்சிதம் வடிவான போதமும்
பேணி அறிபவர் பேர்கொண்ட நாதரே. 787

நாதமும் விந்து நடுவி லுறவாடி
போதமாய் நின்ற பூரண கற்பத்தில்
வாதம் பிரிந்து வந்தவர் ஊரின்
பேதமை யென்ன பிதற்றுவார் சித்தரே. 788

பித்தம் செணித்துப் பேர்பித்த ரானது
முத்த சிலேறும் முதலான நன்மையும்
பெற்றதோர் வாதம் பேர்கொண்ட செய்கையுஞ்
சத்துவ மூன்றுஞ் சார்ந்தவர் முத்தரே. 789

முத்திக் கொழுந்து முளைக்கின்ற வித்துக்குத்
தத்துவ மென்ன தராதர மென்ன
வித்து வுதித்த விந்தை பரிவான
சத்தியும் சிவமுந் தானாகும் அரசே. 790

தானான சித்தித் தன்மய மானது
வானாம யேசுரம் வடிவான ரூபமுங்
கோனான நாதன் குருவான செய்கையும்
மூனான தேக முகந்தவர் முத்தரே. 791

உகந்ததோர் ஆசான் உண்மை யறிபவர்
அகந்தனில் பூத்த அருளான பூமலர்
செகந்தனில் கண்டு சீராயறிபவர்
சுகந்தனில் தேசி சுகமறி வாசியே. 792

வாசி பிறந்தது வாசியில் சென்றதும்
தேசிக னான திருவுரு வானது
வாசனை யாகிப் பொருளை யறிபவர்
ராசான பதத்தை அறிபவன் தேசியே. 793

தேசியறிவான் தெரிசிக்கும் நல்லிடம்
வாசி யறிவான வடிவான காயத்தை
பேசியே னாதனை பலமா யறிபவர்
மாசில்லாத மனையறி வார்களே. 794

அறிவான கல்லை அறியாத சித்தர்கள்
வெறியாக கல்லை வேர்தலை யறியான
குறியான கல்லைக் குணமாகப் பேணிப்
பொரியென் றறிபவர் பூரண மவரே. 795

பூரண மானபுதுநில உப்புக்குக்
காரண மான கருவை யறிந்தவர்
சீருளக் கருவில் சென்றிடுங் காலத்தில்
பூரண தேகம் புகழ்கின்ற சித்தியே. 796

சித்தி நிறைந்த சிவாய நமகுரு
பித்தர்கள் போலே பெருமை யகற்றிய
உத்தம மாக உலகத் தோடொன்றியே
சுத்துஞ்சிறுவன் போல சுகபதி யாவானே. 797

ஆவனே மௌனி அவன் வெகு கவுளியா
தேவனென் றவனைத் தெரிசிக்கப் பரிசிக்கும்
பாவம் கண்றிடும் பரீபூரணம தாகும்
கோபம் அடக்க குருமொழி முத்துமே. 798

முத்து மெண்ணூறு முனைகடைப் பார்க்கப்
பற்றியும் வித்தையும் பாலித் தனுதினந்
சித்தம் பெருகி சிவஞான மோங்கிய
சுத்தமாய் தீபந் துலங்கிற்று முத்தியே. 799

துலங்கு மெண்ணூறு சுடரொளி கண்டவன்
களங்கம் கண்டு கற்பூர தீபம்போல்
விளங்கும் யோகம் விரும்பி மனது
இலங்கிய வாசியே யேகாந்த முற்றுமே. 800

மச்சமுனி யருளிச்செய்த எண்ணூறு முற்றும்

குருவே துணை

# மச்சமுனி நாயனார் 800 அந்தாதி

## அகரவரிசைப் பட்டியல்


| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| **அ** | | |
| அங்கென்ற | 116 | 770 |
| அசையாது | 112 | 739 |
| அடங்கிய | 103 | 680 |
| அடைத்திடும் குப்பிக்கஞ்சு | 37 | 243 |
| அடைத்திடுங் | 41 | 264 |
| அண்டங் | 73 | 483 |
| அண்டத்தில் | 8 | 52 |
| அண்டத்தில் பிண்ட | 117 | 779 |
| அண்டமாங் | 56 | 369 |
| அதிகச் சரக்கு | 24 | 154 |
| அதிவன்றி | 88 | 576 |
| அய்யஞ்சு | 49 | 319 |
| அருபமாம் | 74 | 484 |
| அரூபமாய் | 87 | 572 |
| அரைத்த | 64 | 421 |
| அரைத்த துருட்டி | 105 | 692 |
| அரைத்துருட்டி அளவது | 107 | 706 |
| அரைத்ததை | 63 | 416 |
| அரைத்திடு | 20 | 127 |
| அரைத்திடுஞ் | 84 | 549 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| அரைத்திடும் | 69 | 449 |
| அரைத்திடும் வில்லையை | 81 | 532 |
| அரைத்து | 109 | 724 |
| அரைப்பது | 67 | 436 |
| அரைப்பது மை போலே | 70 | 460 |
| அழுத்திக் | 64 | 419 |
| அழுத்திப் | 94 | 624 |
| அளவென்ன | 74 | 490 |
| அளன்றிடு | 91 | 601 |
| அறிந்த | 76 | 500 |
| அறிந்ததைப் | 115 | 762 |
| அறிந்திடச் | 106 | 701 |
| அறிந்திடும் | 112 | 743 |
| அறியாத | 8 | 48 |
| அறியான | 18 | 115 |
| அறிவாகச் | 10 | 65 |
| அறிவாம் | 1 | 4 |
| அறிவான | 3 | 13 |
| அறிவான கல்லை | 119 | 795 |
| அறையிட்டு | 26 | 171 |
| அன்புடன் | 85 | 559 |
| அன்புடன் | 99 | 652 |
| அனலது | 111 | 735 |
| அனைத்தையும் | 99 | 651 |

ஆ

| | | |
|---|---|---|
| ஆக | 67 | 437 |
| ஆகமயூரச் | 59 | 384 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| ஆகமறிந்து | 118 | 782 |
| ஆகமா | 116 | 772 |
| ஆகவே | 27 | 173 |
| ஆகிய | 98 | 646 |
| ஆகிய பற்ப | 106 | 699 |
| ஆகுந் | 53 | 349 |
| ஆகும் | 61 | 401 |
| ஆகுமே கார்முகி | 31 | 203 |
| ஆகுமே | 29 | 192 |
| ஆகுமே வீரத் | 33 | 215 |
| ஆகுமே கல்சுன்ன | 65 | 425 |
| ஆகுமே நாக | 66 | 432 |
| ஆகுமே சித்து | 70 | 456 |
| ஆகுமே வெள்ளி | 83 | 546 |
| ஆகுமே செந்தூரம் | 94 | 619 |
| ஆகுமே செந்தூர மருந்தில் | 94 | 623 |
| ஆகுமே சித்தி | 115 | 766 |
| ஆச்சடா | 14 | 88 |
| ஆச்சே | 30 | 194 |
| ஆட்டி வழித்து அகண்ட | 62 | 411 |
| ஆட்டி அளித்து அடை | 96 | 637 |
| ஆட்டிடுங் | 91 | 598 |
| ஆடும் | 114 | 763 |
| ஆதி | 19 | 122 |
| ஆதியந்தமே | 1 | 1 |
| ஆதியாம் | 32 | 211 |
| ஆதியில் | 6 | 34 |
| ஆதியும் | 6 | 35 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| ஆமனப் | 7 | 45 |
| ஆமாஞ் | 3 | 17 |
| ஆமென வெள்ளி | 22 | 143 |
| ஆமென அயத்தொட்டி | 29 | 190 |
| ஆமென கல்லுப்பு | 27 | 176 |
| ஆமென | 27 | 174 |
| ஆமெனப் பாசம்பசுதனை | 8 | 49 |
| ஆமெனயெண்ணூரடி | 23 | 151 |
| ஆமே | 7 | 40 |
| ஆமே அகாகரம் | 9 | 53 |
| ஆமே சிவந்தான் | 12 | 77 |
| ஆமே கல்லுப்பு நல்லுப்பு | 14 | 90 |
| ஆமே கெவுரி | 16 | 99 |
| ஆமேசாம்பிராணி | 20 | 129 |
| ஆவனே மௌனி | 120 | 798 |
| ஆன | 33 | 219 |
| ஆன செந்தூர | 84 | 554 |
| ஆன சரக்கு | 95 | 628 |
| ஆனதே | 38 | 245 |
| ஆனதோ | 70 | 462 |
| ஆனதோர் காந்த | 69 | 452 |
| ஆனதோர் பச்சை | 109 | 723 |

## இ

| | | |
|---|---|---|
| இகழாத | 48 | 316 |
| இடித்துடன் | 14 | 91 |
| இடித்துப் | 99 | 655 |
| இணங்கியே | 49 | 317 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| இருக்குங் | 82 | 535 |
| இருக்குங் கற்பத்தை | 105 | 695 |
| இருக்குமே | 78 | 516 |
| இருக்குமே தேக | 96 | 633 |
| இருக்குமே தேகமிளையா | 110 | 727 |
| இருக்கின்ற தாளக | 86 | 564 |
| இருக்குமுன் | 77 | 510 |
| இருக்குமேதேகம் | 77 | 504 |
| இருகி | 44 | 286 |
| இருகிடுந் | 91 | 602 |
| இருத்து | 74 | 486 |
| இருந்திடு | 108 | 716 |
| இருந்திடும் | 116 | 768 |
| இருப்பான் | 75 | 493 |
| இல்லையே | 4 | 18 |
| இளிக்குந் | 111 | 738 |
| இருளுரை | 82 | 538 |
| இறுகி | 45 | 294 |
| இறுகுமே | 42 | 274 |
| இறுகு கருஞ் | 51 | 334 |

ஈ

| | | |
|---|---|---|
| ஈய | 54 | 355 |

உ

| | | |
|---|---|---|
| உகந்த | 59 | 389 |
| உகந்தோர் | 119 | 792 |
| உண்ணிய | 47 | 308 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| உருக்குமிடையது | 86 | 566 |
| உருக்கு | 91 | 597 |
| உருக்குங் களங்க | 85 | 558 |
| உருக்கிடச் | 100 | 660 |
| உருக்கிய | 70 | 458 |
| உருகித் | 38 | 248 |
| உருகித் திரண்டு | 41 | 266 |
| உருட்டி | 83 | 545 |
| உருட்டிப் பதிவாய் | 103 | 677 |
| உருட்டி உலர்த்திடு | 106 | 703 |
| உருட்டிக் குகையி | 89 | 587 |
| உருட்டிய | 25 | 158 |
| உருட்டியே | 23 | 146 |
| உருளைக் | 50 | 325 |
| உண்மை | 61 | 403 |
| உண்மைக் | 59 | 385 |
| உண்மையாய்க் | 28 | 184 |
| உண்மையாஞ் | 77 | 507 |
| உண்மையா | 22 | 144 |
| உண்மையாய்ச் சுண்ணம் | 68 | 446 |
| உண்மையாம் பூமி | 113 | 748 |
| உண்மையாம் பசுவும் | 8 | 47 |
| உப்பான | 13 | 81 |
| உப்பான பூனீர் | 24 | 155 |
| உப்பான சவட்டுப்பு | 28 | 180 |
| உப்பான வாய்வு | 113 | 747 |
| உப்பில் | 28 | 182 |
| உப்பு | 53 | 350 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| உயிருடன் | 93 | 612 |
| உரைத்தார் | 10 | 61 |
| உரைத்தோர் | 9 | 54 |
| உலர்த்தி | 106 | 698 |
| உலர்த்திப் புடமதில் | 109 | 720 |
| உலர்த்திப் பொடித்து | 102 | 676 |
| உலர்த்திடும் | 66 | 434 |
| உலர்ந்திடும் | 22 | 145 |
| உள்ளி | 85 | 556 |
| உழன்று | 60 | 391 |
| உறுதி | 47 | 309 |
| உறுதிகள் | 23 | 148 |
| உறுதியாம் | 5 | 27 |
| உறுதியாய் | 86 | 562 |
| எடுத்த | 74 | 488 |
| எடுத்திட்ட | 65 | 424 |
| எடுத்திட்டமுரியில் | 74 | 485 |
| எடுத்திடு | 97 | 644 |
| எரித்திடு சாம | 41 | 265 |
| எடுத்து | 70 | 461 |
| எண்ணியகாந்த | 58 | 379 |
| எண்ணு | 47 | 307 |
| எண்ணூறுக் | 48 | 313 |
| எரித்த | 33 | 214 |
| எரித்திடக் | 25 | 163 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| எரித்திடும் | 21 | 134 |
| எரித்திடும் போதிலிளகி | 22 | 140 |
| எரித்திடும் போதி | 27 | 175 |
| எரிப்பது | 43 | 282 |
| எலும்பு | 51 | 331 |
| **ஏ** | | |
| ஏணிப் | 53 | 346 |
| **ஒ** | | |
| ஒடுங்கிய | 76 | 501 |
| ஒடுங்கிய ஆமை | 101 | 670 |
| ஒடுங்கு | 79 | 518 |
| ஒடுங்கும் | 53 | 348 |
| ஒவ்வாக் | 48 | 314 |
| ஒளிந்திடும் | 7 | 41 |
| ஒன்பதுக் | 11 | 67 |
| ஒன்றாக் | 40 | 261 |
| ஒன்றாக | 71 | 467 |
| ஒன்றாகக் கூட்டி | 103 | 682 |
| ஒன்றாய்ப் | 30 | 199 |
| ஒன்றான | 93 | 617 |
| ஒன்றி | 69 | 450 |
| **ஓ** | | |
| ஓடும் | 79 | 519 |
| ஓடுமே | 78 | 514 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| **க** | | |
| கசடற | 18 | 113 |
| கட்டிய | 104 | 685 |
| கட்டியிருக்கி | 32 | 210 |
| கட்டியுருகிக் | 34 | 224 |
| கடந்து | 73 | 479 |
| கடுக | 104 | 687 |
| கண்ட | 10 | 64 |
| கண்ட தெண்ணூருங் | 17 | 108 |
| கண்டவழித்துச் | 106 | 710 |
| கண்டதறிந்து | 115 | 767 |
| கண்டது பத்து | 62 | 407 |
| கண்டிடக் | 62 | 410 |
| கண்டிடு | 49 | 320 |
| கண்டிடு தங்கத்தின் | 56 | 367 |
| கண்டிடு லிங்கம் | 93 | 613 |
| கண்டிடு பற்பங் | 96 | 635 |
| கண்டிதமான | 104 | 684 |
| கண்டிடுந் | 6 | 37 |
| கண்டு | 61 | 402 |
| கண்டுமருந்தைச் | 99 | 657 |
| கண்டேன் | 9 | 59 |
| கதிர்வன் | 12 | 78 |
| கம்பியோ | 66 | 430 |
| கருணைப் | 52 | 340 |
| கரைத்திட் | 28 | 183 |
| கழுவி | 107 | 709 |
| கணங்கது | 83 | 542 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| களைந்திடும் | 53 | 345 |
| கற்பத்தின் | 71 | 468 |
| கறடு | 50 | 328 |
| கனிக்கு | 118 | 784 |

கா

| | | |
|---|---|---|
| காட்டுமே | 82 | 538 |
| காணவே வீரம் | 16 | 101 |
| காணவே சொர்ணப் | 44 | 283 |
| காணவே அஞ்சு | 115 | 761 |
| காணுஞ் | 80 | 525 |
| காணும் புருவக் | 51 | 337 |
| காணும் | 59 | 388 |
| காணுமே | 13 | 82 |
| காந்தம் | 57 | 372 |
| காப்பெண்ணூறு | 21 | 136 |
| காய்ச்சிட | 24 | 156 |
| காயாதி | 75 | 494 |
| கார | 22 | 139 |
| காரண | 7 | 42 |
| காரத்தின் | 56 | 365 |
| காரமுஞ் | 99 | 653 |
| காரமோ | 41 | 268 |
| காரமோடொன்றாய்க் | 45 | 292 |
| காரமோடொன்றாய்க் கதிக்க | 97 | 642 |
| காரு | 21 | 137 |
| காலமே | 78 | 512 |
| காலா | 78 | 511 |
| காலான | 9 | 55 |
| காவிய | 51 | 333 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| **கி** | | |
| கிட்ட | 50 | 330 |
| கிண்டு | 99 | 656 |
| கிராணியுஞ் | 78 | 513 |
| **கு** | | |
| குகையை | 29 | 189 |
| குட்ட | 78 | 515 |
| குடியிரு | 4 | 24 |
| குண்டலி | 9 | 58 |
| குணமாயிருநூற்று | 10 | 66 |
| குணமா | 114 | 760 |
| குணமுட | 83 | 541 |
| குருவான பீடங் | 67 | 442 |
| குருவான தீட்சை | 118 | 785 |
| குருவை | 117 | 778 |
| குருவாங் | 32 | 122 |
| குருவான முப்பூ | 13 | 85 |
| குறிக்கின்ற | 79 | 520 |
| குறிகண்ட | 80 | 526 |
| **கூ** | | |
| கூகமே | 84 | 552 |
| கூட்டி | 99 | 505 |
| கூட்டி அயச்சட்டி | 92 | 606 |
| கூட்டி யரைத்திடு | 105 | 697 |
| கூட்டிக் குழையக் | 42 | 276 |
| கூட்டிக் கவசத்தில் | 98 | 648 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| கூட்டிடு | 26 | 170 |
| கூட்டிச் | 16 | 102 |
| கூட்டிடு கெந்தியுங் | 36 | 234 |
| கூட்டிப் பொடித்து | 28 | 179 |
| கூட்டிப் பொடித்து குகையில் | 29 | 187 |
| கூட்டிப் பொடித்து குருவாய் | 30 | 197 |
| கூட்டிப் பொடித்துக் குகையாய் | 31 | 204 |
| கூட்டிப் பொடித்துக் குப்பியில் | 31 | 206 |
| கூட்டியுருகிக் | 89 | 588 |
| கூட்டி ரசமுங் | 36 | 238 |
| கூடி | 87 | 574 |

## கெ

| | | |
|---|---|---|
| கெங்கையா | 100 | 659 |
| கெந்தகப் | 38 | 246 |
| கெந்தி | 34 | 222 |
| கெந்திகற் | 59 | 386 |
| கெவுரி | 39 | 254 |

## கே

| | | |
|---|---|---|
| கேட்டு சுண்ணமு | 64 | 418 |
| கேட்டிடு கெருடப் | 99 | 662 |
| கேட்டிடுமைந்தா கெட்டியாய் | 105 | 694 |
| கேட்டிடுமைந்தா கிருபையாய் | 106 | 704 |
| கேட்டிடுமைந்தா கெணி | 110 | 732 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| **கொ** | | |
| கொண்டிரு | 100 | 664 |
| கொண்டேனே | 1 | 2 |
| **கோ** | | |
| கோடியி | 100 | 661 |
| **ச** | | |
| சத்தான | 38 | 249 |
| சத்து | 96 | 636 |
| சத்துரு | 60 | 392 |
| சத்துருத்தன்னைச் | 55 | 360 |
| சத்தியாங் | 42 | 271 |
| சமைந்து | 6 | 36 |
| **சா** | | |
| சாத்திய | 109 | 725 |
| சாம | 37 | 240 |
| சாமமெருத்தி | 16 | 104 |
| சாமமே | 32 | 207 |
| சார்ந்திடும் | 6 | 32 |
| சார | 25 | 161 |
| சாரணை | 60 | 393 |
| சாரமாஞ் | 26 | 166 |
| சாரம் | 100 | 658 |
| சாரமாம் | 37 | 242 |
| சாரமாஞ் | 15 | 94 |
| சாரமே | 48 | 316 |
| சாரமோ | 35 | 226 |
| சாரமுங் | 33 | 216 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| **சி** | | |
| சிங்கி | 36 | 233 |
| சிங்கியா | 30 | 196 |
| சிங்கியாம் | 41 | 267 |
| சித்தம் | 9 | 625 |
| சித்தான | 80 | 527 |
| சித்த | 71 | 466 |
| சித்தமாஞ் | 23 | 149 |
| சித்தான | 101 | 666 |
| சித்தி சிவமது | 52 | 341 |
| சித்திகளான | 8 | 50 |
| சித்திக்கு | 49 | 321 |
| சித்திக்கு மூலஞ் | 52 | 338 |
| சித்திய | 47 | 304 |
| சித்திக்குமந்த | 2 | 5 |
| சித்திக்கும் | 21 | 135 |
| சித்திக்கும் வேண்டியே | 26 | 169 |
| சித்திக்கும் வயிரவஞ் | 12 | 75 |
| சித்தம் | 1 | 3 |
| சித்தம் பெருகி | 71 | 469 |
| சித்தியாம் பூரணஞ் | 53 | 347 |
| சித்தியாம் | 107 | 708 |
| சித்தென்ன | 111 | 737 |
| சிந்தை | 62 | 405 |
| சிவந்த | 92 | 607 |
| சிலைவளர் | 51 | 332 |
| சிறந்த | 95 | 627 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| சிவமது | 11 | 69 |
| சிவமா | 3 | 15 |
| சிவமான | 9 | 56 |
| சிவசிவா | 68 | 445 |
| சிறக்குமே | 73 | 48 |
| **சீ** | | |
| சீலை | 42 | 273 |
| சீலைமண் செய்து சிறப்பான | 38 | 247 |
| சீலைமணி செய்து திறமாம் | 66 | 431 |
| சீலையமுத்தி | 97 | 643 |
| **சு** | | |
| சுண்ணமெடுத்து | 107 | 711 |
| சுண்ணமெடுத்துச் சுகமாய் | 110 | 731 |
| சுண்ணப் | 67 | 441 |
| சுண்ணமாம் | 45 | 291 |
| சுண்ணமாய் | 12 | 79 |
| சுண்ணமாய்க் கல்லுப்பைக் | 64 | 423 |
| சுண்ணமாய் வங்கத்தை | 66 | 435 |
| சுத்தி | 93 | 614 |
| சுத்தி தன்னோடு | 105 | 691 |
| சுத்திய | 102 | 675 |
| சுத்தர | 19 | 121 |
| சுருள | 85 | 561 |
| சுழியினில் | 61 | 399 |
| **சூ** | | |
| சூதமும் | 44 | 258 |
| சூதான | 47 | 305 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| **செ** | | |
| செந்தூர | 83 | 544 |
| செப்பிலடைக்கித் | 93 | 615 |
| செபித்திடத் | 72 | 471 |
| செம்பு | 59 | 387 |
| செம்மண் | 40 | 259 |
| செம்மையாம் | 42 | 275 |
| செம்மி | 45 | 289 |
| செய்திட்டு | 64 | 422 |
| செய்திட்டுலர்த்தி | 100 | 663 |
| செல்லுமே | 108 | 712 |
| செலுத்திப் | 68 | 443 |
| செலுத்திமிழிங்கி | 75 | 491 |
| செய்தி பாண்டத்தி | 16 | 103 |
| செய்திடுதாழிச் | 36 | 235 |
| செய்யவே | 5 | 29 |
| செயவாது | 18 | 116 |
| சென்ற | 82 | 536 |
| சென்றது | 116 | 764 |
| சென்றது வாய்வுஞ் | 115 | 765 |
| சென்றிடு | 116 | 760 |
| சென்றிடும்போது | 63 | 414 |
| **சே** | | |
| சேர்த்தே | 14 | 89 |
| சேர்த்து | 84 | 550 |
| சேர்த்து உருட்டித் | 102 | 671 |
| சேர்த்திடுஞ் | 23 | 150 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| சேர்த்திடும் ஆணை | 26 | 165 |
| சேர்த்திடுவீரத் | 89 | 589 |
| சேர்த்து பொடித்து | 15 | 97 |
| சேர்ப்பது | 15 | 93 |
| சேரு | 57 | 377 |
| **சொ** | | |
| சொல்லாத | 86 | 567 |
| சொல்லுவேன் அத்தச் | 8 | 46 |
| சொல்லுவேன் சீனந் | 13 | 86 |
| சொல்லுவேன் தொட்டியப் | 29 | 186 |
| சொல்லுவேன் செம்பில் | 84 | 551 |
| சொல்லுவார் | 17 | 110 |
| சொன்னார் | 10 | 60 |
| சொன்னார் கையப்பா | 10 | 62 |
| **ஞா** | | |
| ஞானி | 118 | 787 |
| **த** | | |
| தங்கந் | 58 | 381 |
| தங்கம் | 44 | 287 |
| தங்கமாஞ் | 83 | 543 |
| தங்கமாம் | 88 | 579 |
| தடவிப் | 86 | 563 |
| தவமாஞ் | 11 | 72 |
| தளரா | 102 | 674 |
| தளராமல் | 72 | 472 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| தன்மய | 8 | 51 |
| தன்மை | 76 | 499 |
| தன்மையாம் | 110 | 728 |
| தன்னான | 58 | 383 |
| தன்னிலை | 49 | 323 |
| தன்னிலைப்பற்றிதான் | 95 | 626 |
| தன்னோடு | 55 | 364 |
| தனலிட்டு | 35 | 228 |

**தா**

| | | |
|---|---|---|
| தாக்கிடச் | 87 | 575 |
| தாக்கு | 81 | 534 |
| தாமென வெள்ளி | 22 | 141 |
| தாமென சத்தி | 25 | 160 |
| தாமென கெந்தி | 26 | 167 |
| தாமே | 52 | 343 |
| தாரம் | 55 | 363 |
| தாரமுந் | 43 | 282 |
| தாரமுடனே | 29 | 191 |
| தாரமோடு | 34 | 223 |
| தாரமோ | 32 | 213 |
| தானவ | 36 | 237 |
| தான் | 90 | 594 |
| தானதுரெண்டாந் | 4 | 23 |
| தானது அஞ்சாந் | 5 | 26 |
| தானதை | 19 | 125 |
| தானா | 25 | 164 |
| தானாம் | 34 | 225 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| தானான | 18 | 119 |
| தானான வெள்ளி | 90 | 591 |
| தானான விந்து | 117 | 780 |
| தானான சித்தித் | 119 | 791 |
| தானெடுத் | 110 | 729 |
| தானென்ற | 20 | 132 |
| தானே | 104 | 686 |

**தி**

| | | |
|---|---|---|
| திண்ண | 112 | 745 |
| திண்மை | 56 | 370 |
| திண்ணமதாகிச் | 57 | 373 |
| திண்ணமாம் | 108 | 713 |
| திண்ணமாய் | 72 | 473 |
| திண்ணமாய் மண்டலஞ் | 76 | 502 |
| திண்ணமாய் வீரஞ் | 88 | 577 |
| திண்மையும் | 723 | 477 |
| திரட்டி | 75 | 496 |
| திரட்டி ரவியிற் | 94 | 618 |
| திருநட | 4 | 19 |
| திருவாம் | 96 | 632 |
| திறந்திடும் | 117 | 775 |
| திறமாய் | 94 | 620 |
| திறமான | 4 | 21 |

**தீ**

| | | |
|---|---|---|
| தீபக் கொழுந்து | 71 | 464 |
| தீபம் | 2 | 6 |
| தீபம் நிறைந்த | 72 | 470 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| தீபமதான | 24 | 152 |
| தீபமிலங்கு | 60 | 395 |
| தீய | 24 | 157 |
| தீயான | 37 | 241 |
| தீவினை | 96 | 634 |
| **து** | | |
| துருசு | 15 | 96 |
| துலங்கிக் கல்நார் | 104 | 690 |
| துலங்கிய | 19 | 123 |
| துலங்கு | 120 | 800 |
| துளங்குங்கௌரி | 88 | 583 |
| துலங்கிப் | 30 | 195 |
| தூக்கிப் | 111 | 734 |
| தூவிப் | 91 | 599 |
| **தெ** | | |
| தெரியும் | 107 | 705 |
| தெளித்து | 95 | 629 |
| **தே** | | |
| தேக்கு | 50 | 329 |
| தேக | 104 | 689 |
| தேகமாம் | 77 | 509 |
| தேசிகம் | 46 | 297 |
| தேசியறிவான் | 119 | 794 |
| தேசியி | 28 | 181 |
| தேர்ந்து | 102 | 673 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| **தொ** | | |
| தொட்டி | 99 | 654 |
| தொட்டிய | 55 | 359 |
| **தோ** | | |
| தோணு | 106 | 700 |
| **ந** | | |
| நடுங்கி | 101 | 665 |
| நந்திக் | 46 | 302 |
| நலியாத | 77 | 506 |
| நன்மையாய் | 111 | 733 |
| நன்மையே | 5 | 31 |
| நன்றாய்த் | 85 | 560 |
| **நா** | | |
| நாக்கு | 101 | 669 |
| நாகமாந் | 58 | 378 |
| நாகமுங் | 38 | 250 |
| நாகமும் வீரம் | 44 | 284 |
| நாட்டாத் | 61 | 404 |
| நாட்டமாஞ் | 27 | 178 |
| நாட்டிப் | 108 | 715 |
| நாடியே | 113 | 752 |
| நாதமும் விந்துவும் | 61 | 398 |
| நாதமுவிந்து | 118 | 788 |
| நாதமும் விந்துவும் | 71 | 465 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| **நி** | | |
| நிசமான | 25 | 162 |
| நிமிளை | 50 | 324 |
| நிமிளை காரியம் | 54 | 357 |
| நிர்மல | 3 | 12 |
| நில்வே | 5 | 30 |
| நிலமான | 113 | 751 |
| நிலைத்து நலச் | 56 | 166 |
| நிலையதைக் | 52 | 342 |
| நிலையா | 17 | 112 |
| நின்ற | 113 | 750 |
| நின்றிட | 12 | 339 |
| நின்றிடு | 89 | 586 |
| **நீ** | | |
| நீரா | 112 | 744 |
| நீரான | 13 | 90 |
| நீருடன் | 15 | 95 |
| நீறான | 101 | 668 |
| **நூ** | | |
| நூத்தியிரு | 51 | 336 |
| **நெ** | | |
| நெய்யுடன் | 16 | 100 |
| **நே** | | |
| நேர் | 63 | 415 |
| நேரா | 75 | 492 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| **ப** | | |
| பக்குவ | 5 | 28 |
| பச்சை | 65 | 427 |
| பச்சையாந் | 40 | 257 |
| பச்சை | 69 | 453 |
| பச்சையோடொன்றாய்ப் | 70 | 459 |
| பச்சையும் | 40 | 263 |
| பண்ணி | 101 | 667 |
| பண்ணிய | 109 | 719 |
| பண்ணியவட்டை | 68 | 444 |
| பண்பான | 39 | 253 |
| பத்திய | 82 | 539 |
| பத்தான | 79 | 522 |
| பதித்துப் | 88 | 582 |
| பதிவாய்த் | 85 | 557 |
| பதிவான | 93 | 611 |
| பதிவான வாய்வு | 113 | 753 |
| பழுத்திடும் லோகம் | 83 | 547 |
| பழுத்திடும் பற்பம் | 97 | 640 |
| பழுக்குமே | 63 | 413 |
| பற்பமெடுத்து | 90 | 590 |
| பற்பமதனிற் | 90 | 592 |
| பற்பமதுவே | 97 | 639 |
| பற்பமதனை | 104 | 688 |
| பற்பமெடுத்துப் | 12 | 40 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| **பா** | | |
| பாசம் | 7 | 44 |
| பாசாண | 31 | 205 |
| பாசாணமான | 35 | 229 |
| பாசாண உப்பு | 81 | 531 |
| பாசாணஞ் | 47 | 306 |
| பாத்திரம் | 11 | 70 |
| பாத்திடு | 20 | 131 |
| பாத்திடு | 32 | 208 |
| பாதியைச் | 19 | 120 |
| பார்சாரச் | 64 | 420 |
| பார்த்திடு | 49 | 323 |
| பார்த்திடுசூதம் | 57 | 371 |
| பார்த்திடுமேலே | 92 | 610 |
| பார்த்திடுஅஞ்சன | 92 | 605 |
| பார்த்திடுவெளியில் | 117 | 776 |
| பார்த்திடும் | 41 | 270 |
| பார்த்திடு நாகம் | 58 | 380 |
| பார்த்தன்துயிர் | 17 | 111 |
| பாரவெடியுப்பு | 54 | 358 |
| பாரான பற்பம் | 103 | 678 |
| பாரினில் மாந்தர் | 18 | 114 |
| பாரு | 63 | 412 |
| பாருதீ | 31 | 200 |
| பாரே | 9 | 57 |
| பாரேபொதிகை | 18 | 117 |
| பாவிபல | 46 | 299 |
| பாற்றிடக் காயம் | 3 | 11 |
| பாறான | 114 | 758 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| **பி** | | |
| பிடித்திடு | 111 | 739 |
| பிடித்திடும் | 88 | 578 |
| பித்தம் | 119 | 789 |
| பிலமான் | 72 | 475 |
| பிழிந்திட்டு | 73 | 480 |
| பிழைத்திட | 65 | 426 |
| பின்னிலைப் | 61 | 400 |
| **பீ** | | |
| பீங்காணி | 62 | 408 |
| **பு** | | |
| புக்கிய | 97 | 641 |
| புக்கியதாரம் | 98 | 647 |
| புக்குமே | 84 | 548 |
| புகைந்து | 95 | 630 |
| புடமதில் | 65 | 428 |
| புடமது | 110 | 730 |
| புடமது கேசமாய் | 69 | 455 |
| புடமது காட்டி | 87 | 573 |
| புடமிடத் | 87 | 570 |
| புத்தியில் | 60 | 394 |
| **பூ** | | |
| பூசித்து | 1110 | 726 |
| பூசிய | 43 | 280 |
| பூதியை | 116 | 773 |
| பூரணமான | 52 | 344 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| பூரணதீட்சை | 62 | 406 |
| பூரணமான | 120 | 796 |
| பூரணமாம் | 18 | 118 |
| பூரத்தினாலே | 15 | 98 |
| பூரமுங் | 66 | 433 |
| பூரமுங் கப்பியும் | 108 | 718 |
| **பெ** | | |
| பெருகுஞ் | 59 | 390 |
| பெருமை | 7 | 43 |
| பெருமையாய் | 112 | 742 |
| **பே** | | |
| பேணிப் | 18 | 310 |
| பேதிக்க | 16 | 105 |
| **பொ** | | |
| பொசித்திடு | 73 | 481 |
| பொசித்திடு பணவிடை | 76 | 498 |
| பொசித்திடு மண்டலம் | 109 | 722 |
| பொடித்த | 30 | 193 |
| பொடிதனைக் | 19 | 124 |
| பொடிதனையெடுத்து | 20 | 130 |
| பொடிதனைக் குகையில் | 22 | 142 |
| பொடிதனைக் குப்பியில் | 32 | 209 |
| பொடித்திட்ட | 68 | 448 |
| பொடித்திடு | 37 | 239 |
| பொடித்திடு நீரில் | 86 | 568 |
| பொடித்திடும் மருந்து | 21 | 133 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| பொரித்திடுந் | 37 | 244 |
| பொருந்து | 113 | 749 |
| பொருந்திய | 116 | 771 |
| பொருளான | 98 | 645 |
| பொருளிது | 46 | 298 |
| பொருளை | 80 | 529 |
| பொளிவாய் | 30 | 198 |
| **போ** | | |
| போதம் | 72 | 476 |
| போதம | 2 | 7 |
| போதகமாய் | 60 | 397 |
| போதமாய் | 112 | 746 |
| போற்றிய | 95 | 631 |
| போற்று | 108 | 717 |
| **ம** | | |
| மகிழ்ந்து | 81 | 530 |
| மச்சேந்திரனே | 10 | 63 |
| மண்டலங் | 87 | 571 |
| மண்டலஞ் | 30 | 128 |
| மண்ணது | 35 | 231 |
| மண்ணது செய்து | 103 | 683 |
| மண்ணிட்ட | 44 | 285 |
| மண்ணிட்டடுப்பில் | 35 | 227 |
| மண்ணிட்டுத் | 39 | 251 |
| மண்ணிடு | 33 | 217 |
| மணலிட்டு | 39 | 255 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண |
|---|---|---|
| மணலிட்டுலர்த்தி | 96 | 638 |
| மயங்க | 27 | 177 |
| மரத்தினில் | 118 | 783 |
| மருத்துவ | 6 | 38 |
| மருளாத | 114 | 759 |
| **மா** | | |
| மாட்டிப் | 89 | 584 |
| மார்க்கமதாக | 65 | 429 |
| மார்க்கமாயி | 91 | 603 |
| மாளுவான் | 17 | 109 |
| **மு** | | |
| முடித்த | 45 | 295 |
| முடித்தக் கல்லுப்புக்கு | 55 | 362 |
| முடித்திடக் | 105 | 696 |
| முத்தான | 118 | 786 |
| முத்தி | 17 | 107 |
| முத்திக் கொழுந்து | 12 | 70 |
| முத்திக் கொழுந்து முளைக்கின்ற | 119 | 790 |
| முத்தியில் | 5 | 25 |
| முத்து | 12 | 799 |
| முருக்கிய | 93 | 616 |
| முற்றி | 2 | 10 |
| முறைமை கேள் | 120 | 447 |
| முறையான | 20 | 126 |
| முறைமையான | 28 | 185 |
| முனையினில் | 21 | 138 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| மூட்டிய | **45** | 293 |
| மூடிமண் சிலை | 67 | 440 |
| மூடியே | 14 | 87 |
| மூடியோர் | 31 | 202 |
| மூலங்கல்லுப்பு | **77** | 505 |
| மூலங்கெவுரி | **88** | **581** |
| **மூலமதான்** | **3** | **14** |
| **மூலமாந்** | **77** | 508 |
| **மெ** | | |
| மெழுகதிர்ச் | **91** | 600 |
| **மை** | | |
| மையான | **92** | 608 |
| **யி** | | |
| யிறைச்சி | 60 | 396 |
| **யெ** | | |
| யெடுத்த | 39 | 256 |
| யெடுத்திட்ட | 108 | 714 |
| யெடுத்திடச் | 63 | 417 |
| யெடுத்திடு | 33 | 218 |
| யெடுத்திடுபெப்பை | 39 | 252 |
| யெடுத்திடுவில்லை | 90 | 596 |
| யெடுத்திடு கட்டியை | 43 | 278 |
| யெடுத்திடு குப்பியும் | 45 | 290 |
| யெடுத்திடும் வட்டை | 98 | 649 |
| **யெண்ணு** | 114 | 756 |
| **யெண்ணுங்** கருந்தாளை | 79 | 521 |
| **யெண்ணூறு** | 48 | 311 |
| யெரிட்டெடுத்து | 36 | 232 |
| யெரித்திட உப்பு | 26 | 168 |
| யெரித்திடு சாம | 34 | 221 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| யெரித்திடு சாமம் | 43 | 277 |
| யெரித்திடு தாழியியல்பாய் | 36 | 236 |
| யெரிந்த | 40 | 260 |
| யெல்லையே | 85 | 555 |
| யெழுப்பிடு | 116 | 774 |
| யெழும்பிய | 54 | 353 |
| யெளிதாகப் | 92 | 604 |
| யென்னமோவென | 57 | 375 |
| **யே** | | |
| யேகசெந்தூர | 87 | 569 |
| யேகாந்த | 48 | 312 |
| யேகாந்தமாயிருக்கும் | 88 | 50 |
| யேமத்தை | 71 | 463 |
| **யோ** | | |
| யோகஞ் | 11 | 73 |
| யோகத்துக் காதி | 24 | 153 |
| **ர** | | |
| ரதியே | 41 | 269 |
| ரவியிலுலர்ந்த | 103 | 681 |
| **ல** | | |
| லவணம் | 49 | 318 |
| **லி** | | |
| லிங்க | 42 | 272 |
| லிங்கம் | 81 | 533 |
| லிங்கமுடனே | 54 | 352 |
| லிங்கமும் | 34 | 220 |
| லிங்கமுடன் | 40 | 268 |
| **வ** | | |
| வங்கங் கிளிஞ்சி | 57 | 376 |
| வங்கம் | 51 | 335 |
| வட்டது | 13 | 84 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| வட்டது ஓட்டில் | 86 | 565 |
| வடித்த தைலம் | 74 | 489 |
| வண்டானைக் | 50 | 327 |
| வணங்கி | 79 | 523 |
| வணங்கி புடமது | 76 | 497 |
| வணங்கிப் பணவிடை | 107 | 707 |
| வணங்கிய | 109 | 721 |
| வந்தமுடனே | 113 | 756 |
| வர்கங் | 50 | 326 |
| வர்ணம் | 43 | 279 |
| வல்லாரை | 73 | 478 |
| வலுக்குங் | 103 | 679 |
| வழலையோ | 27 | 173 |
| வழித்திடு | 84 | 553 |
| வழித்துத் | 69 | 454 |
| வழியென்ன | 92 | 609 |
| வளகி | 54 | 354 |
| வளமதில் | 62 | 409 |
| வளமையைக் | 79 | 524 |
| வளர்ந்திடு | 89 | 585 |
| வறுத்திடும் | 94 | 622 |
| **வா** | | |
| வாச | 4 | 20 |
| வாசம் | 116 | 777 |
| வாசி | 72 | 479 |
| வாசி பிறந்தது | 118 | 793 |
| வாதம் | 80 | 528 |
| வாமம் | 6 | 33 |
| வாயுடன் | 2 | 9 |
| வார்த்திடும் | 7 | 39 |
| வாரம் | 76 | 503 |
| வாரான | 70 | 457 |

| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் | பாட்டு எண் |
|---|---|---|
| வாலைதன் பூசை | 11 | 68 |
| வாலையைக் | 11 | 71 |
| **வி** | | |
| வித்தாம் | 40 | 262 |
| விளங்கிய | 114 | 757 |
| விளைவான | 14 | 92 |
| **வீ** | | |
| வீசுமே | 23 | 147 |
| வீரத்துடனே | 31 | 201 |
| வீரநல் | 57 | 374 |
| வீரமாய் | 106 | 702 |
| வீரமும் | 35 | 230 |
| வீரமே | 17 | 106 |
| வீரான | 35 | 361 |
| வீருடன் | 67 | 439 |
| **வெ** | | |
| வெள்ளை | 56 | 368 |
| வெளுத்திடும் | 105 | 693 |
| **வே** | | |
| வேண்டுமோவாசம் | 114 | 754 |
| வேண்டுமே | 13 | 83 |
| வேதித்த | 58 | 382 |
| வேதைக்கு | 67 | 438 |
| வேதைச் | 98 | 650 |
| **தை** | | |
| வைத்திட்டெடுக்க | 1வ2 | 672 |
| **வை** | | |
| வைப்புச் | 47 | 303 |